# Padasalai's

## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th


- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC


செலக்சன்
தமிழ்
9
யாதும் ஊரே...
யாவரும் கேளிர்...

# செலக்சன்

## 9

# தமிழ்

## ஒன்பதாம் வகுப்பு

**புதிய பாடத்திட்டத்தின்படி வடிவமைக்கப்பட்டது**

94430 43338
94430 46662
0452- 2623530
வெளியிடுபவர்
**அன்பு நிலையம்**
15, புதுமண்டபம், மதுரை-625001.

**விலை ₹200**

Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பொருளடக்கம்


| வ.எண் | பொருண்மை / இயல் | | பாடத்தலைப்புகள் | ப. எண். |
|---|---|---|---|---|
| | | | மனப்பாடப்பகுதி | 4 |
| 1. | | 1 | திராவிட மொழிக்குடும்பம் | 9 |
| | மொழி | 1.1 | தமிழோவியம் | 12 |
| | அமுதென்று பேர் | 1.2 | தமிழ்விடு தூது* | 15 |
| | | 1.3 | வளரும் செல்வம் | 18 |
| | | 1.4 | தொடர் இலக்கணம் | 20 |
| 2. | இயற்கை, | 2 | நீரின்றி அமையாது உலகு | 36 |
| | சுற்றுச் சூழல் | 2.1 | பட்டமரம் | 40 |
| | உயிருக்கு வேர் | 2.2 | பெரியபுராணம் * | 42 |
| | | 2.3 | புறநானூறு * | 45 |
| | | 2.4 | தண்ணீர் | 48 |
| | | 2.5 | துணைவினைகள் | 50 |
| 3. | | 3 | ஏறுதழுவுதல் | 61 |
| | பண்பாடு | 3.1 | மணிமேகலை | 65 |
| | உள்ளத்தின் சீர் | 3.2 | அகழாய்வுகள் | 70 |
| | | 3.3 | வல்லினம் மிகும் இடங்கள் | 73 |
| | | 3.4 | மொழியை ஆள்வோம் | 76 |
| | | 3.5 | மொழியோடு விளையாடு | 79 |
| | | 3.6 | திருக்குறள் * | 83 |
| 4. | அறிவியல் தொழில்நுட்பம் | 4 | இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும் | 90 |
| | எட்டுத்திக்கும் | 4.1 | ஓ, என் சமகாலத் தோழர்களே! | 93 |
| | சென்றிடுவீர் | 4.2 | உயிர்வகை* | 95 |
| | | 4.3 | விண்ணையும் சாடுவோம் | 98 |
| | | 4.4 | வல்லினம் மிகா இடங்கள் | 102 |


* இக்குறியிடப்பட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பொருளடக்கம்



| வ.எண் | பொருண்மை / இயல் | | பாடத்தலைப்புகள் | ப. எண். |
|---|---|---|---|---|
| 5. | | 5 | கல்வியிற் சிறந்த பெண்கள் | 112 |
| | கல்வி | 5.1 | குடும்ப விளக்கு | 116 |
| | கசடற மொழிதல் | 5.2 | சிறுபஞ்சமூலம் * | 121 |
| | | 5.3 | வீட்டிற்கோர் புத்தகசாலை | 123 |
| | | 5.4 | இடைச்சொல் – உரிச்சொல் | 126 |
| 6. | கலை, அழகியல் | 6 | சிற்பக்கலை | 141 |
| | புதுமைகள் | 6.1 | இராவண காவியம் * | 146 |
| | கலை பல வளர்த்தல் | 6.2 | நாச்சியார் திருமொழி | 152 |
| | | 6.3 | செய்தி | 155 |
| | | 6.4 | புணர்ச்சி | 158 |
| | | 6.5 | திருக்குறள் * | 167 |
| 7. | நாகரிகம், தொழில், வணிகம், நாடு, சமூகம் | 7 | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு | 175 |
| | அரசு, நிருவாகம் | 7.1 | சீவக சிந்தாமணி * | 178 |
| | வாழிய நிலனே | 7.2 | முத்தொள்ளாயிரம் * | 182 |
| | | 7.3 | மதுரைக்காஞ்சி | 184 |
| | | 7.4 | சந்தை | 188 |
| | | 7.5 | ஆகுபெயர் | 192 |
| 8. | அறம், தத்துவம், சிந்தனை | 8 | பெரியாரின் சிந்தனைகள் | 205 |
| | என்தலைக் கடனே | 8.1 | ஒளியின் அழைப்பு | 209 |
| | | 8.2 | தாவோ தே ஜிங் | 212 |
| | | 8.3 | யசோதர காவியம் * | 214 |
| | | 8.4 | மகனுக்கு எழுதிய கடிதம் | 217 |
| | | 8.5 | யாப்பிலக்கணம் | 219 |
| | மனிதம், ஆளுமை அன்பென்னும் | 9 | விரிவாகும் ஆளுமை | 230 |
| | அறனே | 9.1 | அக்கறை * | 234 |
| | | 9.2 | குறுந்தொகை | 237 |
| | | 9.3 | தாய்மைக்கு வறட்சி இல்லை | 239 |
| | | 9.4 | அணியிலக்கணம் | 242 |



* இக்குறியிடப்பட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மனப்பாடப் பகுதி

### தமிழ்விடு தூது

*தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான*
*முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்*
*உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்*
*விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்*
*குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு*
*உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்*
*வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்*
*சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே*

### பெரியபுராணம்

*காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு*
*மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை*
*கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன*
*நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்*

**– சேக்கிழார்**

### புறநானூறு

*நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!*
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்;*
*உணவெனப் படுவது நிலத்தொடு நீரே ;*
*நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசினோரே !*

**– குடபுலவியனார்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**திருக்குறள்**

1. *மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்*
*தகுதியான் வென்று விடல்.*
2. *எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்*
*ஆன்ற பெருமை தரும்.*
3. *ஒஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை*
*ஆஅதும் என்னு மவர்.*

**– திருவள்ளுவர்**

**ஓ, என் சமகாலத் தோழர்களே!**

*அறிவியல் என்னும் வாகனம் மீதில்*
*ஆளும் தமிழை நிறுத்துங்கள்*
*கரிகா லன்தன் பெருமை எல்லாம்*
*கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்.*

*ஏவும் திசையில் அம்பைப் போல*
*இருந்த இனத்தை மாற்றுங்கள்*
*ஏவு கணையிலும் தமிழை எழுதி*
*எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்*

**– வைரமுத்து**

**உயிர்வகை**

*ஒன்றறி வதுவே உற்றறி வதுவே*
*இரண்டறி வதுவே அதனொடு நாவே*
*மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே*
*நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே*
*ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே*
*ஆறறி வதுவே அவற்றொடு மனனே*
*நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.*

**– தொல்காப்பியர்**

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிறுபஞ்சமூலம்**

*பூவாது காய்க்கும் மரம் உள ; நன்று அறிவார்,*
*மூவாது மூத்தவர், நூல் வல்லார் ; தாவா,*
*விதையாமை நாறுவ வித்துஉள ; மேதைக்கு*
*உரையாமை செல்லும் உணர்வு.*

***– காரியாசான்***

**இராவண காவியம்**

**மருதம்**

*கல்லிடைப் பிறந்த ஆறும்*
*கரைபொரு குளனும் தோயும்*
*முல்லைஅம் புறவில் தோன்று*
*முருகுகான் யாறு பாயும்*
*நெல்லினைக் கரும்பு காக்கும்*
*நீரினைக் கால்வாய் தேக்கும்*
*மல்லல்அம் செறுவில் காஞ்சி*
*வஞ்சியும் மருதம் பூக்கும்.*

***– புலவர் குழந்தை***

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## திருக்குறள்

1. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.
2. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.
3. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.
4. சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

– திருவள்ளுவர்

## சீவக சிந்தாமணி

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

– திருத்தக்கதேவர்

## முத்தொள்ளாயிரம்

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட (து) எனவெரீஇப்பு ள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**யசோதர காவியம்**

*ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக*
*போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக*
*நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக*
*காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே"*

**அக்கறை**

*சைக்கிளில் வந்த*
*தக்காளிக் கூடை சரிந்து*
*முக்கால் சிவப்பில் உருண்டது*
*அனைத்துத் திசைகளிலும் பழங்கள்*
*தலைக்கு மேலே*
*வேலை இருப்பதாய்க்*
*கடந்தும் நடந்தும்*
*அனைவரும் போயினர்*
*பழங்களை விடவும்*
*நசுங்கிப் போனது*
*அடுத்த மனிதர்கள்*
*மீதான அக்கறை*

*– கல்யாண்ஜி*

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# செலக்சன்
# 9 தமிழ்

**இயல் ஒன்று** அமுதென்று பேர்

உரைநடை உலகம்

**இயல் ஒன்று** 1. திராவிட மொழிக் குடும்பம்

## மதிப்பீடு

**பலவுள் தெரிக.**

**1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| குழு – 1 | குழு – 2 | குழு – 3 | குழு – 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| ------- | -------- | -------- | ---------- |

அ) 1–வங்கம், 2–மானு, 3–தாழிசை, 4–பிறவினை
ஆ) 1–தாழிசை, 2–மானு, 3–பிறவினை, 4–வங்கம்
இ) 1–பிறவினை, 2–தாழிசை, 3–மானு, 4–வங்கம்
ஈ) 1–மானு, 2–பிறவினை, 3–வங்கம், 4–தாழிசை

**விடை: அ) 1–வங்கம், 2–மானு, 3–தாழிசை, 4–பிறவினை**

---

**குறுவினா.**

**1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்தியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது ?**

★ நாங்கள் பேசும் மொழி தமிழ்.
★ தமிழ் மொழி இந்திய மொழிக் குடும்பத்தில் உள்ள தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.

---

**சிறுவினா.**

**1. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை ? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

**அ) திராவிட மொழிகளின் பிரிவுகள் :**

1. தென் திராவிட மொழிகள்
2. நடுத் திராவிட மொழிகள்
3. வட திராவிட மொழிகள்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**ஆ) தமிழ் மொழியின் சிறப்பியல்புகள் :**

1. தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடையது தமிழ் மொழியாகும்.
2. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது.
3. ஏனைய திராவிட மொழிகளைவிட தனித்த இலக்கணவளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும்.
4. பிறமொழித் தாக்கம் மிகவும் குறைந்தேக் காணப்படும்.

---

**2. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது ?**

**தமிழ்** – மூன்று **மலையாளம்** – மூணு

**தெலுங்கு** – மூடு **கன்னடம்** – மூரு **துளு** – மூஜி

---

**3. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது ?**

★ பிறமொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.

★ தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகத் தமிழ் மொழி விளங்கிவருகிறது.

★ தமிழ்மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது.

★ பழையன கழிதலும் புதியன புகுதலும் என்னும் பண்பிற்கேற்ப காலத்திற்கேற்பப மாற்றங்களைத் தமிழ் மொழி புதுப்பித்துக்கொள்கிறது.

(எ.கா) பேஸ் புக் என்பது முகநூல்
வாட்ஸ்அப் என்பது புலனம்

---

**நெடுவினா.**

**1. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

**முன்னுரை :** திராவிட மொழிகளுக்குள் மூத்த மொழியாய் விளங்குவது தமிழ். எத்தகைய காலமாற்றத்திலும் எல்லாப் புதுமைகளுக்கும் ஈடுகொடுத்து இயங்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு.

**ஹீராஸ்பாதிரியார் :** தமிழ் என்ற சொல்லிலிருந்து தான் திராவிடா என்ற சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஹீராஸ்பாதிரியார் இம்மாற்றத்தைத் தமிழ் – தமிழா – தமிலா – டிரமிலா – ட்ரமிலா – த்ராவிடா – திராவிடா என்று விளக்குகின்றார்

**பிரான்சிஸ் எல்லிஸ் :** இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் எனப் பெயரிட்டார்.

**திராவிட மொழிகளின் பொதுப் பண்புகள்:**

★ திராவிட மொழியின் சொற்கள் பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருக்கும்.

★சான்று :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ★தமிழ் | மலையாளம் | தெலுங்கு | குரூக் | பர்ஜி | தோடா |
| ★கண் | கண்ணு | கன்னு | ஃகன் | கெண் | கொண் |

திராவிட மொழிகளில் எண்ணுப் பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன.

(எ.கா)

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | துளு |
|---|---|---|---|---|
| மூன்று | மூணு | மூடு | மூரு | மூஜி |

**தமிழின் தனித்தன்மைகள் :**

★ தமிழ் மொழி, திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.

★ இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.

★ **குறில் நெடில் வேறுபாடு :** திராவிட மொழிகளில் உயிர் எழுத்துக்களில் உள்ள குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

★ குறில் : அடி, வளி; நெடில் : ஆடி, வாளி

★ **பால்வேறுபாடு :** திராவிட மொழிகளில் ஆண்பால், பெண் பால் என்ற பகுப்பு ஒருமையில் காணப்படுகிறது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



★ தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம் பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன.

★ **முடிவுரை :** தமிழ்மொழி மூலத் திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது. அத்துடன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாக விளங்கி வருகிறது.

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. இந்தியநாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது என்று குறிப்பிட்டவர் .........**

அ) கே.வி.சுப்பையா ஆ) ச.அகத்தியலிங்கம் இ) வி.இராமசாமி ஈ) பரோ

**விடை: ஆ) ச.அகத்தியலிங்கம்**

**2. திராவிடம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் ..................**

அ) அகத்தியலிங்கம் ஆ) எமினோ இ) ஹீராஸ் ஈ) குமரிலபட்டர்

**விடை: ஈ) குமரிலபட்டர்**

**3. திராவிட மொழிகளின் எண்ணிக்கை ................**

அ) 40 ஆ) 20 இ) 45 ஈ) 28 **விடை: ஈ) 28**

**4. இந்தியா, மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாளில் இடம் பெற்றுள்ள மொழி ..................**

அ)இந்தி ஆ) மழையாளம் இ) உருது ஈ) தமிழ் **விடை: ஈ)தமிழ்**

**5. இந்தியவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை..................**

அ)5000 ஆ) 28 இ) 1300 ஈ) 30 **விடை: இ)1300**

**6. 1856 ல் " திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் ..................**

அ)எபினோ ஆ) எல்லீஸ் இ) கால்டுவெல் ஈ) ஹோரக்கன்

**விடை: இ) கால்டுவெல்**

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

**1. மலையாள மொழியில் பாலறி கிளவிகள் இல்லை.**

எந்த மொழியில் பாலறி கிளவிகள் இல்லை ?

**2. பிறமொழித் தாக்கம் குறைந்துக் காணப்படும் மொழி தமிழ்.**

பிறமொழித் தாக்கம் குறைந்துக் காணப்படும் மொழி எது ?

**சிறுவினா.**

**1. கால்டுவெல் தமிழ்மொழியைப் பற்றி குறிப்பிடுவன யாவை ?**

★ தமிழ் வடமொழியின் மகளன்று.
★ அது தனிக்குடும்பத்திற்கு உரிய மொழி.
★ சமஸ்கிருதக் கலப்பின்றி அது தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி.
★ தமிழுக்கும் இந்தியாவின் பிறமொழிகளுக்கு தொடர்பு இருக்கலாம் எனக் கால்டுவெல் குறிப்பிட்டார்.

**2. எந்தெந்த நாடுகளில் தமிழ்மொழி பேசப்படுகின்றது ?**

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜித்தீவு, தென் ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா.

**3. பணத்தாளில் தமிழ்மொழி இடம்பெற்றுள்ள நாடுகள் எவை ?**

1. மொரிசியஸ்
2. இலங்கை

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கற்பவை கற்றபின்...**

**1. உங்கள் பெயருக்கான விளக்கம் தெரியுமா ? உங்கள் பெயரும் உங்கள் நண்பர் பெயரும் தனித் தமிழில் அமைந்துள்ளதா ? கண்டறிக.**

**அமுதன்** : அமுதம் போன்று இனிமையானவன்
**நீதியரசன்** : பாகுபாடின்றி உண்மையான நீதி கூறுபவன்
**கலையரசி** : பல கலைகளைக் கற்றவள்
**மலர்விழி** : மலரைப் போன்ற அழகிய, விரிந்த கண்களை உடையவள்

---

**2. பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ்மொழியின் வேர்ச்சொற்கள், வடிவ மாற்றம் பெறுகின்றன என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

**(எ.கா) செய் – செய்தாள், செய்கிறாள், செய்வாள், செய்து, செய்த, செய்வீர், செய்கிறோம்**
வா – வந்தான், வருகிறான், வருவான், வந்து, வந்த, வருவீர், வருகிறோம்.
படி – படித்தான், படிக்கிறான், படிப்பான், படித்து, படித்த, படிப்பீர், படிக்கிறோம்.

---

## கவிதைப்பேழை

## இயல் ஒன்று 1.1. தமிழோவியம்

### மதிப்பீடு

**பலவுள் தெரிக.**

1. ***காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே !***
***காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே !...*** **இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்–**

அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை
ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு
ஈ) மோனை, முரண், அந்தாதி

**விடை: இ) மோனை, எதுகை, இயைபு**

---

**குறுவினா.**

**1. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.**

***"காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே ! எந்தக்***
***காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே !"***

★ உலகம் தோன்றியக் காலத்திற்கு முன் பிறந்த முதல் மொழி தமிழே.
★ எக்காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே.

---

**2. அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள் – இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை ?**

★ சங்க இலக்கியங்களில் அகநானூறு, குறுந்தொகை போன்ற இலக்கியங்கள் அகப்பொருளை விளக்குகின்றன.
★ புறநானூறு, பதிற்றுப் பத்து போன்ற இலக்கியங்கள் புறப்பொருளை விளக்குகின்றன.
★ அவை அவ்வாறு அமைந்ததை இலக்கணங்கள் விவரிக்கின்றன.
சான்று : தொல்காப்பியம், நன்னூல்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிறுவினா.**

**1.புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் – உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

★ இசையை வெளிப்படுத்தும் வீணையை விரலால் மீட்டாமல் விரலை மடக்கிக் கொண்டு வீணையில் இசை வெளிப்படவில்லை என்று வீணையைக் குறைசொல்பவன் போல், தமிழ் மொழியை குறை சொல்வதை விட்டு விட்டு புதுவடிவெடுத்து தமிழை வளர்ப்போம்.

கல்வித் தமிழ் வழியில் கற்பேன்.
தமிழ்மொழியில் எழுதப்பட்ட நூல்களைப் படித்து, அதன் கருத்துகளைப் பரப்புவேன்.
பிற மொழி சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பேன்.
தமிழ்வளர, தமிழர் வளரவேண்டும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன்.

---

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**பலவுள் தெரிக.**

**1. தமிழோவியம் பாடலை இயற்றியவர் ..................**

அ) சேக்கிழார் ஆ) ஈரோடு தமிழன்பன்
இ) தமிழ்ஒளி ஈ) வைரமுத்து **விடை: ஆ) ஈரோடு தமிழன்பன்**

**2. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடியவர் ?**

அ) பாரதிதாசன் ஆ) காரியாசான்
இ) ஈரோடு தமிழன்பன் ஈ) பாரதியார் **விடை: ஈ) பாரதியார்**

**3. இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் என்று கூறியது ?**

அ) பிங்கல நிகண்டு ஆ) புறநானூறு
இ) தமிழ்விடு தூது ஈ) மதுரைக் காஞ்சி **விடை: அ) பிங்கல நிகண்டு**

**4. உலகத் தாய்மொழி நாள் .............**

அ) மார்ச் 1 ஆ) டிசம்பர் 20
இ) பிப்ரவரி 16 ஈ) பிப்ரவரி 21 **விடை: ஈ) பிப்ரவரி 21**

---

**குறுவினா.**

**1. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் எவை ?**

1. இலங்கை 2. சிங்கப்பூர்

---

**இலக்கணக்குறிப்பு தருக :**

**1. எத்தனை எத்தனை, விட்டு விட்டு – இது எவ்வகைத் தொடர்கள் ஆகும்.**

விடை : அடுக்குத் தொடர்கள்

**2. ஏந்தி என்பதன் இலக்கணக்குறிப்பு............ ஆகும்.** விடை : வினையெச்சம்

**3. காலமும் என்பதன் இலக்கணக்குறிப்பு.......... ஆகும்** விடை: ஆ) முற்றும்மை

**4. வளர்ப்பாய் என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்............., ............ ஆகும்.**

**விடை :**

| | | |
|---|---|---|
| வளர்ப்பாய் | – | வளர் + ப் + ப் + ஆய் |
| வளர் | – | பகுதி |
| ப் | – | சந்தி |
| ப் | – | எதிர்கால இடைநிலை |
| ஆய் | – | முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி |

---

**ஈரோடு தமிழன்பன் குறிப்பு தருக.**

**ஆசிரியர் குறிப்பு :**

| | |
|---|---|
| **பெயர்** | : ஈரோடு தமிழன்பன் |
| **பிறந்த தேதி** | : 28.09.1940 |
| **பிறப்பிடம்** | : ஈரோடு மாவட்டத்திலுள்ள சென்னிமலை |
| **இயற்பெயர்** | : ந.ஜெகதீசன் |
| **இயற்றிய நூல்கள்** | : தமிழோவியம் |
| **கவிதை நூல்கள்** | : ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ |
| **விருது** | : "வணக்கம் வள்ளுவ" என்னும் கவிதை நூலுக்கு 2004 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது. |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்பவை கற்றபின்....

**1. பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் இரண்டு மணித்துளிகள் வகுப்பறையில் பேசுக.**

★ இயல், இசை, நாடகம் என மூன்றாய்ச் சிறந்து விளங்கும் முத்தமிழை முதலில் வணங்குகிறேன்.

★ அவையோர் அனைவருக்கும் என் காலை வணக்கம்.

★ தொன்மையும் இலக்கண இலக்கிய வளம் உடையது தமிழ்மொழி. தமிழ்மொழி தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்று தனித்தியங்கும்.

★ திராவிட மொழிகளுள் பிற மொழித்தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.

★ தமிழ் மொழி, திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.

★ ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளமும், சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழேயாகும்.

★ திராவிட மொழிக் குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்றது.

---

**2. கவிதையைத் தொடர்க.**

*அன்னை சொன்ன மொழி*
*ஆதியில் பிறந்த மொழி*
*இணையத்தில் இயங்கும் மொழி*
*ஈடிலாத் தொன்மை மொழி*
*உலகம் போற்றும் மொழி*
*ஊர் கூடி வியக்கும் மொழி*
***எட்டுத் திசையிலும் பரவும் மொழி***
***ஏணியாய் நிற்கும் மொழி***
***ஐம்பூதங்களாலும் அழியா மொழி***
***ஒற்றுமையை வளர்க்கும் மொழி***
***ஓங்கும் புகழை தந்திடும் மொழி***
***ஔவை வளர்த்த மொழி***
***அஃதே எங்கள் தமிழ் மொழி***

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

இயல் ஒன்று

## கவிதைப்பேழை

## 1.2 தமிழ் விடு தூது

### மதிப்பீடு

**பலவுள் தெரிக.**

**1. தமிழ்விடு தூது ...................... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.**

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல் **விடை: இ) சிற்றிலக்கியம்**

**2. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.**

அ) ............. இனம் ஆ) வண்ணம் .................

இ) ................ குணம் ஈ) வனப்பு ..................

(i) மூன்று, நூறு, பத்து, எட்டு (ii) எட்டு, நூறு, பத்து, மூன்று

(iii) பத்து, நூறு, எட்டு, மூன்று (iv) நூறு, பத்து, எட்டு, மூன்று

**விடை: (i) மூன்று, நூறு, பத்து, எட்டு**

**3. <u>அழியா</u> வனப்பு, <u>ஒழியா</u> வனப்பு, <u>சிந்தா</u> மணி– அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு –**

அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

**விடை: ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

---

**குறுவினா.**

**1. கண்ணி என்பதன் விளக்கம் யாது ?**

★ இரண்டு கண்களைப் போல் இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.

★ அதேபோல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

---

**நெடுவினா.**

**1.தூது அனுப்பத் தமிழே சிறந்தது – தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.**

**<u>தூது அனுப்பத் தமிழ் விடு தூது காட்டும் காரணங்கள் :</u>**

**முன்னுரை :** அமிழ்தினும் மேலான விடுதலைத் தரும் கனியாகவும், இயல், இசை, நாடகம் என மூன்றாய்ச் சிறந்து விளங்கும் தமிழாகவும், அறிவால் உண்ணப்படும் தேனாகவும் தமிழ் விளங்குகிறது.

**பாவினங்கள்:** குறவஞ்சி, பள்ளு என்ற சிற்றிலக்கிய நூல்களை பாடிப் புலவர்கள் சிறப்புக் கொள்கின்றனர். தமிழ் அவற்றைப் படிக்க எடுத்துக் கொடுக்கிறது. அதனால் தமிழுக்கு தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவகைப் பாவினங்களிலும் உறவு உள்ளது.

**சிந்தாமணி :** பாவின் திறம் அனைத்தும் கைவரப்பெற்று (பொருந்தி நின்று )சிந்தா (கெடாத) மணியாய் இருக்கும்.

**தமிழ் குணங்கள் :** வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள் கூட சத்துவம் (அமைதி), இராசசம் (போர்), தாமசம் (சோம்பல்) என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள். ஆனால், தமிழோ செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக்குணங்களையும் பெற்றுள்ளது.

**வண்ணத்தமிழ் :** மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்திற்கும் மேல் இல்லை. ஆனால் தமிழோ புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நவரசத் தமிழ் :** நாவிற்கு பொருந்தும் உணவின் சுவைகள் ஆறு. ஆனால் தமிழோ செவிகளுக்கு விருந்தளிக்கும் வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை என்னும் ஒன்பது (நவரச) சுவைகளைப் பெற்றுள்ளது

**அழகுத் தமிழ் :** மக்களுக்கு அழியாத அழகு ஒன்றே ஒன்றுதான். ஆனால் தமிழோ நீங்காத அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு முதலிய எட்டு அழகுகளைப் பெற்றுள்ளது.

**முடிவுரை :** இவ்விதம் அனைத்துச் சிறப்புகளையும் தமிழ் பெற்றுள்ளதால் தூது அனுப்ப தமிழே சிறந்தது.

---

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. வனப்பு என்னும் சொல்லின் பொருள் .................**

அ) போர் ஆ) சோம்பல் இ) செறிவு ஈ) அழகு **விடை: ஈ) அழகு**

**2. தமிழ் விடு தூது நூலை 1930 இல் பதிப்பித்தவர் ....................**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) உ.வே.சா ஈ) தெ.பொ. மீனாட்சி சுந்தரம்

**விடை: இ) உ.வே.சா**

---

**இலக்கணக்குறிப்பு தருக.**

1. முத்திக்கனி – என்பதன் இலக்கணக்குறிப்பு ..... ஆகும் **விடை : உருவகம்**
2. தெள்ளமுது – என்பதன் இலக்கணக்குறிப்பு ..... ஆகும் **விடை : பண்புத்தொகை**
3. குற்றமிலா – என்பதன் இலக்கணக்குறிப்பு ..... ஆகும் **விடை : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**
4. நா – என்பதன் இலக்கணக்குறிப்பு ..... ஆகும் **விடை : ஓரெழுத்து ஒருமொழி**
5. செவிகள் உணவான – என்பதன் இலக்கணக்குறிப்பு ..... ஆகும் **விடை : நான்காம் வேற்றுமைத்தொகை**
6. சிந்தாமணி – என்பதன் இலக்கணக்குறிப்பு ..... ஆகும் **விடை : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

---

**இலக்கணக்குறிப்பு தருக.**

**1. கொள்வார் – என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்– ஆகும்**

**விடை :** கொள்வார் – கொள் + வ் + ஆர்

கொள் – பகுதி

வ் – எதிர்கால இடைநிலை

ஆர்– பலர்பால் வினைமுற்று விகுதி

---

**2. உணர்ந்த – என்பதன் பகுபத உறுப்பிலக்கணம் –**

உணர்ந்த – உணர் + த் (ந்) + த் + அ

உணர் – பகுதி

த் – சந்தி

த் – ந் ஆனது விகாரம்

த் – இறந்த கால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**குறுவினா.**

**1. தூது அனுப்பும் பொருட்களை எழுதுக.**

அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சு, வண்டு, தென்றல்.

**2. தமிழ் விடு தூது நூல் குறிப்பு தருக.**

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | தமிழ் விடு தூது |
| **வேறுபெயர்கள்** | : | 'வாயில் இலக்கியம்', 'சந்து இலக்கியம்' |
| **மையக்கருத்து** | : | காதலைக் கூறி வருமாறு தமிழ் மொழியைத் தூது அனுப்புதல் |
| **இயற்றப்பட்டது** | : | கலிவெண்பாவால் |
| **கண்ணிகள்** | : | 268 |
| **பதிப்பித்தவர்** | : | உ.வே.சா |
| **பதிப்பித்த ஆண்டு** | : | 1930 |

## கற்பவை கற்றபின்....

**1. நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ்மொழி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்றை எழுதுக.**

**உரை:** அவையோர் அனைவருக்கும் வணக்கம்!

நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ்மொழியே ஆகும். அத்தகைய தமிழ்மொழியிலிருந்து "உணவே மருந்து" என்ற தலைப்பில் சில கருத்துகளை உங்களோடு உரையாட விரும்புகிறேன்.

"உண்டி முதற்றே உலகு" என்பது நாமறிந்த உண்மை. மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவு. தமிழகத்து உணவு தொன்றுதொட்டு மருத்துவ முறையில் சமைக்கப்படுகிறது. வெப்பநாடான நமது நாட்டுச்சமையலுக்கு புலுங்கலரிசியே ஏற்றது.

மஞ்சள்: அன்றாடச் சமையலில் கூட்டுவனவற்றுள் மஞ்சள்நெஞ்சிலுள்ள சளியை நீக்கும்.

கொத்தமல்லி: பித்தத்தைப் போக்கும்

மிளகு: தொண்டைக் கட்டை நீக்கும்.

சீரகம்: வயிற்றுச் சூட்டைத் தணிக்கும்.

தேங்காய்: நீர்க்கோவையை நீக்கும்.

இத்தகைய உணவினை உண்டால் உடலுக்கு நோய் என்பதே வராது. நீண்ட ஆயுளோடு நலமாய் வாழலாம் என்பதை உணர்த்த உதவிய தமிழ்மொழியே ! வாழ்க என்று மனமுவந்து கூறி, எனதுஉரையை முடிக்கிறேன். நன்றி! வணக்கம் !

**2. படித்துத் திரட்டுக.**

***"காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்***
***மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்***
***போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி***
***நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க"***

***– கவியோகி சுத்தானந்த பாரதியார்.***

**இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.**

1. குண்டலகேசி, 2. வளையாபதி, 3. சீவக சிந்தாமணி
4. மணிமேகலை, 5. சிலப்பதிகாரம், 6. சூளாமணி
7. திருக்குறள்



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



விரிவானம்

## இயல் ஒன்று 1.3 வளரும் செல்வம்

**குறுவினா.**

**1. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.**

1. சாப்ட்வேர் (Software) – மென்பொருள்
2. ப்ரௌசர் (Browser) – உலவி
3. க்ராப் (Crop) – செதுக்கி
4. சைபர்ஸ்பேஸ் (Cyberspace) – இணையவெளி
5. லேப்டாப் (Laptop) – மடிக்கணினி

---

**சிறுவினா.**

**1. சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது ?**

| தமிழ் மொழி | | கிரேக்க மொழி |
|---|---|---|
| 1. கலன் | – | கலயுகோய் |
| 2. நாவாய் | – | நாயு |
| 3. தோணி | – | தோணீஸ் |

---

**2. வளரும் செல்வம் – உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச்சொற்களைத் தொகுத்து அவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

| | | |
|---|---|---|
| 1. சாப்ட்வேர் | – | மென்பொருள் |
| 2. ப்ரௌசர் | – | உலவி |
| 3. க்ராப் | – | செதுக்கி |
| 4. கர்சர் | – | ஏவி அல்லது சுட்டி |
| 5. சர்வர் | – | வையக விரிவு வலை வழங்கி |
| 6. ஃபோல்டர் | – | உறை |
| 7. சைபர்ஸ்பேஸ் | – | இணையவெளி |
| 8. லேப்டாப் | – | மடிக்கணினி |

---

**கூடுதல் வினாக்கள் விடைகள் :**

**சிறுவினா.**

**1. நம் தமிழ்மொழி நிலைத்திருக்க நாம் என்ன செய்யவேண்டும் ?**

1. தமிழில் உள்ள தத்துவம், அரசியல் ஆகிய துறைகளின் சிந்தனைகளை எல்லாம் பிற மொழிகளுக்குக் கொண்டு செல்லவேண்டும்.

2. வளர்ந்து வரும் மருத்துவம், பொறியியல், கணினி, விண்வெளி போன்ற பிற துறைகளின் பதிவுகள் எல்லாம் உடனுக்குடன் நம் மொழிக்குக் கொண்டுவரவேண்டும்.

3. நம் மொழியில் புதிய புதிய சொல்வளம் பெருகவேண்டும்.

---

**நெடுவினா.**

**1. கணினிச் சொற்களை ஆங்கிலத்திலிருந்து ஏன் தமிழில் மாற்றவேண்டும் ?**

★ வேற்றுமொழிச் சொற்களை எளிதாக நாம் நினைவில் வைத்துக்கொள்ள நேரத்தைச் செலவிட வேண்டும்.

★ நம் சிந்தனை வேகத்தையும் இது மட்டுப்படுத்தும்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



★ சொற்கள் அந்தந்த மொழி பேசுவோரின் பேச்சுறுப்புகளுக்கு ஏற்ப அமைந்தவை. அவற்றை நாம் பேசும்போது ஒலித்திரிபு ஏற்பட்டுப் பொருள் மயக்கம் உண்டாகும். கேட்போர்க்குப் பொருள் புரியாத நிலை ஏற்படும்.
★ வேற்று மொழிச் சொற்களின் எண்ணிக்கை மிகுதியாகும்.
★ எனவே அறிவியல், கலைச் சொற்களை தமிழில் மாற்றவேண்டும்.

## கற்பவை கற்றபின்...

**1. நீங்கள் நாள்தோறும் வகுப்பறையில் மிகுதியாகப் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டு, அவற்றில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்களை அறிந்து எழுதுக.**

| சொற்பட்டியல் | பிறமொழிச் சொற்கள் | நிகரான தமிழ்ச்சொற்கள் |
|---|---|---|
| வகுப்பு, புத்தகம், பிளாக் போர்டு, பேனா, பென்சில், நோட்டு | ப்ளாக் போர்டு (Black Board) | கரும்பலகை |
| | வகுப்பு (Class) | வகுப்பறை |
| | புத்தகம் (Book), | பாடநூல் |
| | பேனா (Pen), | மசி எழுதுகோல், தூவல் |
| | பென்சில் (Pencil) | வரைகோல் |
| | நோட்டு (Note) | குறிப்பேடு |
| | ஸ்கேல் (Scale) | அளவுகோல் |
| | ஜியாமென்ரி பாக்ஸ் (Geomentric Box) | கணித வடிவியல் பெட்டி, பேழை |
| | ஹோம்வொர்க் (Homework) | வீட்டுப்பாடம் |
| | கிளாஸ் டீச்சர் (Class Teacher) | வீட்டுப்பாடம் |
| | பிரசென்ட் (Present) | வருகை |
| | லேட் (Late) | தாமதம் |
| | பேக் (Bag) | பை |

**2. உரையாடலை நிறைவு செய்க. அவற்றுள் இடம்பெறும் பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப் படுத்துக.**

**அருண் :** ஹலோ ! நண்பா ! **(வணக்கம் ! நண்பா !)**

**நளன் :** **<u>உன்னைப் பார்த்து பல வருடங்கள் ஆகியதே ?</u>**

**அருண் :** ஆமாம் ! டென் இயர்ஸ் ஆச்சு இல்லையா ?

**(ஆமாம் ! பத்து வருடங்கள் கடந்துவிட்டது (ஆயிற்று) இல்லையா ?)**

**நளன் :** ஆமாம். நான் இப்ப மல்ட்டி நேஷனல் கம்பெனி ஒன்றில் பிராஜக்ட் மேனேஜரா இருக்கேன். நீ ?

**(ஆமாம். நான் இப்ப பன்னாட்டு தேசிய நிறுவனம் ஒன்றில் திட்ட மேலாளராக இருக்கேன். நீ ?)**

**அருண் :** **<u>நான் மன்னர் கல்லூரியில் முதுகலைத் தமிழ் படிக்கிறேன்.</u>**

**நளன் :** அந்த காலேஜ்ல தான் என் தம்பி பஸ்டு இயர் படிக்கிறான்.

**(அந்தக் கல்லூரியில்தான் என் தம்பி முதலாம் ஆண்டு படிக்கிறான்.)**

**அருண் :** **<u>சரி, நான் பார்த்துக்கொள்கிறேன்.</u>**

**நளன் :** பை ! பை ! **(வருகிறேன் ! வருகிறேன் !)**

**(விடை பெறுகிறேன்)**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

கற்கண்டு

இயல் ஒன்று

## 1.4 தொடர் இலக்கணம்

மதிப்பீடு

**குறுவினா.**

**1. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

★ செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை செய்வினை ஆகும்.

★ செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை செயப்பாட்டு வினை ஆகும்.

| துணை வினைகள் | செய் வினை | செயப்பாட்டு வினை |
|---|---|---|
| 1. பாடு | பாட்டுப் பாடுகிறாள் | பாட்டு அவளால் பாடப்பட்டது |
| 2. பெறு | பரிசு பெற்றான் | பரிசு அவனால் பெறப்பட்டது |

**2. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.**

1. வீணையோடு வந்தாள் – செய்தித் தொடர்
2. கிளியே பேசு – கட்டளைத் தொடர்

**சிறுவினா.**

**1. தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.**

| தன் வினை | பிற வினை |
|---|---|
| எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும். | எழுவாய் ஒரு வினையைச் செய்யவைத்தால் அது பிறவினை எனப்படும். |
| (எ.கா) அவன் திருந்தினான்<br>அவர்கள் நன்றாகப் படித்தனர் | (எ.கா) அவனைத் திருந்தச் செய்தான்<br>தந்தை மகனை நன்றாகப் படிக்கவைத்தார்<br>பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார் |

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. பந்து உருண்டது ................. வினை **விடை: தன்வினை**
2. அப்பா சொன்னார் ...............தொடர் **விடை: செய்வினைத் தொடர்**
3. தோசை வைக்கப்பட்டது................தொடர் **விடை: செய்யப்பாட்டு வினைத் தொடர்**

**குறுவினா.**

**1. எழுவாய் என்றால் என்ன ?**

எட்வர்டு வந்தான்.

இந்தச் சொற்றொடரில் பெயர்ச்சொல் எட்வர்டு என்பதாகும். இந்தச் சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லையே எழுவாய் என்கிறோம்

**2. பயனிலை என்றால் என்ன ?**

கனகாம்பரம் பூத்தது.

இந்தச் சொற்றொடரில் வினைச்சொல், பூத்தது. இந்த வினைச் சொல்லே பயனிலை ஆகும். ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தைப் பயனிலை என்கிறோம்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**3. தோன்றா எழுவாய் என்றால் என்ன ?**

படித்தாய்.

இந்தத் தொடரில் படித்தாய் என்பது பயனிலை. நீ என்னும் எழுவாய் வெளிப்படையாகத் தெரியவில்லை. இதைத் தோன்றா எழுவாய் என்று கூறுகிறோம்.

---

**4.வினைப் பயனிலை என்றால் என்ன ?**

நான் வந்தேன்.

இத்தொடரில் வினைமுற்று பயனிலையாக வந்தது. இது வினைப் பயனிலை எனப்படும்.

---

**5. பெயர்ப் பயனிலை என்றால் என்ன ?**

சொன்னவள் கலா.

இங்கு கலா என்னும் பெயர்ச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது பெயர்ப்பயனிலை எனப்படும்.

---

**6. வினாப் பயனிலை என்றால் என்ன ?**

விளையாடுபவன் யார் ?

இங்கு யார் என்னும் வினாச் சொல் பயனிலையாக வந்துள்ளது. இது வினாப்பயனிலை எனப்படும்.

---

**7. பெயரடை என்றால் என்ன ?**

நல்ல நூல்ஒன்று படித்தேன்.

இத்தொடரில் நல்ல என்னும் சொல், எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லுக்கு அடையாக வருகிறது. இவ்வாறு அமைவதனைப் பெயரடை என்கிறோம்.

---

**8. வினையடை என்றால் என்ன ?**

மகிழ்நன் மெல்ல வந்தான்.

இத்தொடரில் மெல்ல என்னும் சொல், வந்தான் என்னும் வினைப் பயனிலைக்கு அடையாக வருகிறது. இதை வினையடை என்கிறோம்.

---

**9. பகுபதம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?**

பதம் (சொல்) இரு வகைப்படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும். பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும். இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.

---

**10. பகுபத உறுப்புகளின் வகைகள் யாவை ?**

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்

| | |
|---|---|
| பகுதி (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும் ; வினைச் சொல்லில் ஏவலாகவும், பெயர்ச்சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும். |
| விகுதி (இறுதிநிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும். |
| இடைநிலை | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| சந்தி | பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும் ; பெரும்பாலும் பகுதிக்கும் இடை நிலைக்கும் இடையில் வரும். |
| சாரியை | பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும் ; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| விகாரம் | தனி உறுப்பு அன்று ; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி : எ.கா தருக.

ஊரன் – ஊர் வரைந்தான் – வரை நடிகன் – நடி மடித்தார் – மடி
பார்த்தான் – பார் மகிழ்ந்தாள் – மகிழ்

விகுதி : எ.கா தருக.

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன் |
| படுகிறாள் | ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பெற்றார் | ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| உண்டோம் | ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஓம் |
| செய்தாய் | ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| பாரீர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் |
| அழகிய, பேசும் | அ, உம் – பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| வந்து, தேடி | உ, இ – வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு,... |

இடைநிலைகள் : எ.கா தருக.

| | | |
|---|---|---|
| வென்றார் | ற் – இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன் |
| உயர்கிறான் | கிறு – நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |
| புகுவான், செய்கேன் | வ், க் – எதிர்கால இடைநிலைகள் | ப், வ், க் |
| பறிக்காதீர் | ஆ – எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச், ஞ் – பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

சந்தி : எ.கா தருக.

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த் – சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய் – உடம்படுமெய் சந்தி | ய், வ் |

சாரியை : எ.கா தருக.

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் – சாரியை | அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் |

கூடுதல் வினா.

**எழுத்துப்பேறு என்றால் என்ன ?**

பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் "த்" மட்டுமே வரும். சாரியை இடத்தில் "த்" வந்தால் அது எழுத்துப்பேறு.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**வந்தனன் என்பதன் பகுபத உறுப்பிலக்கணம் :**

வந்தனன் – வா (வ) + த் (ந்) +த் +அன் +அன்
வா – பகுதி ("வ" ஆனது விகாரம்)
த் (ந்) – சந்தி ("ந்" ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
அன் – சாரியை
அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

**செய்யாதே என்பதன் பகுபத உறுப்பிலக்கணம் :**

செய்யாதே – செய் + ய் + ஆ + த் + ஏ
செய் – பகுதி
ய் – சந்தி
ஆ – எதிர்மறை இடைநிலை
த் – எழுத்துப்பேறு
ஏ – முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி

---

**தமிழ் எண்கள் அறிவோம்.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | க0/ ய |

**தமிழ் எண்களில் எழுதுக.**

| பன்னிரண்டு | பதின்மூன்று | நாற்பத்து மூன்று | எழுபத்தெட்டு | தொண்ணூறு |
|---|---|---|---|---|
| கஉ | கங | சங | எஅ | கூ0 |

---

**கற்பவை கற்றபின்....**

**1. தொடர்களை மாற்றி உருவாக்குக.**

அ) பதவியைவிட்டு நீக்கினான் – இத்தொடரைத் தன்வினைத் தொடராக மாற்றுக.

**விடை: பதவியை விட்டு நீங்கினான்**

ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர் – இத்தொடரைப் பிற வினைத் தொடராக மாற்றுக.

**விடை: மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்**

இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே – இத்தொடரை செய்வினைத் தொடராக மாற்றுக.

**விடை: தமிழ்த்தேனை உண்டனர்**

ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுத்துள்ளனர் – இத்தொடரை செயப்பாட்டு வினைத் தொடராக மாற்றுக.

**விடை: திராவிட மொழிகள் மூன்று மொழிக்குடும்பங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன**

உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார் – இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக.

**விடை: நிலவன் சிறந்த பள்ளியில் –காரணவினை படிப்பித்தார் – பிறவினை**

---

**2. சொற்களைத் தொடர்களாக மாற்றுக.**

**அ) மொழிபெயர் – தன்வினை, பிறவினைத் தொடர்களாக.**

இளங்கோ மொழி பெயர்த்தான் – தன்வினைத் தொடர்
இளங்கோ மொழி பெயர்ப்பித்தான் – பிறவினைத் தொடர்

**ஆ) பதிவுசெய் – செய்வினை, செயப்பாட்டு வினைத்தொடர்களாக.**

அகிலன் வருகையைப் பதிவு செய்தான் – செய்வினைத் தொடர்
வருகை, அகிலனால் பதிவு செய்யப்பட்டது – செயப்பாட்டு வினைத் தொடர்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**இ) பயன்படுத்து – தன்வினை, பிறவினைத் தொடர்களாக.**
ரேவதி பாடநூலைப் பயன்படுத்தினாள் – தன்வினைத் தொடர்
ரேவதி பாடநூலைப் பயன்படுத்துவித்தாள் – பிறவினைத் தொடர்

**ஈ) இயங்கு – செய்வினை, செயப்பாட்டு வினைத் தொடர்களாக**
வளவன் மிதிவண்டி இயக்கினான் – செய்வினைத்தொடர்
வளவனால் மிதிவண்டி இயக்கப்பட்டது – செயப்பாட்டு வினைத்தொடர்

---

**3. பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.**
**(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களை, நம்மை, வாழ்வியல் அறிவை)**
அ) தமிழ் .................... கொண்டுள்ளது. **விடை :** தமிழ் **செவ்விலக்கியங்களைக்** கொண்டுள்ளது
ஆ)நாம் .................... வாங்க வேண்டும்.
**விடை :** நாம் **தமிழிலக்கிய நூல்களை** வாங்கவேண்டும்
இ) புத்தகங்கள் .................... கொடுக்கின்றன.
**விடை :** புத்தகங்கள் **வாழ்வியல் அறிவைக்**கொடுக்கின்றன
ஈ) நல்ல நூல்கள் .................... நல்வழிப்படுத்துகின்றன.
**விடை :** நல்ல நூல்கள் **நம்மை** நல்வழிப்படுத்துகின்றன

---

**4. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.**
**(நல்ல, பெரிய, இனிய, கொடிய)**
அ) எல்லோருக்கும் .................... வணக்கம். **விடை :** எல்லோருக்கும் **இனிய** வணக்கம்.
ஆ)அவன் .................... நண்பனாக இருக்கிறான். **விடை :** அவன் **நல்ல** நண்பனாக இருக்கிறான்
இ) .................... ஓவியமாக வரைந்து வா. **விடை :** **பெரிய** ஓவியமாக வரைந்து வா
ஈ) .................... விலங்கிடம் பழகாதே. **விடை :** **கொடிய** விலங்கிடம் பழகாதே

---

**5. பொருத்தமான வினையடைகளைத் தேர்வு செய்க.**
**( அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக )**
அ) ஊர்தி .................... சென்றது. **விடை :** ஊர்தி **மெதுவாகச்** சென்றது
ஆ)காலம் .................... ஓடுகிறது. **விடை :** காலம் **வேகமாக** ஓடுகிறது
இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை .................... காட்டுகிறது.
**விடை :** சங்க இலக்கியம் வாழ்க்கையைஅழகாகக் காட்டுகிறது
ஈ) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் ................. காட்டு.
**விடை :** இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் **பொதுவாகக்** காட்டு.

---

**6. அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.**
**அ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். (வினாத்தொடராக மாற்றுக)**
**விடை :** நம் முன்னோர் எத்தகைய வாழ்வு நடத்தினர் ?

**ஆ) இசையின்றி அமையாது பாடல். (உடன்பாட்டுத் தொடராக மாற்றுக)**
**விடை :** இசையோடு அமைவது பாடல்

**இ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா ? (கட்டளைத் தொடராக மாற்றுக)**
**விடை :** நீ இதைச் செய்

---

**7. வேர்ச்சொற்களை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.**
**அ) தா (உடன்பாட்டு வினைத் தொடர், பிறவினைத் தொடர்)**
**விடை :** தா – செல்வி புத்தகத்தைத் தந்தாள் **– உடன்பாட்டு வினைத்தொடர்**
தா – செல்வி புத்தகத்தைத் தருவித்தாள் **– பிறவினைத் தொடர்**
**ஆ) கேள் (வினாத் தொடர்)**
**விடை :** கேள் – கேட்டது யார் ? **– வினாத் தொடர்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**இ) கொடு (செய்தித் தொடர், கட்டளைத் தொடர்)**

**விடை :**

| | | |
|---|---|---|
| கொடு | அன்பு தண்ணீர் கொடுப்பான் | **– செய்தித் தொடர்** |
| | அன்பு தண்ணீர்க் கொடு | **– கட்டளைத் தொடர்** |

**ஈ) பார் (செய்வினைத் தொடர், செயப்பாட்டுவினைத் தொடர், பிறவினைத் தொடர்)**

**விடை :**

| | | |
|---|---|---|
| பார் | கவிதா உரை பார்த்தாள் | **– செய்வினைத் தொடர்** |
| | உரை கவிதாவால் பார்க்கப்பட்டது | **– செயப்பாட்டு வினைத் தொடர்** |
| | கவிதா உரை பார்ப்பித்தாள் | **– பிறவினைத் தொடர்** |

---

**8. சிந்தனை வினா.**

**அ) அவை யாவும் இருக்கின்றன.**

**அவை யாவையும் இருக்கின்றன.**

**அவை யாவும் எடுங்கள்.**

**அவை யாவையும் எடுங்கள்.**

**அவை யாவற்றையும் எடுங்கள்**

**மேற்கண்ட சொற்றொடர்கள் சரியானவையா ? விளக்கம் தருக.**

**விடை : மேற்கண்ட சொற்றொடர்களில் சரியானவை :**

அவை யாவையும் இருக்கின்றன.

அவை யாவற்றையும் எடுங்கள்.

விளக்கம் : அவை – பன்மை ; யாவையும் – பன்மை

**மேற்கண்ட சொற்றொடர்களில் தவறானவை :**

அவை யாவும் இருக்கின்றன.

அவை யாவும் எடுங்கள்.

அவை யாவையும் எடுங்கள்.

**விளக்கம் :** அவை – பன்மை ; யாவும் – ஒருமை

---

**ஆ) நீங்கள் ஒரு நாளிதழில் பணிபுரிகிறீர்கள், அங்குப் புதிய வார இதழ் ஒன்று தொடங்கவிருக்கிறார்கள். அந் நாளிதழில் விளம்பரம் தருவதற்குப் பொருத்தமான சொற்றொடர்களை வடிவமைத்து எழுதுக.**

***சுதேசி வார இதழ்***

ஜீன் முதல் வெள்ளி தோறும் உங்கள் கைகளில் தவழ இருக்கிறது.

வாங்கிப் படியுங்க.....

விளம்பரம் கொடுத்து ஆதரியுங்க.......

***குறைந்த விலை நிறைந்த அறிவு !***

**இ) சொற்றொடர் வகைகளை அறிந்து, அவை எவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுகின்றன என்பதைப் பதிவு செய்க.**

**பயன்பாட்டுத் தொடர்கள்**

| | | |
|---|---|---|
| அப்துல் நேற்று வந்தான் | – | **விடை :** *தன்வினைத் தொடர்* |
| அப்துல் நேற்று வரவழைத்தான் | – | **விடை :** *பிறவினைத் தொடர்* |
| கவிதா உரை படித்தாள் | – | **விடை :** *செய்வினைத் தொடர்* |
| உரை கவிதாவால் படிக்கப்பட்டது | – | **விடை :** *செயப்பாட்டுவினைத் தொடர்* |
| குமரன் மழையில் நனைந்தான் | – | **விடை :** *உடன்பாட்டுவினைத் தொடர்* |
| குமரன் மழையில் நனைந்திலன் | – | **விடை :** *எதிர்மறைவினைத் தொடர்* |
| என் அண்ணன் நாளை வருவான் | – | **விடை :** *செய்தித் தொடர்* |
| எவ்வளவு உயரமான மரம் ! | – | **விடை :** *உணர்ச்சித் தொடர்* |
| உள்ளே பேசிக்கொண்டிருப்பவர் யார் ? | – | **விடை :** *வினாத் தொடர்* |
| பூக்களைப் பறிக்காதீர் | – | **விடை :** *கட்டளைத் தொடர்* |
| அவன் மாணவன் | – | **விடை :** *பெயர்ப் பயனிலைத் தொடர்* |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**ஈ) வந்திருப்பவர்கள் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் இத்தொடர் ஆங்கிலத்திலிருந்து நேரடியான தமிழ் மொழிபெயர்ப்பாக இருந்தாலும் மொழி மரபை இத்தொடரில் பேணுகிறோமா ?**

இத் தொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இந்த வரிசையில் வரவில்லை. வந்திருப்பவர்கள் அனைவரும் இருக்கைகளில் அமருமாரு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**கலைச்சொல் அறிவோம்**

| | | |
|---|---|---|
| **உருபன்** | – | *Morpheme* |
| **ஒலியன்** | – | *Phoneme* |
| **ஒப்பிலக்கணம்** | – | *Comparative Grammar* |
| **பேரகராதி** | – | *Lexicon* |

## இயல் ஒன்று 1. 5 மொழியை ஆள்வோம் !

**படித்துச் சுவைக்க.**

***விறகுநான்; வண்டமிழே! உன்னருள் வாய்த்த***
***பிறகுநான் வீணையாய்ப் போனேன்; – சிறகுநான்***
***சின்னதாய்க் கொண்டதொரு சிற்றீசல்; செந்தமிழே!***
***நின்னால் விமானமானேன் நான்!***
***தருவாய் நிழல்தான் தருவாய்; நிதம்என்***
***வருவாய் எனநீ வருவாய்; – ஒருவாய்***
***உணவாய் உளதமிழே! ஓர்ந்தேன்; நீ பாட்டுக்***
***கணவாய் வழிவரும் காற்று!***

***– கவிஞர் வாலி***

**மொழிபெயர்க்க.**

1. ***Linguistics*** - மொழியியல்
2. ***Literature*** - இலக்கியம்
3. ***Philologist*** - கலையிலக்கிய ஆர்வலர்
4. ***Polyglot*** - பன்மொழியாளர்
5. ***Phonologist*** - ஒலியனில் வல்லுநர்
6. ***Phonetics*** - ஒலிபியல்

**அடைப்புக்குள் உள்ள சொற்களை பொருத்தமான வினைமுற்றாக மாற்றி கோடிட்ட இடங்களில் எழுதுக.**

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ...............(திகழ்)

**விடை:** இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் **திகழ்கிறது**

2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ...............(கலந்துகொள்)

**விடை:** வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் **கலந்துகொள்வாள்**

3. உலகில் மூவாயிரம் மொழிகள் ...............(பேசு)

**விடை:** உலகில் மூவாயிரம் மொழிகள் **பேசப்படுகின்றன**

4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ...............(செல்)

**விடை:** குழந்தைகள் அனைவரும் சுற்றுலா **செல்கின்றனர்**

5. தவறுகளைத் ...............(திருத்து)

**விடை:** தவறுகளைத் **திருத்தவேண்டும்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**வடிவம் மாற்றுக : பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம்பெறும் அறிவிப்பாக மாற்றுக.**

மருதூர் அரசு மேனிலைப்பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப் பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த"உள்ளங்கை உலகம்" என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜூன் திங்கள், பிற்பகல் 3 : 00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் இன்சுவை நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

**அறிவிப்பு**

**நூல் வெளியீட்டு விழா**

| | | |
|---|---|---|
| **நாள்** | – | 21 ஜூன் திங்கள் |
| **நேரம்** | – | பிற்பகல் 3.00 மணி |
| **இடம்** | – | விழா அரங்கம், அரசு மேனிலைப்பள்ளி, மருதூர் |
| **நூல்** | – | "உள்ளங்கை உலகம்" |
| **நூலாசிரியர்** | – | மாணவி. பூங்குழலி – மருதூர்ப் பள்ளி |
| **நூல் வெளியீடு மற்றும் சிறப்புரை** | – | கின்னஸ் சாதனை படைத்த நம் பள்ளியின் முன்னாள் மாணவர் கவிஞர் இன்சுவை |

மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

தலைமை ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி
மருதூர்.

---

**தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.**

**1. இளமையில் கல்வி ........................** **2. சித்திரமும் கைப்பழக்கம் ..............................**

**3. கல்லாடம் படித்தவரோடு ...................** **4. கற்றோர்க்குச் சென்ற ................................**

**விடை:**

1. இளமையில் கல்வி **சிலைமேல் எழுத்து**
2. சித்திரமும் கைப்பழக்கம் **செந்தமிழும் நாப்பழக்கம்**
3. கல்லாடம் படித்தவரோடு **சொல்லாடாதே**
4. கற்றோர்க்குச் சென்ற **இடமெல்லாம் சிறப்பு**

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கடிதம் எழுதுக.**

**உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.**

நண்பனுக்குக் கடிதம்

12 கச்சேரி தெரு,
திண்டுக்கல்
தேதி .................

அன்புள்ள நண்பனுக்கு,

~~உன் உயிர் நண்பன் எழுதும் கடிதம். நானும் என் குடும்பத்தாரும் நலம். அதுபோல நீயும் உன்~~ குடும்பமும் நலமா ? என் பிறந்த நாளுக்கு அனுப்பிய வாழ்த்து மடலும், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணன் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூலும் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி.

பல கதைகளின் தொகுப்பாக இந்நூல்அமைந்துள்ளது. விலங்குகளின் வாழ்க்கை முறையும், அவை எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் அவை அதிலிருந்து எவ்வாறு மீண்டெழுகின்றது. மனிதர்கள் தரும் பிரச்சனைகளில் இருந்து எப்படி விலங்குகளை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பதை இக்கதைகள் விளக்கி நிற்கின்றது. நீதிகள் பல இக்கதைகளில் பொதிந்துள்ளது. நீயும் இப்புத்தகத்தைப் படித்துப் பார். உன்னுள்ளும் மாற்றம் ஏற்படும். மற்றவை நேரில்.

இப்படிக்கு,
உன் நண்பன்
சீராளன்

| உறைமேல் முகவரி | |
|---|---|
| பெறுநர். க.கதிரவன்<br>வ.உ.சி. தெரு,<br>வடகரை,<br>பெரியகுளம்,<br>தேனி மாவட்டம். | அஞ்சல் தலை |

**நயம் பாராட்டுக.**

***விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்***
***விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்***
***பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்***
***புல்வெளியில், நல்வயலில், விலங்கில் புள்ளில்***
***தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்***
***தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,***
***அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்***
***அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே !***

***– ம.இலெ. தங்கப்பா***

**<u>முன்னுரை</u> :** இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகத் திகழ்பவர் ம.இலெ.தங்கப்பா அவர்கள். இனிய சொற்களால் இனிய கவிதைகளை பாடுவதில் வல்லவர். இயற்கை அழகை நம் கண்முன்பே படம் பிடித்துக் காட்டும் இக்கவிதையின் நயங்களைப் பாராட்டுவோம்.

**<u>திரண்ட கருத்து</u> :** பரந்து விரிந்து இருக்கின்ற நெடிய வானத்திலும், பரந்த கடற்பரப்பிலும், விண்ணைத் தொடுமாறு உயர்ந்து நிற்கும் உயரமான மலையிலும், பள்ளத்தாக்குகளில் பொழிகின்ற நீரருவியிலும், காடுகளிலும், புல்வெளிகளிலும், பசுமையான வயல்களிலும், விலங்குகளிலும், பறவைகளிலும் மட்டுமின்றி கண்ணிய தெரிகின்ற பொருட்களிலெல்லாம் நிறைந்து மனதில் தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மையான ஊற்றே, அழகு என்னும் ஒழுங்காய் அமைந்த பேரோவியமே, மெய்யே, மக்கள் மனதிலும் நீ குடியிருக்க வேண்டுகிறேன் என்கிறார் ஆசிரியர்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**மையக் கருத்து** : இயற்கையின் சிறப்பையும், வளத்தையும், அழகையும் மக்களின் உள்ளத்தில் குடியிருக்க வேண்டுமென கவிஞர் கூறுகிறார்.

**மோனை நயம்** : அடியிலோ, சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத்தொடை ஆகும்.

(எ.கா) விரிகின்ற – விண்ணோங்கு, பொழிகின்ற – புல்வெளியில், தெரிகின்ற – தெவிட்டாத

**எதுகை நயம்** : அடிகளிலோ, சீர்களிலோ இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகைத்தொடை ஆகும்.

(எ.கா) புல் வெளியில் – நல் வயலில்

**இயைபு நயம்** : அடிகளிலோ, சீர்களிலோ கடைசி எழுத்தோ, சொல்லோ ஒன்றி வரத் தொடுப்பது இயைபுத் தொடையாகும்.

(எ.கா) வானில், கடற்பரப்பில், பள்ளத்தாக்கில், காட்டில், புள்ளில், நெஞ்சில்

**அணி நயம்**: உள்ளதை உள்ளவாறு இயல்பாகக் கூறுவது இயல்பு நவிற்சி அணி ஆகும்.

(எ.கா) இப்பாடலில் ஆசிரியர் இயற்கை அழகு எங்கெல்லாம் பரவியுள்ளது என்பதை உள்ளதை உள்ளவாறு கூறியுள்ளார்.

**முடிவுரை** : இப்பாடலில் மோனை நயம், எதுகை நயம், இயைபு நயம், அணி நயம் அழகுறவே அமைந்துள்ளது. அதனைக் கண்டு பேரின்பம் அடைவோம்.

---

**நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க.**

**உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினைவடிவமைக்க.**

**உலகத் தாய் மொழிநாள் – விழா**

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| **நாள்** | : | பிப்ரவரி 21 |
| **நேரம்** | : | பிற்பகல் 3.00 மணி |
| **இடம்** | : | பள்ளி விழா அரங்கம், அரசு உயர்நிலைப்பள்ளி, தேனூர் |
| **இறைவணக்கம்** | : | அனைவரும் |
| **தமிழ்த்தாய் வாழ்த்து** | : | செல்வி. அமுதவள்ளி மாணவி |
| **வரவேற்புரை** | : | கோ. ஆறுமுகம், இலக்கிய மன்றச் செயலாளர் அவர்கள் |
| **தலைமையுரை** | : | சுப.வீரபாண்டியன் தலைமை ஆசிரியர் அவர்கள் |
| **சிறப்பு விருந்தினர் மற்றும் சிறப்புரை** | : | கவிஞர் கரிகாலன் |
| **கலை நிகழ்ச்சிகள்** | : | மாணவ, மாணவியர்கள் |
| **நன்றியுரை** | : | ந. அன்பரசு |
| **நாட்டுப்பண்** | : | அனைவரும் |

---

## இயல் ஒன்று 1. 6 மொழியோடு விளையாடு

**அந்தாதிச் சொற்களை உருவாக்குக.**

**அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக.**

**(எ.கா) அத்தி, திகைப்பு, புகழ்ச்சி, சிரிப்பு, புன்னகை, கைப்பேசி, சிறப்பு, புதுமை, மைனா**

| | |
|---|---|
| **குருவி** | – விருது, துவர்ப்பு, புகழ்ச்சி, சிரிப்பு, புன்னகை |
| **விருது** | – துடுப்பு, புதிது, துணிவு |
| **இனிப்பு** | – புளிப்பு, புரட்சி, சிரிப்பு, புதிது, திகைப்பு |
| **வரிசையாக** | – கசப்பு, புலமை, மைனா |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**அகராதியில் காண்க.**

| | | |
|---|---|---|
| **நயவாமை** | – | விரும்பாமை, சிறப்பின்மை |
| **கிளத்தல்** | – | கூறுதல், புலப்படக்கூறுதல் |
| **கேழ்பு** | – | நன்மை |
| **செம்மல்** | – | தலைவன், அரசன் |
| **புரிசை** | – | மதில், எயில் |

**கொடுக்கப்பட்ட வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.**

| வா | | | |
|---|---|---|---|
| | **இறந்த காலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
| நான் | வந்தேன் | வருகிறேன் | வருவேன் |
| நாங்கள் | வந்தோம் | வருகிறோம் | வருவோம் |
| நீ | வந்தாய் | வருகிறாய் | வருவாய் |
| நீங்கள் | வந்தீர்கள் | வருகிறீர்கள் | வருவீர்கள் |
| அவன் | வந்தான் | வருகிறான் | வருவான் |
| அவள் | வந்தாள் | வருகிறாள் | வருவாள் |
| அவர் | வந்தார் | வருகிறார் | வருவார் |
| அவர்கள் | வந்தார்கள் | வருகிறார்கள் | வருவார்கள் |
| அது | வந்தது | வருகிறது | வரும் |
| அவை | வந்தன | வருகின்றன | வருவன |

| தா | | | |
|---|---|---|---|
| | **இறந்த காலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
| நான் | தந்தேன் | தருகிறேன் | தருவேன் |
| நாங்கள் | தந்தோம் | தருகிறோம் | தருவோம் |
| நீ | தந்தாய் | தருகிறாய் | தருவாய் |
| நீங்கள் | தந்தீர்கள் | தருகிறீர்கள் | தருவீர்கள் |
| அவன் | தந்தான் | தருகிறான் | தருவான் |
| அவள் | தந்தாள் | தருகிறாள் | தருவாள் |
| அவர் | தந்தார் | தருகிறார் | தருவார் |
| அவர்கள் | தந்தார்கள் | தருகிறார்கள் | தருவார்கள் |
| அது | தந்தது | தருகிறது | தரும் |
| அவை | தந்தன | தருகின்றன | தருவன |

| காண் | | | |
|---|---|---|---|
| | **இறந்த காலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
| நான் | கண்டேன் | காண்கிறேன் | காண்பேன் |
| நாங்கள் | கண்டோம் | காண்கிறோம் | காண்போம் |
| நீ | கண்டாய் | காண்கிறாய் | காண்பாய் |
| நீங்கள் | கண்டீர்கள் | காண்கிறீர்கள் | காண்பீர்கள் |
| அவன் | கண்டான் | காண்கிறான் | காண்பான் |
| அவள் | கண்டாள் | காண்கிறாள் | காண்பாள் |
| அவர் | கண்டார் | காண்கிறார் | காண்பார் |
| அவர்கள் | கண்டார்கள் | காண்கிறார்கள் | காண்பார்கள் |
| அது | கண்டது | காண்கிறது | காணும் |
| அவை | கண்டன | காண்கின்றன | காண்பன |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

| பெறு | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | பெற்றேன் | பெறுகிறேன் | பெறுவேன் |
| நாங்கள் | பெற்றோம் | பெறுகிறோம் | பெறுவோம் |
| நீ | பெற்றாய் | பெறுகிறாய் | பெறுவாய் |
| நீங்கள் | பெற்றீர்கள் | பெறுகிறீர்கள் | பெறுவீர்கள் |
| அவன் | பெற்றான் | பெறுகிறான் | பெறுவான் |
| அவள் | பெற்றாள் | பெறுகிறாள் | பெறுவாள் |
| அவர் | பெற்றார் | பெறுகிறார் | பெறுவார் |
| அவர்கள் | பெற்றார்கள் | பெறுகிறார்கள் | பெறுவார்கள் |
| அது | பெற்றது | பெறுகிறது | பெறும் |
| அவை | பெற்றன | பெறுகின்றன | பெறுவன |

| நீந்து | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | நீந்தினேன் | நீந்துகிறேன் | நீந்துவேன் |
| நாங்கள் | நீந்தினோம் | நீந்துகிறோம் | நீந்துவோம் |
| நீ | நீந்தினாய் | நீந்துகிறாய் | நீந்துவாய் |
| நீங்கள் | நீந்தினீர்கள் | நீந்துகிறீர்கள் | நீந்துவீர்கள் |
| அவன் | நீந்தினான் | நீந்துகிறான் | நீந்துவான் |
| அவள் | நீந்தினாள் | நீந்துகிறாள் | நீந்துவாள் |
| அவர் | நீந்தினார் | நீந்துகிறார் | நீந்துவார் |
| அவர்கள் | நீந்தினார்கள் | நீந்துகிறார்கள் | நீந்துவார்கள் |
| அது | நீந்தியது | நீந்துகிறது | நீந்தியது |
| அவை | நீந்தின | நீந்துகின்றன | நீந்துவன |

| பாடு | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | பாடினேன் | பாடுகிறேன் | பாடுவேன் |
| நாங்கள் | பாடினோம் | பாடுகிறோம் | பாடுவோம் |
| நீ | பாடினாய் | பாடுகிறாய் | பாடுவாய் |
| நீங்கள் | பாடினீர்கள் | பாடுகிறீர்கள் | பாடுவீர்கள் |
| அவன் | பாடினான் | பாடுகிறான் | பாடுவான் |
| அவள் | பாடினாள் | பாடுகிறாள் | பாடுவாள் |
| அவர் | பாடினார் | பாடுகிறார் | பாடுவார் |
| அவர்கள் | பாடினார்கள் | பாடுகிறார்கள் | பாடுவார்கள் |
| அது | பாடியது | பாடுகிறது | பாடும் |
| அவை | பாடின | பாடுகின்றன | பாடுவன |

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| கொடு | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | கொடுத்தேன் | கொடுக்கிறேன் | கொடுப்பேன் |
| நாங்கள் | கொடுத்தோம் | கொடுக்கிறோம் | கொடுப்போம் |
| நீ | கொடுத்தாய் | கொடுக்கிறாய் | கொடுப்பாய் |
| நீங்கள் | கொடுத்தீர்கள் | கொடுக்கிறீர்கள் | கொடுப்பீர்கள் |
| அவன் | கொடுத்தான் | கொடுக்கிறான் | கொடுப்பான் |
| அவள் | கொடுத்தாள் | கொடுக்கிறாள் | கொடுப்பாள் |
| அவர் | கொடுத்தார் | கொடுக்கிறார் | கொடுப்பார் |
| அவர்கள் | கொடுத்தார்கள் | கொடுக்கிறார்கள் | கொடுப்பார்கள் |
| அது | கொடுத்தது | கொடுக்கிறது | கொடுக்கும் |
| அவை | கொடுத்தன | கொடுக்கின்றன | கொடுப்பன |

**அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு எழுவாய், வினை அடி, வினைக்குப் பொருத்தமான தொடர் அமைக்க. (திடலில், போட்டியில், மழையில், வேகமாக, மண்ணை)**

**(எ.கா)** **நான் திடலில் ஓடினேன் (தன்வினை)**
**திடலில் மிதிவண்டியை ஓட்டினேன் (பிறவினை)**

| எழுவாய்/பெயர் | வினை அடி | தன்வினை | பிறவினை |
|---|---|---|---|
| காவியா | வரை | வரைந்தாள் | வரைவித்தாள் |
| கவிதை | நனை | நனைந்தேன் | நனைவித்தேன் |
| இலை | அசை | அசைந்தது | அசைவித்தது |
| மழை | சேர் | சேர்ந்தது | சேர்ப்பித்தது |


**போட்டியில் :** காவியா போட்டியில் வரைந்தாள். ***(தன்வினை)***
போட்டியில் காவியா ஓவியத்தை வரைவித்தாள். ***(பிறவினை)***

**மழையில் :** நான் மழையில் நனைந்தேன். ***(தன்வினை)***
மழையில் மிதிவண்டியை நனைவித்தேன். ***(பிறவினை)***

**வேகமாக :** காற்று இலையை வேகமாக அசைந்தது. ***(தன்வினை)***
காற்று வேகமாக இலையை அசைவித்தது. ***(பிறவினை)***

**மண்ணை :** மழை மண்ணை சேர்த்தது. ***(தன் வினை)***
மண்ணை மழைச் சேர்ப்பித்தது. ***(பிற வினை)***

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



*"மீன்தொட்டி என்பது*
*மீனுக்குச் சிறைச்சாலை தானே"*
*அதிலிருந்து தப்பி மீண்டும்*
*சிறைச்சாலைக்கே செல்கிறாயே...*

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




## செயல்திட்டம்

**நீங்கள் வாழும் பகுதியில் மக்கள் பேசும் மொழிகளைப் பட்டியலிட்டு அம்மொழி பேசப்படுகின்ற இடங்களை நிலப்படத்தில் வண்ணமிட்டுக் காட்டுக.**

நான் வாழும் பகுதி **மதுரை**

எங்கள் பகுதியில் பேசப்படும் மொழிகள்: * தமிழ் * சௌராஷ்டிரா * இந்தி * தெலுங்கு




## நிற்க அதற்குத் தக....

**உங்களுடைய நாட்குறிப்பில் இடம்பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| திங்கள் | வருத்தம் தெரிவிக்கிறேன், பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார். |
| செவ்வாய் | வகுப்பறைக் குப்பைகளை குப்பைத் தொட்டியில் போட்டேன். |
| புதன் | புதிய நண்பருடன் சேர்ந்து விளையாடினேன். |
| வியாழன் | பாடச் சந்தேகங்களை ஆசிரியரிடம் கேட்டு அறிந்து கொண்டேன். |
| வெள்ளி | வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன். அம்மா பாராட்டினார். |
| சனி | வீட்டுப் பாடங்களை எழுதி முடித்தேன். |
| ஞாயிறு | எனது ஆடைகளை நானே துவைத்தேன். அப்பா மகிழ்ச்சி அடைந்தார். |

### கலைச்சொல் அறிவோம்

**உருபன்** – *Morpheme*
**ஒலியன்** – *Phoneme*
**ஒப்பிலக்கணம்** – *Comparative Grammar*
**பேரகராதி** – *Lexicon*

### அறிவை விரிவு செய்

**திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** – ராபர்ட் கால்டுவெல்
**மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும்** – மணவை முஸ்தபா
**தமிழ்நடைக் கையேடு**
**மாணவர்களுக்கான தமிழ்** – என். சொக்கன்



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் ஒன்று

## 1. 7 கட்டுரை

### தாய் மொழிப்பற்று

**குறிப்புச்சட்டகம் : முன்னுரை, தாய்மொழியின் சிறப்பு, தமிழின் தொன்மை, இலக்கியப்பெருமை, இன்றையநிலை, செய்ய வேண்டுவன, முடிவுரை.**

**முன்னுரை :**

மக்கள் தங்கள் கருத்துகளை வெளியிடவும், பிறரது கருத்துகளைப் புரிந்து கொள்ளவும் துணையாய் இருப்பது மொழி. உலகில் 3000 – க்கும் மேற்பட்ட மொழிகள் இருப்பதாகக் கூறுகின்றனர். ஒருவர் பிறந்தது முதல் பேசி, அறிந்து வரும் மொழியே தாய் மொழியாகும். அந்தத் தாய் மொழியின்பால் அன்பு கொள்வதே தாய்மொழிப்பற்றாகும்.

**தாய்மொழியின் சிறப்பு :**

ஒருவரது சிந்தனை வளர்ச்சி அவரது தாய் மொழியிலேயே அமையும். சிறந்த எண்ணங்களை வளர்த்துச் சீரிய கருத்துகளைப் பேச்சு வழியாகவும் எழுத்து மூலமாகவும் தாய் மொழியிலேயே வெளியிட இயலும். உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்கள் தம் நூல்களைத் தாய் மொழியிலேயே படைத்துள்ளனர். கவியரசர் தாகூரும் திருவள்ளுவரும் காந்தியடிகளும் தம் தாய்மொழியிலேயே முதலில் நூல்களை எழுதினர். ஒருவர் எல்லையற்ற இன்ப துன்பங்களுக்கு ஆட்படும் போது தாய் மொழியிலேயே உணர்வுகள் இயல்பாக வெளிப்படும்.

**தமிழின் தொன்மை :**

தமிழ், ஆரியம், கிரேக்கம், எபிரேயம், சீனம், ஈபுரு ஆகியவை பழமையான உலக மொழிகள். அம்மொழிகளில் பல இன்று வழக்கில் இல்லாத போதும் உயர் தனிச் செம்மொழியாய்த் திகழ்வது தமிழ். நமக்குக் கிடைத்திருக்கும் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம். இது ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதென்பர். இதற்கு முன்பாக அகத்தியம் என்ற இலக்கண நூல் இருந்ததாகக் கூறப்படுகிறது. பாண்டியர்கள் மூன்று சங்கங்களை அமைத்துத் தமிழை வளர்த்துள்ளனர்.

**இலக்கியப் பெருமை :**

இன்று நமக்குக் கிடைத்திருக்கும் பழமையான இலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் சங்க இலக்கியங்களாகும். பின்னர்த் தோன்றிய ஐம்பெரும் காப்பியங்களும், ஐஞ்சிறு காப்பியங்களும், சைவ நூல்களான பன்னிரு திருமுறைகளும், வைணவ நூலான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும், கம்பராமாயணமும் நம் இலக்கிய வளம் கூறுவனவாம்.

**இன்றைய நிலை :**

ஆங்கிலேயரின் வரவால் பாரதத்தில் இருந்த அனைத்து மொழிகளின் வளர்ச்சியும் குன்றியது. தமிழும் அதற்கு விதி விலக்கன்று. ஆயினும் பலர் நம் அன்னைத் தமிழை வளப்படுத்தியே வந்துள்ளனர். தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் தமிழகம் முழுவதும் அலைந்து திரிந்து சங்க நூல்களையும், பிற நூல்களையும் பிடித்து, குறிப்புரை சேர்த்து வெளியிட்டுத் தமிழ்த் தொண்டாற்றினார். மறைமலை அடிகளாரும் பரிதிமாற் கலைஞரும் தனித் தமிழ் நடையொன்றை வலியுறுத்தி வளர்த்தனர். பின்னர் வந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரும் டாக்டர் மு.வரதராசனார் அவர்களும் தமிழில் பல நூல்களைப் படைத்துள்ளனர்.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் ” என்று பாடித் தமிழுக்குத் தொண்டு செய்தார் பாரதியார்.

“இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” என்று தமிழை மதித்துப் போற்றிய பாவேந்தர் பாரதிதாசனாரும் பல நூல்களை எழுதித் தமிழ்த் தொண்டாற்றினார். கால வளர்ச்சிக்கேற்பப் பல மாற்றங்களோடு தமிழ் வளர்ந்த வண்ணம் உள்ளது. சிறுகதைகள், புதினங்கள், புதுக்கவிதைகள், நாடகங்கள், கட்டுரைகள் தோன்றிய வண்ணம் உள்ளது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**செய்ய வேண்டுவன :**

தமிழ் மேலும் வளர்வதற்குத் தனித்தமிழ் இலக்கியங்களை உருவாக்க வேண்டும். புதிய கலைச் சொற்களை உருவாக்க வேண்டும். பிறமொழியில் உள்ள நூல்களை நம் மொழியில் பெயர்க்க வேண்டும். எங்கும் தமிழ் ; எதிலும் தமிழ் என்பதற்கேற்ப ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும், தமிழை ஆக்க வேண்டும். தமிழில் உயர்பட்டம் பயின்றோருக்கு வேலை வாய்ப்புகளில்

முன்னுரிமை தர வேண்டும். பெயர்ப்பலகைகளில் தமிழ் இடம்பெற வேண்டும். குழந்தைகளுக்கு நல்ல தமிழ்ப்பெயர் சூட்ட வேண்டும். தமிழர் கூடும்போது தமிழிலேயே பேச வேண்டும்.

**முடிவுரை :**

பழமையும் பெருமையும் உடையது நம் தமிழ்மொழி. தாய்மொழி மீது பற்றுடையவனே தாய் மீதும் தாய்நாட்டின் மீதும் பற்றுடையவனாய் இருப்பான். கன்னித்தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ் எனப்போற்றப்படும் நம் தாய்மொழி மீது பற்றுடையவராய் இருப்போம்.

---

## கடிதம்

**கடிதம் எழுதுக.**

**உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்து தோழிக்குக் கடிதம் எழுதுக.**

இடம் : **மதுரை**
நாள் :

அன்பு தோழி **திவ்யா,**

இங்கு நான் நலம். நீ அங்கு நலமா என்று அறிய ஆவல்.

எங்கள் மதுரை மாநகரில் ஆண்டு தோறும் விழாக்கள் நடந்த வண்ணமாகவே உள்ளன. அவற்றின் மணிமுடியாய் விளங்குவது சித்திரைத் திருவிழாவாகும். இவ்விழா ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் வளர்பிறையில் 10 நாள்கள் கொண்டாடப்படுகிறது. இவ்விழா நாள்களில் மதுரை மாநகரம் திருவிழாக் கோலத்துடன் திகழும்.

மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம் , இறைவன், இறைவி திருத்தேர், வீதி உலா வருதல், பூப்பல்லாக்கு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். அழகர் கோவிலிலிருந்து கள்ளழகர் மதுரை வரும் போது நிகழும் எதிர்சேவை கண்கொள்ளாக் காட்சி ஆகும். எல்லாவிற்றிற்கும் மேலாகப் பௌர்ணமி நாளன்று கள்ளழகர் ஆற்றில் இறங்கும் திருக்காட்சியைப் பல இலட்சம் மக்கள் கண்டு களிப்பர்.

ஆதலால் நீ உன் பெற்றோரிடம் அனுமதிப் பெற்று இங்கு வந்து இவற்றையெல்லாம் கண்டு மகிழ வேண்டும். உடனே புறப்பட்டு வருக.

உன் உயிர்த்தோழி
தீபா ராணி

உறைமேல் முகவரி
செல்வி. திவ்யா
பெரிய கடை வீதி,
திண்டுக்கல் – 624001.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் இரண்டு

உயிருக்கு வேர்

உரைநடை உலகம்

இயல் இரண்டு

2. நீரின்றி அமையாது உலகு

## மதிப்பீடு

**பலவுள் தெரிக.**

**1. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது ?**

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி **விடை: ஈ) புலரி**

**2. பொருத்தமான விடையைத் தேர்க.**

அ) நீரின்று அமையாது உலகு – திருவள்ளுவர்

ஆ) நீரின்று அமையாது யாக்கை – ஔவையார்

இ) மாமழை போற்றுதும் – இளங்கோவடிகள்

க) அ, இ உ) ஆ, இ ங) அ, ஆ ச) அ, ஆ, இ **விடை: க) அ, இ.**

**குறுவினா.**

**1. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது ?**

கூவல் என்று அழைக்கப்படுவது உவர் மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை ஆகும்.

**2. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

ஆறு : இரு கரைகளுக்கிடையே ஓடும் நீர்ப் பரப்பு

ஊருணி : மக்கள் பருகு நீர் உள்ள நீர் நிலை

ஊற்று : அடியிலிருந்து நீர் ஊறுவது

**3. *மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*
*காடும் உடையது அரண்* – இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை ?**

**ஒரு நாட்டின் நான்கு அரண்கள் :**

1. தெளிந்த நீர், 2. பரந்த நிலம், 3. உயர்ந்த மலை, 4. குளிர்ந்த நிழல் தரும் காடுகள்.

**சிறுவினா.**

**1. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை – அதற்கு நாம் செய்யவேண்டியவற்றை எழுதுக.**

★ நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விட்டதால் நிலத்தடி நீரைச் சிக்கனமாக பயன்படுத்தவேண்டும்.
★ மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர் ஆகியவற்றைச் சிறிய, பெரிய நீர் நிலைகளில் சேகரிக்க வேண்டும்.
★ அதிகப்படியான தடுப்பணைகளை உருவாக்க வேண்டும்.
★ ஏரிகளை தூர்வாரி முறையாகப் பராமரிக்க வேண்டும்.
★ மழைநீர் சேமிப்புத் தொட்டி அமைத்து நிலத்தடியில் மழைநீரைச் சேமிக்க வேண்டும்.

**2. சோழர் காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது ?**

★ மழைக்காலங்களில் ஏரி நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீருக்குள் சென்று கழிமுகத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலே தூக்குவார்.
★ அடியில் இரண்டு துளைகள் காணப்படும்.
★ மேலே இருக்கும் நீரோடித் துளையிலிருந்து நீர் வெளியேறும்.
★ கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும்.
★ இதனால் தூர் வார வேண்டிய அவசியமில்லை.

**நெடுவினா.**

**1. நீரின்று அமையாது உலகு – என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை**

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**எடுத்துக்காட்டுடன் விவரிக்க.**

**முன்னுரை :** நீரின்று அமையாது உலகம் என்னும் தம் கருத்தைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார் திருவள்ளுவர். நீரே மனித வாழ்வின் அடிப்படை என்பதால், நம்முடைய முன்னோர்கள் பல்வேறு வகையான நீர்நிலை வடிவங்களை உருவாக்கி நீரைப் பாதுகாத்தனர்.

**மாங்குடி மருதனார் கூற்று :** மழை உழவுக்கு உதவுகிறது. விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது. நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழவேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன.

**கல்லணை:** தமிழக வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு முன் கரிகால் சோழன் காலத்தில் கட்டப்பட்ட கல்லணையே விரிவான பாசனத் திட்டமாக இருந்துள்ளது.

**அரண்:**

***மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்***
***காடும் உடையது அரண்***

என்னும் குறட்பாவில் நாட்டின் சிறந்த பாதுகாப்புகளுள் நீருக்கே முதலிடம் தருகிறார் திருவள்ளுவர்.

**சர் ஆர்தன் காட்டன் :**

இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை என அழைக்கப்படும் சர்.ஆர்தன் காட்டன் கல்லணையின் கட்டுமான உற்பத்தியை கொண்டு 1873 ஆம் ஆண்டு கோதாவரி ஆற்றின் குறுக்கே தௌலீஸ்வரம் அணையைக் கட்டினார்.

**நீரும் நீராடலும் :**

குளித்தல் என்பது வெப்பமடைந்த உடலைக் குளிரவைத்தல் என்பது பொருளாகும். தெய்வ சிலைகளைக் குளி(ர்)க்க வைப்பதை திருமஞ்சனம் ஆடல் என்பர். சிற்றிலக்கியமாகிய பிள்ளைத் தமிழில் நீராடல் பருவம் உண்டு. நாட்டுப்புறத் தெய்வக் கோயில்களில் சாமியாடிகளுக்கு மஞ்சள் நீர் கொடுத்து அருந்தச் செய்வதும், நீராடுவதும் நடைமுறையில் உள்ளன.

திருமணம் முடிந்த பின் கடலாடுதல் தமிழகத்தில் நிலவுகிறது. இறப்புச் சடங்கிலும் நீர்மாலை எடுத்துவருதல் நடைமுறையில் உள்ளது. அம்மை நோய் குணமடைந்த பின் தலைக்குத் தண்ணீர் ஊற்றுவது வழக்கம், வாரந்தோறும் சனி நீராடு ஔவையின் வாக்கு. வேளாண் நிலத்திற்கு உழைக்கச் செல்வோர் நீராகாரம் குடிப்பார்கள். வீட்டிற்கு வரும் விருந்தினர்க்கு அன்பான வரவேற்பின் அடையாளமாக நீரே வழங்கப்படுகிறது.

**மக்கள் இயக்கம் :**

★ உலகச் சுகாதார நிறுவனம் உலகம் விரைவில் குடிநீருக்கான கடும் சிக்கலை எதிர்கொள்ளும் என எச்சரிக்கிறது.

★ அறிவியல் அணுகுமுறையில் மழைநீரைத் தேக்கி வைத்துப் பாசனத்திற்குப் பயன்படுத்த ஊர்தோறும் ஏரிகளை உருவாக்கினர் நம் முன்னோர். அவற்றைத் தூர்வாரி முறையாகப் பராமரிப்புப் பணிகளைச் செய்தல் வேண்டும். இதை ஒரு மக்கள் இயக்கமாக மழைக்காலத்திற்கு முன்பே செய்ய வேண்டும்.

**முடிவுரை :**

பணம் கொடுத்தால் உணவை விலைக்கு வாங்கிவிடலாம் என்ற மேலோட்டமான கருத்தோட்டத்தை மாற்றிக் கொள்வோம். உணவு உற்பத்திக்கு அடிப்படை நீரே.

அது மட்டுமன்றி நீரே உணவாகவும் இருக்கிறது என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே,

***துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்***
***துப்பாய தூஉம் மழை***

என்று திருவள்ளுவர் கூறியதை கருத்தில் கொண்டு செயல்படுவோம். அடுத்த உலகப்போர் உருவானால் அது தண்ணீருக்காகத்தான் உருவாகும் என்னும் நிலைமைக்கு முடிவுரை எழுதுவோம்.

வீடுகளில் மழைநீர்ச்சேகரிப்பு தொட்டி அமைத்து மழை நீரைச் சேமிப்போம்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஒவ்வோர் ஆண்டும் உலகச் சுற்றுச் சூழல் நாளாகக் கொண்டாடப்படும் நாள்...............**
அ) பிப்ரவரி 16 ஆ) ஜனவரி 02 இ) மே 20 ஈ) ஜுன் 05
**விடை: ஈ) ஜுன் 05**

**2. நீரின்று அமையாது உலகம் என்னும் தம் கருத்தைத் தெளிவாகப் பதிவு செய்தவர்.........**
அ) பாரதியார் ஆ) சீத்தலைச் சாத்தனார் இ) திருவள்ளுவர் ஈ) பாரதிதாசன்
**விடை: இ) திருவள்ளுவர்**

**3. கல்லணையைக் கட்டியவர்**
அ) சேரன் ஆ) பாண்டியன் இ) கரிகால் சோழன் ஈ) இளங்கோவடிகள்
**விடை: இ) கரிகால் சோழன்**

**4. இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்.............**
அ) சர் ஆர்தர் காட்டன் ஆ) ஆடம்ஸ்மித் இ) ஜான் பென்னிகுவிக் ஈ) கரிகால சோழன்
**விடை: அ) சர் ஆர்தர் காட்டன்**

**5. முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர்.............**
அ) சர் ஆர்தர் காட்டன் ஆ) ஜான் பென்னிகுவிக் இ) கால்டுவெல் ஈ) ராஸ்க்
**விடை: ஆ) ஜான் பென்னிகுவிக்**

**6. கிராண்ட் அணைக்கட் என்ற பெயருடைய அணைக்கட்டு.............**
அ) பெரியார் அணை ஆ) கல்லணை இ) மேட்டூர் அணை ஈ) வைகை அணை
**விடை: ஆ) கல்லணை**

**7. சனி நீராடு என்பது .............வாக்கு**
அ) ஔவை ஆ) வள்ளுவர் இ) கம்பர் ஈ) இளங்கோவடிகள்
**விடை: அ) ஔவை**

**8. முந்நீர் – என்பன .............**
அ) கிணற்று நீர், ஆற்று நீர், ஊற்று நீர்
ஆ) மழை நீர், ஆற்று நீர், ஊற்று நீர்
இ) அருவி நீர், மழை நீர், ஊற்று நீர்
ஈ) குளத்து நீர், கிணற்று நீர், ஊற்று நீர் **விடை: ஆ) மழை நீர், ஆற்று நீர், ஊற்று நீர்**

---

**குறுவினா.**

**1. தமிழகத்தில் உள்ள நீர் நிலைகள் சிலவற்றைக் கூறுக.**
**தமிழகத்தில் உள்ள நீர் நிலைகளின் பல்வேறு பெயர்கள் :**
அகழி, அருவி, ஆழிக்கிணறு, உறைக்கிணறு, கண்மாய், கேணி

---

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

**1. வீடுகளில் பயன்படுத்தப்படும் தண்ணீர் மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சிகள் மூலம் கிடைக்கிறது.**
**விடை :** வீடுகளில் பயன்படுத்தப்படும் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது ?

---

**2. கூவல் என்று அழைக்கப்படுவது உவர் மண்நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை ஆகும்.**
**விடை :** "கூவல்" என்று அழைக்கப்படுவது எது ?

---

**சிறுவினா.**

**1. கல்லணை கட்டப் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தைக் கூறுக.**
★ காவிரி ஆற்றின் மீது பெரிய பாறைகளைக் கொண்டு வந்து போட்டனர்.
★ அந்தப் பாறைகள் நீர் அரிப்பின் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன.
★ அவற்றின் மேல் வேறொரு பாறையை வைத்து நடுவே தண்ணீரில் கரையாத ஒரு வித ஒட்டும் களிமண்ணைப் புதிய பாறையில் பூசி, இரண்டையும் ஒட்டிக்கொள்ளும் விதமாகச் செய்தனர்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. கல்லணை – சிறுகுறிப்பு தருக.**

★ தமிழக வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு முன் கரிகால் சோழன் காலத்தில் கட்டப்பட்ட கல்லணையே விரிவான பாசனத் திட்டமாக இருந்துள்ளது.

★ கல்லணையின் நீளம் 1800 அடியாகவும் அகலம் 40 முதல் 60 அடியாகவும் உயரம் 15 முதல் 18 அடியாகவும் இருக்கிறது.

★ அது வலுவான கட்டுமானத் தொழில்நுட்பத்தால் இன்றும் பயன்படுத்துவதோடு நமது வரலாற்றுப் பெருமைக்கும் சான்றாக நிலைத்து நிற்கிறது.

**3. ஜான் பென்னி குவிக் செய்த சிறப்பு யாது ?**

★ முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் ஜான் பென்னி குவிக்.

★ ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வைகைவடி நிலப்பரப்பில் மழை பொய்த்துப் பஞ்சம் ஏற்பட்டதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

★ மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யும் மழை நீர் பெரியாற்றில் ஓடி வீணாகக் கடலில் கலப்பதை அறிந்த இவர் அங்கு ஓர் அணையைக் கட்ட முடிவு செய்தார்.

★ கட்டுமானத்தின்போது இடையில் கூடுதல் நிதி ஒதுக்க ஆங்கிலேய அரசு மறுத்தபோது தனது சொத்துக்களை விற்று அணையைக் கட்டி முடித்தார்.

★ அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக அப்பகுதி மக்கள் தம் குழந்தைகளுக்கு பென்னி குவிக் எனப் பெயர் சூட்டும் வழக்கம் இன்றும் உள்ளது.

**4. குளித்தல் என்ற சொல் குறித்து பேராசிரியர் தொ.பரமசிவன் கூற்று யாது ?**

★ குளித்தல் என்ற சொல்லுக்கு உடம்பினைத் தூய்மை செய்தல் அல்லது அழுக்கு நீக்குதல் என்பதல்ல பொருள்.

★ சூரிய வெப்பத்தாலும் உடல் உழைப்பாலும் வெப்பமடைந்த உடலைக் குளிர வைத்தல் என்பதே அதன் பொருளாகும்.

★ குளிர்த்தல் என்பதே குளித்தல் என்று ஆயிற்று.

## கற்பவை கற்றபின்

**1. நீரின்று அமையாது உலகு, நீரின்று அமையாது யாக்கை இவ்விரண்டு தொடர்களையும் ஒப்புமைப்படுத்தி வகுப்பில் கலந்துரையாடுக.**

**தாமரை** : நீரின்று அமையாது உலகு என்னும் தம் கருத்தைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார் திருவள்ளுவர்.

அக்குறள்படி மழையே பயிர்க்கூட்டமும், உயிர்க்கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணை புரிகின்றது.

**கல்கி** : நீரின்று அமையாது யாக்கை என்னும் கருத்தை குடபுலவியனார் புறநானூற்றுப் பாடலில் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கு அவர் அறிவுரையாகக் கூறியுள்ளார்.

அப்பாடல்படி, உடல் உணவால் அமைவது. எனவே, உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவார். உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும். நிலத்தையும், நீரையும் ஒன்று சேர்த்தவர் இவ்வுலகில் உடலையும் உயிரையும் ஒன்று சேர்த்தவர்.

**2. வீடுகளில் பயன்படுத்தப்படும் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது ? இதற்கான நீர் எங்கிருந்து வருகிறது ? இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தண்ணீர் போதுமானதாக இருக்கும் ? என்பவற்றுக்கான தகவல்களைத் திரட்டி ஒப்படைவு உருவாக்குக.**

★ வீடுகளில் பயன்படுத்தப்படும் தண்ணீர் மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சிகள் மூலம் கிடைக்கிறது.

★ அதற்கான நீர் மழை நீர், ஆற்று நீர், ஊற்று நீர் மூலம் பெறப்பட்டு, தேக்கி வைக்கப்பட்ட நீர் நிலைகளிலிருந்து வருகிறது.

★ உலகச் சுகாதார நிறுவனம் உலகில் விரைவில் குடிநீருக்கான கடும் சிக்கலை எதிர் கொள்ளும் என எச்சரிக்கிறது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கவிதைப்பேழை

இயல் இரண்டு

### 2.1 பட்டமரம்

### மதிப்பீடு

**பலவுள் தெரிக.**

**1. "மிசை" – என்பதன் எதிர்ச்சொல் என்ன ?**

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை **விடை: அ) கீழே**

**சிறுவினா.**

**1.பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை ?**

★ மொட்டைக் கிளையாக நின்று பெருமூச்சு விடுகிறது பட்டமரம்.
★ தன்னை வெட்டப்படும் ஒருநாள் வருமென்று கவலை அடைந்தது.
★ உட்கார நிழலும், நறுமணம் கமழும் மலர்களும் கூரை போன்று விரிந்த இலைகளும் வெந்து கருகி நிறமாறிவிட்டதற்கு வருந்துகிறது.
★ பசுமையாக இல்லாததால் கட்டை என்னும் பெயர் பெற்று கருகி விட்டது.
★ உடையாக இருந்த மரப்பட்டைகள் கிழிந்ததால் அழகை இழந்தது.
★ காலம் மாறும் புயலின் தாக்கத்தால் துன்பப்பட்டது.
★ பாடுகின்ற பறவைகள் மரத்தில் பாட்டு பாடியதும், ஆடுகின்ற கிளையின் மீது சிறுவன் விளையாடியதும் வெறுங்கதையானது என எண்ணி வருந்தியது.

### கூடுதல் வினாக்கள் – விடைகள்

**சொல்லோடு பொருளை பொருத்துக.**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ. குந்த | – | மணம் |
| ஆ. கந்தம் | – | கவலை |
| இ. மிசை | – | உட்கார |
| ஈ. விசனம் | – | மேல் |

**விடை :**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| **அ. குந்த** | – | **உட்கார** |
| **ஆ. கந்தம்** | – | **மணம்** |
| **இ. மிசை** | – | **மேல்** |
| **ஈ. விசனம்** | – | **கவலை** |

**கவிஞர் தமிழ் ஒளி குறிப்பு தருக**

**ஆசிரியர் குறிப்பு**

**ஆசிரியர் பெயர்** : கவிஞர் தமிழ் ஒளி
**இயற்பெயர்** : விஜயரெங்கம்
**பெற்றோர்** : சின்னையா, செங்கேணி அம்மாள்
**பிறந்த ஊர்** : தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடியை அடுத்த ஆடூர்
**சிறப்பு** : பாரதியாரின் வழித் தோன்றல், பாரதிதாசனின் மாணவர்
**படைப்புகள்** : நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம்
**இயற்றிய நூல்** : பட்டமரம்
**காலம்** : 21.09.1924 முதல் 24.03.1965 வரை

**இலக்கணக் குறிப்பு தருக.**

1. வெந்து, வெம்பி, எய்தி – என்பதன் இலக்கணக்குறிப்பு .......... ஆகும்.
**விடை : வினையெச்சங்கள்**

2. மூடுபனி – என்பதன் இலக்கணக்குறிப்பு ........... ஆகும் **விடை : வினைத் தொகை**

3. ஆடுங்கிளை – என்பதன் இலக்கணக்குறிப்பு ........... ஆகும் **விடை : பெயரெச்சத் தொடர்**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுபத உறுப்பிலக்கணம் தருக.

1. விரித்த என்பதன்

பகுபத உறுப்பிலக்கணம்

விடை – விரி + த் + த் + அ

விரி – பகுதி

த் – சந்தி

த் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

2. குமைந்தனை என்பதன்

பகுபத உறுப்பிலக்கணம்

விடை – குமை + த்(ந்) + த் + அன் + ஐ

குமை – பகுதி

த் – சந்தி, த் (ந்) ஆனது விகாரம்

த் – இறந்த கால இடைநிலை

அன் – சாரியை

ஐ – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

## கற்பவை கற்றபின்...

**1. விளைநிலங்கள் கட்டடங்களாகின்றன – என்னும் தலைப்பில் ஒட்டியும் வெட்டியும் பேசுக.**

**மாணவன் 1** : * உணவு உற்பத்தித் தொழிலான விவசாயத்திற்கு அடிப்படை விளை நிலங்களே. அங்கு கட்டடங்கள் கட்டப்படுவதால்உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

விளைநிலங்கள் குறைவதால் உணவுப் பஞ்சம் ஏற்படும்.

அதனால் விலங்குகளையும் பறவைகளையும் உண்ணவேண்டி வரும். ஆனால் அவைகளின் எண்ணிக்கையும் குறைவதால் பட்டினி சாவுகள் நிகழும்.

**மாணவன் 2** : நம் நாட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற்காகத்தான் விளைநிலங்கள் கட்டடங்களாகவும், தொழிற்சாலைகளாகவும் மாறுகின்றன.

நம் உணவுத் தேவைக்குப் பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்துகொள்ளலாம்.

**2. பட்டமரம், புதிதாக முளைவிட்ட குருத்து ஆகிய இரண்டும் பேசிக்கொள்வதாய்க் கற்பனை உரையாடல் நிகழ்த்துக.**

**பட்டமரம்** : இளங்குருத்தே நீ வான் நோக்கி வளர வாழ்த்துக்கள்.

**குருத்து**: நன்றி ஐயா ! ஆனால் நீங்கள் மிகவும் கருத்து, இலை, பூ இல்லாமல் காணப்படுகிறீர்கள் ஏன் ?

**பட்டமரம்** : முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தது. அதனால் என்னை நன்குப் பராமரித்தனர். ஆனால் நவீன கால மக்கள் நான்தேவை இல்லை எனக்கருதி என்னைப் பராமரிக்காமல் விட்டுவிட்டனர். அதனால்தான் நான் இவ்வாறு காட்சியளிக்கிறேன்.

**குருத்து**: ஐயகோ ! நம்மை பராமரிக்காமல் விட்டால் அவர்களுக்கு அல்லவா முதலில் உயிர்வளி, மற்றும் உணவு கிடைக்காமல் போய்விடும். இதனை நாம் அவர்களுக்கு எவ்வாறு புரிய வைப்பது ?

**3. பட்டணத்துப் பறவைகளும் ஊர்ப் பறவைகளும் பேசுவது போலச் சிறு சிறு கவிதைகள் படைக்க.**

**(எ.கா)**

**பட்டணத்துக் காக்கை**

*ஊரைத் தூய்மை செய்கின்றோம்*
*உறவைக் கூட்டிப் பகிர்கின்றோம்*
*கரைந்து தாகம் எடுக்கிறதே*
*விரைந்து நீரை வைப்பீரே !*

**கிராமத்துக் கிளி**

*தத்திப் பறக்கும் உறவுகளே*
*கொத்தித் தின்ன வாருங்கள்*
*பழுத்துத் தொங்கும் பழக்கூட்டம்*
*கழுத்து வரைக்கும் உண்பீரே !*

**பட்டணத்து கிளி**

*ஆருடம் சொல்வதற்காகச்*
*சிறகிழந்து கூண்டுக்குள்*
*நெல்மணி தின்கிறேன்*
*மதில் மேல் சிதறிக்கிடக்கும்*
*சாதத் துளிகளை உப்பின்றி*
*உட்கொள்கிறேன் !*

**கிராமத்துப் புறா**

*வானில் பறக்கும் உறவுகளே*
*இட்ட தோர் தாமரைப் பூ*
*இதழ் விரிந்திருத்தல் போலே*
*வட்டமாய்க் கூடி*
*இரையுண்ணலாம் !*

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



கவிதைப்பேழை

## இயல் இரண்டு 2.2 பெரியபுராணம்

**குறுவினா.**

**1. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரிய புராணம் எதனை ஒப்பிடுகிறது ?**

★ அன்னங்கள் விளையாடும் அகலமான துறைகளைக் கொண்ட நீர் நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும்.

★ அதனால் அந்நீர் நிலைகளில் உள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகில் உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும்.

★ இக்காட்சியானது நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்று விளங்குவதாகப் பெரியபுராணம் கூறுகிறது.

---

**நெடுவினா.**

**1. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :** வரப்புயர நீர் உயரும், நீருயர நெல் உயரும், நெல்லுயரக் குடி உயரும் உயர்ந்த குடியாக, நாடெல்லாம் நீர் நாடாகச் சோழநாடு திகழ்கிறது.

**காவிரி நீர் :** காவிரி நீர் மலையிலிருந்து புதிய பூக்களை அடித்துக்கொண்டு வருகிறது. அப்பூக்களில் தேன் நிறைந்திருப்பதால் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரம் செய்கின்றன. காவிரி நீர் கால்வாய்களில் பரந்து எங்கும் ஓடுகிறது.

**களை பறிக்கும் பருவம்:** நட்டபின் வயலில் வளர்ந்த நாற்றின் முதலிலை சுருள் விரிந்தது. அப்பருவத்தைக் கண்ட உழவர் இதுதான் களை பறிக்கும் பருவம் என்றனர்.

**நீர்வளம் :** காடுகளில் எல்லாம் கழையாகிய கரும்புகள் உள்ளன. சோலைகள் எங்கும் குழைகளில் மலர் அரும்புகள் உள்ளன. பக்கங்களில் எங்கும் கரிய குவளை மலர்கள் மலர்ந்துள்ளன. வயல்களில் எங்கும் நெருக்கமாகச் சங்குகள் கிடக்கின்றன. நீர் நிலையின் கரையெங்கும் இளைய அன்னங்கள் உலவுகின்றன. குளங்கள் எல்லாம் கடலைப் போன்ற பரப்பை உடையன. அதனால், நாடு முழுவதும் நீர் நாடு என்று சொல்லத்தக்கதாய் உள்ளது.

**வானவில் :** அன்னங்கள் விளையாடும் அகலமான துறைகளைக் கொண்ட நீர் நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும். அதனால், அந்நீர் நிலைகளில் உள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகில் உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும். இக்காட்சியானது நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்று விளங்கும்.

**குவித்து வைக்கப்பட்டவை:** அரியப்பட்ட செந்நெற்கட்டுகளை அடுக்கிப் பெரிய போராகவும், பிடிக்கப்பட்ட மீன்களையும் வளைந்த சங்குகள் ஈன்ற முத்துகளையும் குன்றைப் போலவும், தேன்வடியும் விரிந்த மலர்த் தொகுதியை மலைபோலவும் குவித்து வைப்பர்.

**பொன்மாலைச் சாரல் :** நெல்கற்றைகள் போரை மேலேயிருந்து சாயச் செய்வர். பெரிய வண்டிகளைச் செலுத்தும் கருமையான எருமைக் கூட்டங்கள் வலமாகச் சுற்றிச்சுற்றி மிதிக்கும் இத்தோற்றமானது கரியமேகங்கள் பெரிய பொன்மாலைச் சாரல் மீது வலமாகச் சுற்றுகின்ற காட்சி போல உள்ளது.

**செழித்து வளர்ந்துள்ளவை :** சோழ நாட்டில் தென்னை, செருந்தி, நறுமணமுடைய நரந்தம், அரச மரம், கடம்ப மரம், பச்சிலை மரம், குளிர்ந்த மலரையுடைய குரா மரம், பெரிய அடிப்பாகத்தைக் கொண்ட பனை, சந்தனம், குளிர்ந்த மலரையுடைய நாகம், நீண்ட இலைகளையுடைய வஞ்சி, காஞ்சி மலர்கள் நிறைந்த கோங்கு முதலியன எங்கெங்கும் செழித்து வளர்ந்துள்ளன.

**முடிவுரை :** காவிரியின் பாதையெல்லாம் பூவிரியும் கோலத்தை அழகாக விவரித்துரைக்கிறது பெரியபுராணம். வளங்கெழு திருநாட்டின் சிறப்பை இயற்கை எழிற்கவிதைகளாய்ப் படரச் செய்துள்ளது.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. பெரியபுராணத்தை இயற்றியவர்.................**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கம்பர் ஈ) சேக்கிழார் **விடை: ஈ) சேக்கிழார்**

**2. தரளம் என்பதன் பொருள்....................**

அ) சங்கு ஆ) முத்து இ) தேன் ஈ) வட்டம் **விடை: ஆ) முத்து**

**3. மாடு என்பதன் பொருள் .................**

அ) வட்டம் ஆ) மேதி இ) வேரி ஈ) பக்கம் **விடை: ஈ) பக்கம்**

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கோடு என்ற சொல்லின் பொருள் ........... **விடை: குளக்கரை**
2. சுரிவளைஎன்ற சொல்லின் பொருள் ........... **விடை: சங்கு**
3. நாளிகேரம் என்ற சொல்லின் பொருள் ........... **விடை: தென்னை**
4. கோளி என்ற சொல்லின் பொருள் ........... **விடை: அரசமரம்**

**சொல்லோடு பொருளைப் பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | வாவி | – | தேன் |
| ஆ) | வேரி | – | தென்னை |
| இ) | ஆடும் | – | கரும்பு |
| ஈ) | கழை | – | பொய்கை |
| உ) | நாளிகேரம் | – | நீராடும் |

**விடை :**

| | | | |
|---|---|---|---|
| **அ)** | **வாவி** | – | **பொய்கை** |
| **ஆ)** | **வேரி** | – | **தேன்** |
| **இ)** | **ஆடும்** | – | **நீராடும்** |
| **ஈ)** | **கழை** | – | **கரும்பு** |
| **உ)** | **நாளிகேரம்** | – | **தென்னை** |

**குறுவினா.**

**1. சோழ நாடு எவ்வாறு திகழ்கிறது ?**

வரப்புயர நீர் உயரும், நீருயர நெல் உயரும், நெல்லுயரக் குடி உயரும். உயர்ந்த குடியாக, நாடெல்லாம் நீர் நாடாக சோழ நாடு திகழ்கிறது.

**சிறுவினா.**

**1. சோழ நாட்டில் செழித்து வளர்ந்துள்ளவைகள் யாவை ?**

சோழ நாட்டில் தென்னை, செருந்தி, நறுமணமுடைய நரந்தம், அரச மரம், கடம்ப மரம், பச்சிலை மரம், குளிர்ந்த மலரையுடைய குரா மரம், பெரிய அடிப்பாகத்தைக் கொண்ட பனை, சந்தனம், குளிர்ந்த மலரையுடைய நாகம், நீண்ட இலைகளையுடைய வஞ்சி, காஞ்சி மலர்கள் நிறைந்த கோங்கு முதலியன செழித்து வளர்ந்துள்ளன.

**2. சேக்கிழார் குறிப்பு தருக.**

**ஆசிரியர் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | சேக்கிழார் |
| **இயற்பெயர்** | : | அருண்மொழித் தேவர் |
| **பெற்றோர்** | : | வெள்ளியங்கிரி முதலியார், அழகாம்பிகை |
| **காலம்** | : | 12 ஆம் நூற்றாண்டு |
| **பிறப்பிடம்** | : | தொண்டை நாட்டைச் சேர்ந்த புலியூர்க் கோட்டத்தில் உள்ள குன்றத்தூர் |
| **பதவி** | : | இரண்டாம் குலோத்துங்கன் அவையில் முதலமைச்சர் |
| **சமயம்** | : | சைவம் |
| **மரபு** | : | வெள்ளாளர் |
| **இயற்றிய நூல்** | : | பெரியபுராணம் |
| **பட்டம்** | : | உத்தம சோழப் பல்லவன், தெய்வப் புலவர் |

**3. பெரிய புராணம் நூல் குறிப்பு தருக.**

**நூலின் பெயர்** : பெரியபுராணம்
**இயற்றியவர்** : சேக்கிழார்
**விளக்குவது** : அறுபத்து மூன்று நாயன்மார்களின் சிறப்புகள்
**மறுபெயர்** : திருத்தொண்டர் புராணம்
**விளக்கம்** : சுந்தரரின் திருத்தொண்டத் தொகை எனும் நூலை முதல் நூலாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகளை காப்பிய தலைவராகவும், அவர் போற்றிய சைவ அடியார்களின் வாழ்க்கை வரலாற்றையும் நம்பியார் நம்பி எழுதிய திருத்தொண்டர் திருவந்தாதியை காப்பிய நூலாகவும் கொண்டு சேக்கிழாரால் எழுதப்பெற்றது.

---

**இலக்கணக் குறிப்பு தருக.**

1. கருங்குவளை, செந்நெல் என்பதன் இலக்கணக் குறிப்பு .......... ஆகும் **விடை : பண்புத்தொகைகள்**
2. விரிமலர் என்பதன் இலக்கணக் குறிப்பு .......... ஆகும் **விடை : வினைத் தொகை**
3. தடவரை என்பதன் இலக்கணக் குறிப்பு .......... ஆகும் **விடை : உரிச்சொல் தொடர்**

---

**பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
**பாய்வன என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்**
**விடை :** பாய்வன – பாய் + வ் + அன் + அ

பாய் – பகுதி
வ் – எதிர்கால இடைநிலை
அன் – சாரியை
அ – பலவின்பால் வினைமுற்று விகுதி

---

**கற்பவை கற்றபின்...**

**1. மூச்சு விடும் மரம், புரட்டிப் போட்ட புயல், இசைபாடும் பறவைகள், பனித்துளியில் தெரியும் பனை, என் இனிய கனவு போன்ற தலைப்புகளில் பள்ளி இலக்கிய மன்றத்தில் கவிதை படிக்க.**

**1. <u>மூச்சுவிடும் மரம்</u> :**
*உனை சுற்றியே இருக்கிறேன்*
*உனை பேணி பாதுகாக்கவே*
*உயிர் கொள்கிறேன் என்*
*உடல் அனைத்தும் உனக்கே*
*உரித்தாக்குகிறேன் பின் ஏனடா என்*
*உயிர் பறிக்க துடிக்கிறாய்*
*பாதக மனிதா...*

**2. <u>புரட்டிப் போட்ட புயல்</u> :**
*தென்றல் காற்றாய் நீ வந்தாய்...*
*உன்னை சுவாசித்தே,*
*உன் பாட்டுக்கு தலையசைத்தே உயிர் வாழ்ந்தேன்...*
*திடீரென புயலாய் மாறியே நீ வந்தாய்...*
*உன்னால் என் சுவாசம் நின்று, வேரோடு*
*தரையில் தூக்கியெறியப்பட்டே*
*என்னுயிர் துறந்தேன்...*

**3. <u>இசைபாடும் பறவைகள்</u> :**
*தலைகீழாய்த் தொங்கும்*
*தூக்கணாங் குருவிக் கூட்டில்*
*ஓர்*
*பதுங்கு குழியின்*
*பக்குவம் புலப்படும்.*
*சிற்பியின் உழைப்பு,*
*மரங்கொத்தியின்*
*அலகு உளிகளில்*
*ஒளிந்து கிடப்பதுண்டு.*

**4. <u>பனித்துளியில் தெரியும் பனை</u> :**
*ஒரு பனி துளி, ஒரு பனி துளி*
*ஒரு புல் நுனி, ஒரு புல் நுனி...*
*ஒரு இழை, ஒரு இழை*
*கதிரொளி...*
*பனிதுளி ஐக்கியம் ஆனது*
*கதிருடன் புல் நுனி வருந்தியது*
*பனி துளி மறைந்ததும்*
*பனி பார்த்து மகிழ்ந்து நின்றேன்!*

**5. <u>என் இனிய கனவு</u> :**
*சுற்றிடும் நினைவுகள் உள்ளத்தில்*
*உறைந்திடும்*
*உறங்கிடும் பொழுதினில்*
*உலவிடும்*
*உறக்கத்தின் கழுத்தினை*
*இரவெல்லாம் பற்றிடும்*
*எழுந்ததும்*
*மறந்திடும் நிறமில்லா கனவு*

---

**2. பின்வரும் கவிதையின்விவரிப்பை உரைநடையில் எழுதுக.**

**வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்**
**கானலின் நீரோ ? – வெறுங் காட்சிப் பிழைதானோ ?**
**போன தெல்லாம் கனவினைப்போல் புதைந்தழிந்தே**
**போனதனால் நானும் ஓர் கனவோ ? – இந்த**
**ஞாலமும் பொய்தானோ ?**

**– பாரதியார்**

★ விரிந்த வானம், கதிரவனின் இளமையான வெயில், அடர்ந்து பரந்த மரங்களின் கூட்டம் இவையனைத்தும் கானல் நீர் போல தோன்றி மறைகின்ற வெறுங்காட்சிப் பொருள்தானோ ?
★ முன்பு வளமான இயற்கை எல்லாம் அழிந்து போனது கனவாகக் காட்சி அளிக்கிறது.
★ இந்த உலகமே பொய்யாகத் தோன்றி மறையும் பொருள்தானோ ? என்று பாரதியார் கூறுகிறார்.

---

## கவிதைப்பேழை

**இயல் இரண்டு** **2.3 புறநானூறு**

## மதிப்பீடு

**பலவுள் தெரிக.**

**1. <u>மல்லல்</u> மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன ?**

அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

**விடை: இ) வளம்**

---

**குறுவினா.**

**1. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே – குறிப்பு தருக.**

★ நீர் இல்லாமல் அமையாத உடல் உணவால் அமையும்.
★ உணவே முதன்மையானது.
★ எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவார்.

---

**சிறுவினா.**

**1. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை ?**

நிலம் குழிந்த இடங்கள் தோறும் நீர்நிலைகளைப் பெருகச் செய்தல் வேண்டும். அவ்வாறு நிலத்துடன் நீரைக் கூட்டியோர் மூவகை இன்பத்தையும் நிலைத்த புகழையும் பெறுவர்.

---

### கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று ?**

அ) பட்டினப்பாலை ஆ) நாலடியார் இ) புறநானூறு ஈ)திருக்குறள்

**விடை: இ) புறநாநூறு**

**2. குளம் தொட்டுக் கோடு பதித்து வழிசீத்து – இவ்வரி இடம் பெற்றுள்ள நூல் ?**

அ) புறநானூறு ஆ) எட்டுத்தொகை இ) கலித்தொகை ஈ)சிறுபஞ்சமூலம்

**விடை: ஈ) சிறுபஞ்சமூலம்**

---

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. புறநானூறு நூலின் திணை .......................... **விடை: பொதுவியல்**
2. புறநானூறு நூலின் துறை ......................... **விடை: முதுமொழிக்காஞ்சி**
3. குடபுலவியனார் ....................... நாட்டைச் சேர்ந்தவர் **விடை : சேரநாடு**

**சொல்லோடு பொருளைப் பொருத்துக.**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) யாக்கை | – | புல்லிய நிலம் |
| ஆ) புணரியோர் | – | உடம்பு |
| இ) புன்புலம் | – | முயற்சி |
| ஈ) தாட்கு | – | தந்தவர் |

**விடை :**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) யாக்கை | – | உடம்பு |
| ஆ) புணரியோர் | – | தந்தவர் |
| இ) புன்புலம் | – | புல்லிய நிலம் |
| ஈ) தாட்கு | – | முயற்சி |

**குறுவினா.**

**1. பொதுவியல் திணை விளக்குக.**

வெட்சி முதலிய புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளையும், முன்னர் விளக்கப்படாத செய்திகளையும் கூறுவது பொதுவியல் திணையாகும்.

**2. முதுமொழிக் காஞ்சித் துறை குறிப்பு தருக.**

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளினிது உறுதி தரும் தன்மையைக் கூறுதல் முதுமொழிக்காஞ்சித்துறை எனப்படும்.

**3. புறநானூறு நூல்குறிப்பு தருக.**

**நூல் குறிப்பு :**

**பெயர்** : புறநானூறு
**விளக்கம்** : புறம் + நான்கு + நூறு = புறநானூறு
**இடம்பெற்றுள்ளது** : எட்டுத்தொகை
**பாடல்கள்** : புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது
**இயற்றியவர்** : பல்வேறுகாலங்களில் பல்வேறு புலவர்களாலும் மன்னர்களாலும் இயற்றப்பட்டது.
**வகை** : அகவற்பா
**கூறுவது** : பண்டைய வேந்தர்களின் வீரம், வெற்றி, கொடை, குறுநில மன்னர்கள், புலவர்கள், சான்றோர்கள் பெருமைகள், அன்றைய மக்களி புறவாழ்க்கை
**சிறப்பு** : பண்டையத் தமிழர்களின் அரிய வரலாற்றுச் செய்திகள் அடங்கிய பண்பாட்டுக் கருவூலம்
**மொழி பெயர்த்தவர்** : ஜி.யு. போப்

**இலக்கணக்குறிப்புத் தருக.**

1. மூதூர், நல்லிசை, புன்புலம் என்பதன் இலக்கணக்குறிப்பு ............ ஆகும்
**விடை : பண்புத் தொகைகள்**
2. நிறுத்தல் என்பதன் இலக்கணக்குறிப்பு ............ ஆகும் **விடை :தொழிற்பெயர்**
3. அமையா என்பதன் இலக்கணக்குறிப்பு ............ ஆகும்
**விடை :ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**
4. நீரும் நிலமும், உடம்பும் உயிரும் என்பதன் இலக்கணக்குறிப்பு ............ ஆகும்
**விடை :எண்ணும்மைகள்**
5. அடுபோர் என்பதன் இலக்கணக்குறிப்பு ............ ஆகும் **விடை :வினைத்தொகை**
6. கொடுத்தோர் என்பதன் இலக்கணக்குறிப்பு ............ஆகும் **விடை :வினையாலணையும் பெயர்**

**பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**1. நிறுத்தல் என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்**

**விடை :** நிறுத்தல் – நிறு + த் + தல்
நிறு – பகுதி
த் – சந்தி
தல் – தொழிற்பெயர் விகுதி

**2. கொடுத்தோர் என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்**

**விடை :** கொடுத்தோர் – கொடு + த் + த் + ஓர்
கொடு – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்பவை கற்றபின்....

**1. பின்வரும் புறநானூற்றுத் தொடர்களுக்கான பொருளைப் பள்ளி நூலகத்திற்குச் சென்று அறிந்து எழுதுக.**

**அ) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! ( புறம்–18)**

நீரின்றி அமையாத உடல் உணவால் அமைவது. உணவையே முதன்மையாகவும் உடையது. எனவே, உணவு தந்தவர் உயிர் தந்தவர் ஆவார்.

**ஆ) உண்பது நாழி உடுப்பவை இரண்டே! (புறம்–189)**

ஒருவன் உலகம் அனைத்தையும் ஆண்டு அனுபவித்துக் கொண்டிருக்கிறான். மற்றொருவன் நள்ளிரவிலும் வேட்டையாட விலங்கினைப் பார்த்துக்கொண்டு இருக்கிறான். யாராய் இருந்தால் என்ன ? அவர்கள் இருவரும் உண்பது ஒரு படி உணவு. உடுத்திருப்பவை மேலாடை, கீழாடை என்ற இரண்டே ஆடைகளே.

**இ) யாதும் ஊரே யாவரும் கேளிர்! (புறம்–192)**

உலகில் உள்ள எல்லா ஊர்களையும் நம் உறவினர்கள் வாழும் ஊராகவும், அங்குள்ள எல்லா மக்களும் நம் உறவினரே எனக் கருதவேண்டும்.

**ஈ) சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே!**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே !(புறம்–312)**


தாம் பெற்ற மகனை சான்றோனாக்குவது தந்தையின் கடமை. அம்மகனுக்கு போர்ப்பயிற்சி அளிப்பது மன்னனின் கடமை ஆகும்.

**உ) உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்,**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே !(புறம்–183)**

ஆசிரியருக்குத் துன்பம் நேரும் போது உதவ வேண்டும். அவருக்கு நிறைந்த செல்வம் கொடுக்க வேண்டும். அவரைப் பின்பற்றி நடப்பதற்குத் தயங்கக்கூடாது. இப்படிக் கல்வி கற்பது முறையாகும். இது பெரிதும் நன்மை பயக்கும்.


---

**2. "உணவாகும் மழை" என்னும் தலைப்பில் விளக்கக் குறிப்புகளுடன் கூடிய படத்தொகுப்பை உருவாக்குக.**


நீர் ஆவியாகி மேகமாக மாறி மழையாகிப் பெய்கிறது


மழை பொழிவு


விவசாயம்


தாவரங்கள் வளர்கிறது


காய்கறிகள்


உணவு படம்


உண்ணும் படம்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



விரிவானம்

**இயல் இரண்டு**

## 2.4 தண்ணீர் – கந்தர்வன்

**ஆசிரியர் குறிப்பு :**

| | |
|---|---|
| **பெயர்** | : கந்தர்வன் |
| **இயற்பெயர்** | : நாகலிங்கம் |
| **பிறந்த ஊர்** | : இராமநாதபுரம் |
| **பணி** | : தமிழ்நாடு அரசின் கருவூலக் கணக்குத் துறை |
| **படைப்புகள்** | : சாசனம், ஒவ்வொரு கல்லாய், கொம்பன் |
| **காலம்** | : 03.02.1944 முதல் 22.04.2004 |

**நெடுவினா.**

**1. தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.**

**முன்னுரை :** கந்தர்வன் அவர்கள் படைத்த சிறுகதைத் தொகுப்புகளில் ஒன்று தண்ணீர். சிற்றூக்களில் நீர்பற்றாக்குறை வாழ்க்கைச் சிக்கலாகவே மாறிவருகிறது. என்பதை உணர்த்துகிறது இச்சிறுகதை வெயில் தணியத் தொடங்கிய வேளை, பாசஞ்ஜர் ரயிலின் கூவல் அருவலாகக் கேட்டது. வல்லநேந்தல் தாண்டியதும் இன்ஜின் டிரைவர்கள் இப்படித்தான் ஒலி எழுப்புவார்கள். திண்ணைக்கு ஓடிவந்து, தூணைப் பிடித்துக்கொண்டு திரும்பிப் பார்த்தாள் இந்திரா.

உள்ளே அம்மா "பொட்டுத் தண்ணியில்லை" என்று ரயில் ஊதல் கேட்டு அன்னிச்சையாகச் சொல்லிக்கொண்டிருந்தது. ஐயாவுக்கு எப்போதும் கணக்குத்தான். ஆடு குட்டி போட... குட்டி பெருத்துக் குட்டிகள் போட்டுக் குபேரனாகும் கணக்கு.

**தண்ணீர் பஞ்சம் :** எல்லா ஊர்களும் தீய்ந்து போய்விட்டன. எல்லா ஊரிலும் பருவகாலத்தில் மழை பெய்யும். புயல் வந்தால்தான் இந்தப் பக்கம் பூராவுக்கும் மழை. மழை பெய்வதில்லை... பெய்தால் பேய் மழை. கண்மாய், ஊருணி எல்லாம் உடைப்பெடுத்து வெள்ளம் போய் மூன்றாம் நாள் மறுபடி நீரில்லாப் பூமியாகக் கிடக்கும். அம்மாதான் தினமும் பிலாப்பட்டிக்குப் போய் தண்ணீர் பிடித்துக் கொண்டு வருவாள். ஆனால் அம்மாவுக்கு வயிற்றில் கட்டி வந்ததிலிருந்து இந்திரா குடத்தை எடுத்தாள்.

**இரயில் தண்ணீர் :** இந்திரா குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு வாரியைத் தாண்டி ஓடினாள். மேட்டை எட்டும்போது ஏழெட்டுப் பெண்கள் இடுப்பில் குடங்களோடு ஓடிவந்து இந்திராவை முந்தப் பார்த்தார்கள். ரயில் காட்டுயானை பிளிறிக்கொண்டு வருவதுபோல் நிலையத்துக்குள் நுழைந்தது. பயணிகள் யாரும் இறங்கும் முன்பாக இந்திரா குடத்தோடு பெட்டிக்குள் பாய்ந்தாள். முகம் கழுவும் பேசின் குழாயை அழுத்தி வேகம் வேகமாக அரைச்செம்பும் கால் செம்புமாகப் பிடித்துக் குடத்தில் ஊற்றிக் கொண்டிருந்தாள். இதுதான் நாளைக்குச் சாயந்திரம்வரை வீட்டுக்குக் குடிதண்ணீர். இதுவும் கிடையாதென்றால், பிலாப்பட்டிக்குப் போகவேண்டும் நல்ல தண்ணீருக்கு.

இந்திரா உள்ளங்கையை இன்னும் அழுத்திக் கொண்டிருந்தாள். தண்ணீர் சன்னமாக வந்தது குழாயில். ரயில் நகர்கிறமாதிரி இருந்தது. செம்பை எடுத்துக் குடத்தைப் பாதையில் வைத்துவிட்டுக் குதிக்கப் போனாள். ஒரு வடக்கத்திப் பெண் ஓடிவந்து இவளை இழுத்து வண்டிக்குள் தள்ளிவிட்டுக் கோபமாகக் கத்தினாள்.

**இந்திராவை காணோம் :** கணக்குப் போட்டுக்கொண்டிருந்த ஐயாவிடம், சின்னவன் ஓடிவந்து இரைந்துகொண்டே சொன்னான், "ரயில் போயிருச்சு... அக்கா இன்னும் வரலை."

ஐயா ரொம்ப சாதாரணமாகச் சொன்னார், "எங்கயாவது வாயளந்துகிட்டிருக்கும், போய் நல்லாப் பாருலெ"

"நல்லாப் பாத்துட்டுத்தான் அம்மா சொல்லச் சொல்லுச்சு"

லேசான பதற்றத்துடன் வீடு வந்தவரிடம் அம்மா படபடவென்று சொன்னாள், "ஓடுங்க... அந்த ரயிலைப் பிடிங்க. எம்மக அதிலெதான் போயிட்டா... அடுத்த டேசன்ல பிடிங்க போங்க."

அண்ணன் வீடு, தம்பி வீடு, மச்சினன் வீடுகளிலிருந்து ஆட்கள் ஓடி வந்தார்கள். இரண்டு பஸ்கள் போய் மூன்றாவதாக வந்த ராமநாதபுரம் பஸ்ஸில் ஏறியும் ஏறாமலுமாக கண்டக்டரிடம் கத்தினார்கள், "பாசஞ்சர் ரயிலைப் பிடிப்பா..."

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இவர்கள் போய்ச் சேர்ந்தபோது ராமநாதபுரம் ரயில் நிலையத்தில் ஈ எறும்பு கூட இல்லை. ஸ்டேஷன் மாஸ்டரிலிருந்து ஒவ்வொருவரிடமாக விசாரித்தார்கள்.

"குடத்தோட ஒரு பொண்ணு எறங்குச்சா...... ?" என்று. யாரும் பார்த்ததாகச் சொல்லவில்லை. ரயில் நிலையத்துக்கு வெளியே வந்து ராமநாதபுரத்தையே சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்துவிட்டுக் கவலையும் அசதியுமாக ஆட்கள் ஊர் திரும்பினார்கள்.

**ஆதங்கம் :** ஒருவர், "மெட்ராசுக்கே போயிருச்சோ புள்ளை" என்று சந்தேகம் எழுப்ப.... ஐயா கத்தினார், "ஒன் கழுத்தைக் கடிச்சு மென்னுபுருவேன், பேசாம இரு" ஐயா கூடப்போய்த் திரும்பிய ஆள்களில் ஒருவர் சொன்னார், "இங்கெ உக்காந்து என்ன செய்யிறது".

**வந்தாள் இந்திரா :** அம்மாவுக்கு இந்தப் பேச்சுக்களைக் கேட்டுக் குமட்டலும் மயக்கமுமாய் வந்தது. ஆவேசம் வந்தவள்போல் ரயில் நிலையத்துக்குள் ஓடினாள். பின்னாலேயே ஐயாவும் ஊர் ஜனமும் ஓடியது. தூரத்தில் ஒரு உருவம் தெரிந்தது. இடுப்பில் தண்ணீர்க்குடத்தோடு இந்திரா கூட்டத்தருகில் வந்தாள். நிறைகுடம், சொட்டுச் சிந்தாமல் கொண்டுவந்துவிட்டாள்.

மகள் வந்து சேர்ந்ததில் மலர்ந்துபோய் ஐயா கேட்டா... "பயமகளே... இதையும் சொமந்துகிட்டா வரணும், இத்தனை மைலுக்கும் ?" இந்திரா சொன்னாள்...,"ஊக்கும்... நாளைக்கு வரை குடிக்க எங்கெ போறது ?"

**முடிவுரை :** தண்ணீரின் இன்றியமையாமையையும், தேவையையும் பண்டைய காலத்திலிருந்து இலக்கியங்கள் வலியுறுத்துக் கொண்டேயிருக்கின்றன. இக்கதையும் அதனையே உணர்த்துகிறது. எனவே தண்ணீரைப் பாதுகாத்து தண்ணீர் பற்றாகுறையைக் களைவோம்.

---

## கற்பவை கற்றபின்....

**1. உலகில் நீர் இல்லை என்றால் என்னவெல்லாம் நடக்கும் என்பதைக் கற்பனை செய்து உங்கள் கருத்துக்களை வகுப்பில் பகிர்ந்து கொள்க.**

இன்றைய தினம் நீருக்கு அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இன்னும் 10 – 15 ஆண்டுகளில் குடிநீருக்கான போர்கள் பூமியில் தொடங்கும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

நீர் இன்று அமையாது உலகு என்று திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார். நீர்தான் உலகில் முக்கிய பங்கு வகிக்கிறது. நீர் இல்லை என்றால் தாவரங்கள் வளராது. தாவரங்கள், மரம், செடிகள் இல்லையென்றால் அதைச் சாப்பிடும் மனிதர்களும், மிருகங்களும், விலங்குகளும் அழிந்துபோகும். விலங்குகள் இல்லையென்றால் அதை உண்டு வாழும் மனிதர்களும் அழிந்து போவார்கள்.

மழை நீர் பெய்யாமல் இருந்தால் விவசாயத்தை மிகவும் பாதிக்கும். விவசாயம் இல்லையென்றாலும் மனிதர்கள் இறந்து விடுவார்கள்.

---

**2.பீங்... பீங்... என்ற சத்தத்துடன் தண்ணீர் வாகனம் ஒன்று வேகமாக வந்து நின்றது. அம்மா குடங்களுடன் ஓடிச் சென்று வரிசையில் நின்றாள். அப்போது கருமேகங்கள் திரண்டன... கதையைத் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.**

இடி இடித்து மின்னல் வெட்டி மழை பெய்ய ஆரம்பித்தது. ஒருசிலர் அந்த மழைத் தண்ணீரைப் பாத்திரத்தில் பிடிக்கத் தொடங்கினர். ஆனால் குடங்களுடன் வந்தவர்கள் தண்ணீர் வாகனத்தைச் சூழ்ந்துக் கொண்டு தண்ணீர் பிடிப்பதிலேயே குறியாய் இருந்தார்கள்.

---



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



கற்கண்டு

## இயல் இரண்டு 2.5 துணை வினைகள்

### மதிப்பீடு

**பலவுள் தெரிக.**
**பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.**
**கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ..................**
**அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ..................**

அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை
இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

**விடை: ஆ) வந்துவிட்டான், வரவில்லை**

### கூடுதல் வினாக்கள் – விடைகள்

**குறுவினா.**

**1. முதல் வினை என்றால் என்ன ?**

ஒரு கூட்டு வினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை முதல் வினை எனப்படும்.

**2. துணை வினை என்றால் என்ன ?**

ஒரு கூட்டு வினையின் இரண்டாவது உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளை விட்டு விட்டு முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை துணை வினை எனப்படும்.

**சிறுவினா.**

**1. தனி வினை என்றால் என்ன ?**

★ படி, படியுங்கள், படிக்கிறார்கள்
★ மேற்காணும் சொற்களில் படி என்னும் வினையடியும், சில ஒட்டுக்களும் உள்ளன. படி என்னும் வினையடி பகாப்பதம் ஆகும். அதை மேலும் பொருள்தரக்கூடிய கூறுகளாகப் பிரிக்க முடியாது.
★ இவ்வாறு தனி வினையடிகளை அல்லது தனி வினையடிகளைக் கொண்ட வினைச் சொற்களைத் தனி வினை என்பர்.

**2. கூட்டு வினை என்றால் என்ன ?**

★ ஆசைப்பட்டேன், கண்டுபிடித்தார்கள்.
★ மேற்காணும் சொற்களில் ஆசைப்படு, கண்டுபிடி அவற்றின் வினையடிகள், அவை பகுபதங்கள் ஆகும்.
★ இவ்வாறு பகுபதமாக உள்ள வினையடிகளைக் கூட்டு வினையடிகள் என்பர். அவ்வகையில் கூட்டு வினையடிகளைக் கொண்ட வினைச் சொற்களைக் கூட்டு வினை என்பர்.

**3.துணை வினைகளின் பண்புகள் யாவை ?**

★ துணை வினைகள் பேசுவோரின் மனநிலை, செயலின் தன்மை போன்றவற்றைப் புலப்படுத்துகின்றன.
★ இவை முதல் வினையைச் சார்ந்து அதன் வினைப்பொருண்மைக்கு மெருகூட்டுகின்றன.
★ பேச்சு மொழியிலேயே துணைவினைகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**4. துணை வினைகச் சொற்களைக் கூறுக.**

★ தற்காலத் தமிழில் ஆம், ஆயிற்று, இடு, ஒழி, காட்டு, கூடும், கூடாது, கொடு, கொண்டிரு, கொள், செய், தள்ளு, தா, தொலை, படு, பார், பொறு, போ, வை, வந்து, விடு, வேண்டாம், முடியும், முடியாது, இயலும், இயலாது, வேண்டும், உள் போன்ற பல சொற்கள் துணைவினைகளாக வழங்குகின்றன.

**5. முதல் வினை, துணை வினை எ.கா. தருக.**

| வினையடி | முதல்வினை | துணைவினை |
|---|---|---|
| இரு | புத்தகம் மேசையில் இருக்கிறது | நான் மதுரைக்குப் போயிருக்கிறேன் |
| | என்னிடம் பணம் இருக்கிறது | அப்பா வந்திருக்கிறார் |
| வை | அவள் நெற்றியில் பொட்டு வைத்தாள் | நீ என்னை அழ வைக்காதே |
| | அவன் வானொலியில் பாட்டு வைத்தான் | அவர் ஒருவரைப் பாட வைத்தார் |
| கொள் | பானை நான்கு படி அரிசி கொள்ளும் | நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான் |
| | நான் சொன்னதை நீ கருத்தில் கொள்ளவில்லை | நோயாளியைப் பார்த்துக் கொள்கிறேன் |

## கற்பவை கற்றபின்....

**1. பொருத்தமான துணைவினைகளைப் பயன்படுத்துக.**

அ) மனிதனையும் விலங்குகளையும் (வேறு) ..................... மொழியாகும்.

**விடை:** மனிதனையும் விலங்குகளையும் **<u>வேறுபடுத்துவது</u>** மொழியாகும்.

ஆ) திராவிட மொழிகள் சில, பொதுப்பண்புகளைப் (பெறு) .....................

**விடை:** திராவிட மொழிகள் சில, பொதுப்பண்புகளைப் **<u>பெற்றிருக்கின்றன</u>**

இ) காலந்தோறும் தன்னைப் (புதுப்பித்து) ..................... மொழி தமிழ்.

**விடை:** காலந்தோறும் தன்னைப் **<u>புதுப்பித்துக்கொள்ளும்</u>** மொழி தமிழ்

ஈ) என் ஐயத்தைக் கேட்பதற்கு எவரேனும் கிடைக்கமாட்டார்களா என்று (தேடு) .....................

**விடை:** என் ஐயத்தைக் கேட்பதற்கு எவரேனும் கிடைக்கமாட்டார்களா என்று **<u>தேடிக்கொண்டிருக்கிறேன்</u>**

**2. கீழ்க்காணும் துணைவினைகளைப் பயன்படுத்திப் புதிய தொடர்களை எழுதுக.**

**அ) வேண்டும் ஆ) பார் இ) உள் ஈ) வா உ) விடு**

**விடைகள் :**

**அ) வேண்டும்** – சான்றோர் காட்டிய பாதையில் நடக்க <u>வேண்டும்</u>

**ஆ) பார்** – பாடத்தை உற்றுப் <u>பார்</u>

**இ) உள்** – செந்தில் ஆசிரியர் கூறியவற்றை <u>உள்</u>வாங்கினான்

**ஈ) வா** – நாளை என் வீட்டுக்கு <u>வா</u>

**உ) விடு** – அப்பா இனி வந்து <u>விடுவார்</u>

**3. பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்துகையில் துணைவினைகளைச் சேர்க்கிறோம். பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றி, ஏற்ற துணைவினைகளை இட்டு எழுதுக.**

**மார்னிங் எழுந்து, பிரஷ் பண்ணி, யூனிஃபார்ம் போட்டு ஸ்கூலுக்குப் போனாள்.**

**விடை :** காலையில் எழுந்து
பல் துலக்கி
சீருடை அணிந்து
பள்ளிக்குப் போனாள்



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**4. சிந்தனை வினா.**

**அ) வேற்றுமொழிச் சொற்களைப் பயன்படுத்துகையில் துணைவினைகளின் பங்கு குறித்துச் சிந்தித்து எழுதுக. (எடுத்துக்காட்டு – பேனாவை யூஸ் பண்ணு)**

| வேற்றுமொழிச் சொற்கள் | துணைவினை |
|---|---|
| பேனாவை யூஸ் பண்ணு | பேனாவைப் பயன்படுத்து |
| வாட்டரைக் குடி | தண்ணீரைக் குடி |

**ஆ) சந்தையில் காய்கறிகளை வாங்கும்போது, உங்களுக்கும் கடைக்காரருக்கும் நடக்கும் உரையாடலைத் துணைவினைகளைப் பயன்படுத்தி எழுதுக.**

**துணை வினைகள் :**

**கண்ணன் :** ஐயா, சத்துள்ள காய் உள்ளனவா ? அதை தரமுடியுமா ?

**கடைக்காரர் :** கண்டிப்பாகத் தர முடியும்

**கண்ணன் :** அதற்கு விலை அதிகம் கொடுக்க வேண்டியிருக்குமோ ?

**கடைக்காரர் :** சத்துள்ள காயின் விலை மலிவாகத் தான் இருக்கும்.

**கண்ணன் :** எனக்கு அதனைத் தாருங்கள்.

## இயல் இரண்டு — 2.6 மொழியை ஆள்வோம் !

**படித்துச் சுவைக்க.**

**பூ மொழி**

*வீட்டின் பக்கத்தில் நிற்கிறது ஒரு மரம்*
*கூடத்துச் சன்னலையும்*
*சமையலறைச் சன்னலையும்*
*விரிந்த கிளைகளால்*
*பார்த்துக் கொண்டிருக்கிறது.*
*கைகளசைத்துக் கால்களுதைத்துக்*
*கூடத்தில் கிடக்கும் சிசு*
*மிழற்றுகிறது ஒரு சொல்லை*
*சமையலறையில்*
*பணி முனைந்திருக்கிற அம்மா*
*அச்சொல்லையே நீள வாக்கியங்களாக்கிப்*
*பதில் அனுப்புகிறாள்.*
*விரல் நீட்டிச் சிசு பேசுகிறது மீண்டும்*
*அத்தொனியிலேயே அம்மா குழறுகிறாள்*
*கடவுளுக்கும் புரியாத அவ்வுரையாடலைக் கிரகிக்கக்*
*கூடத்துச் சன்னலுக்கும்*
*சமையலறைச் சன்னலுக்குமாய்க்*
*கிளைகளின் வழியே ஓடி ஓடிக்*
*கவனிக்கிறது அணில்*
*பெருகும் சொற்களும்*
*அபூர்வ எதிர்வினைகளும்*
*அதீதக் குழப்பத்திலாழ்த்த*
*அணில் ஓடிக் களைக்கிறது சன்னல்களுக்கிடையே*
*அர்த்தங்களை மரம் பூக்களாக மொழிபெயர்த்து*
*அதன்மீது உதிர்த்துக்கொண்டிருப்பது தெரியாமல்*

*– யூமா வாசுகி*

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**அறிஞர்களின் பொன்மொழிகளைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. Every flower is a soul blossoming in nature **- Gerard De Nerval**

**விடை :** ஒவ்வொரு மலரும் இயற்கையாக மலரும்போது சிறப்பினைப் பெறுகிறது.

**.– ஜெரார்ட் டீ நெர்வால்**

2. Sunset is still my favourite colour, and rainbow is second **- Mattie Stepanek**

**விடை :** சூரியன் மறைவு நிறம் எனக்கு மிகவும் பிடித்த நிறமாகும். வானவில்லின் அழகு இரண்டாவதாகப் பிடிக்கும். **– மாட்டி ஸ்டிபெனெக்**

3. An early morning walk is blessing for the whole day **- Henry David Thoreau**

**விடை :** அதிகாலையில் நடைப்பயிற்சி செல்வது அன்றைய நாள் முழுவதும் ஆசியைத் தரும்.

**– ஹென்றி டேவிட் தோரேவ்**

4. Just living is not enough... One must have sunshine, freedom, and a little flower .

**- Hans Christian Anderson**

**விடை :** வாழ்வது மட்டும் போதுமானதல்ல. ஒவ்வொருவருக்கும் ஒளி, ஆற்றல், விடுதலை, மலரின் மென்மை அவசியம். **– ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன்**

---

**பிழை நீக்கி எழுதுக.**

**1. சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தெளலீஸ்வரம் அணையைக் கட்டியது.**

**விடை :** சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தெளலீஸ்வரம் அணையைக் **கட்டினார்.**

**2. மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்.**

**விடை :** மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர **வைத்தான்.**

**3. மழையே பயிர்க்கூட்டமும், உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.**

**விடை :** மழையே பயிர்க்கூட்டமும், உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை **புரிகின்றது.**

**4. நீலனும் மாலனும் அவசரகாலத் தொடர்புக்கான தொலைப்பேசி எண்களின் பட்டியலை வைத்திருக்கிறோம்.**

**விடை :** நீலனும் மாலனும் அவசரகாலத் தொடர்புக்கான தொலைப்பேசி எண்களின் பட்டியலை **வைத்திருக்கின்றனர்.**

**5. சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.**

**விடை :** சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் **தப்பித்தான்.**

---

**பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.**

**1.நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல.**

**விடை :** நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல படிக்கும் மாணவர்களுடன் கலந்தாய்வு செய்த கடைநிலை மாணவர்களும் நல்ல மதிப்பெண் பெற்றனர்.

---

**2. தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்.**

**விடை :** தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைப்பது போலப் பிறர் கூறும் அறிவுரை கடினமானாலும் அது நம்மை நல்வழிப்படுத்தும்.

---

**3. மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.**

**விடை :** மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைப்பதைப் போல கடினமான செயலையும் விடா முயற்சியுடன் செய்தால் வெற்றி பெற முடியும்.

---

**4.கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.**

**விடை :** கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாதது போல நாம் பிறருக்குச் சொல்லிக் கொடுப்பதால் நம்முடைய அறிவானது குறைபடாது.

---


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**வடிவ மாற்றம் செய்க.**

**நீர்ச் சுழற்சி குறித்த கருத்து விளக்கப்படத்தின் உட்பொருளைப் புரிந்துணர்ந்து பத்தியாக மாற்றி அமைக்க.**



நீர்த் தேக்கங்களிலிருந்து நீர் வெப்பத்தால் ஆவியாகி மேகமாக உறைகிறது. அம்மேகங்கள் குளிரும்போது மழையாக மாறிப் பொழிகிறது. பின்னர் அது நீர்த் தேக்கங்களிலும், நிலத்தடியிலும் சேர்கிறது. அதனால் நிலத்தடி நீர் மட்டம் உயர்கிறது. பின்னர் அது மீண்டும் ஆவியாகிறது.

**வரவேற்பு மடல் எழுதுக.**

**சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.**

மதுரை
தேதி:

கல்விப் பணி சிறக்க அயராது பாடுபடும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் கலங்கரை விளக்கே வருக! வருக!!

சுத்தம் சோறுபோடும் எனப் பழமொழிகேற்ப எங்கள் பள்ளியைத் தூய்மை படுத்தியதை இனங்கண்டு சிறந்த பள்ளி எனத் தேர்ந்தெடுத்தமைக்கு மிக்க நன்றி!. உங்கள் வழிகாட்டுதலின்படி எங்கள் பள்ளி மாணவிகள் சுற்றுச் சூழலைப் பேணிக் காக்கும் பணியில் ஈடுபட்டு அப்பணியைச் சிறப்பாக செய்ய ஊக்கமளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கடிதம் கருத்து:**

நெகிழிகளைத் தடைசெய்த எம்பள்ளியில் கழிவுகளுக்குத் தனித் தொட்டிகள், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளுக்குத் தனித்தனி கிடங்குகள், இயற்கை உரங்களைத் தயாரித்து, பராமரித்த தோட்டங்கள் உள்ளன. அத்தகைய எம்பள்ளியைத் தேர்ந்தெடுத்து சிறந்த பள்ளியாக அறிவித்தமைக்கு நன்றி!

அதனைக் கொண்டாடும் இப்பெருவிழாவிற்கு வருகைதரும் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களே ! நேர்மையான கருத்துகளையும் கூர்மையான சிந்தனையும் கொண்டவரே ! மாணவர்கள் நல்வாழ்வு காணவும், கல்வியில் சிறந்தோங்கிடவும் வழிவகை செய்தவரே ! கழிவறைகளைப் பள்ளி எல்லாம் அமைத்திடவும் ஆவண செய்தவரே ! ஏழை மாணவர், மெல்லக்கற்கும் மாணவர்களின் வாழ்க்கை வளம் பெற தெளிவான பாதையில் அமைத்துக் கொடுத்தவரே!

தங்களுடைய பல பணிகளுக்கிடையில் எங்களின் பள்ளிக்கு வருகை தந்துள்ள தங்களை வரவேற்பதில் அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறோம்.

இங்ஙனம்
மாணவிகள்
ஈ.வே.ரா. பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை

**நயம் பாராட்டுக.**

*கல்லும் மலையும் குதித்து வந்தேன் – பெருங்*
*காடும் செடியும் கடந்து வந்தேன்;*
*எல்லை விரிந்த சமவெளி – எங்கும்நான்*
*இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.*
*ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் – பல*
*ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;*
*ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் – மணல்*
*ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.*
*– கவிமணி*

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**திரண்ட கருத்து** : கல்லும், மலையும் குதித்து வந்தேன். காடும் செடியும் கடந்து, சமவெளியில் தவழ்ந்து வந்தேன். மேடுகள் ஏறி, பல குளங்களை நிரப்பிவந்தேன். ஊறாக ஊற்றிலும் உட்புகுந்து, மணல் ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

**மையக் கருத்து** : நீரின் பயணத்தை மையமாகக் கொண்டு கவிமணி பாடுகிறார்.

**மோனைத்தொடை** : செய்யுளில் முதல் எழுத்து ஒன்று போல் வருவது மோனைத்தொடை ஆகும்.
(எ.கா) கல்லும் – காடும், ஏறாத – ஏறி

**எதுகைத்தொடை** : செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வருவது எதுகைத்தொடை ஆகும்.
(எ.கா) கல்லும் – எல்லை, ஏறாத – ஊறாதா

**இயைபுத்தொடை** : செய்யுளின் இறுதி எழுத்தோ, சீரோ ஒன்றி வரத் தொடுப்பது இயைபுத் தொடையாகும்.
(எ.கா) வந்தேன், வந்தேன், வந்தேன் – என உள்ளது.

**அணி** : ஒரு சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும். (எ.கா) வந்தேன், தவழ்ந்து

---

## இயல் இரண்டு — 2.7 மொழியோடு விளையாடு...

**சொல்லுக்குள் சொல் தேடுக.**
**(எ.கா) ஆற்றங்கரையோரம் – ஆறு, கரை, ஓரம்**
**கடையெழுவள்ளல்கள், எடுப்பார்க்கைப்பிள்ளை, தமிழ்விடுதூது, பாய்மரக்கப்பல், எட்டுக்கால்பூச்சி**

| | |
|---|---|
| **கடையெழுவள்ளல்கள்** | – கடை, ஏழு, வள்ளல்கள் |
| **எடுப்பார்க்கைப்பிள்ளை** | – எடு, பார், கை, பிள்ளை |
| **தமிழ்விடுதூது** | – தமிழ், விடு, தூது |
| **பாய்மரக்கப்பல்** | – பாய், மரம், கப்பல் |
| **எட்டுக்கால்பூச்சி** | – எட்டு, கால், பூச்சி |

---

**அகராதியில் காண்க.**
**கந்தி, நெடில், பாலி, மகி, கம்புள், கைச்சாத்து**

| | |
|---|---|
| **கந்தி** | – கமுகு, வாசம் |
| **நெடில்** | – நீளம், மூங்கில், நெட்டெழுத்து |
| **பாலி** | – ஆலமரம் |
| **மகி** | – பூமி, பசு |
| **கம்புள்** | – சங்கு, சம்பங்கோழி |
| **கைச்சாத்து** | – கையொப்பம் |

---

**சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக.**
**(எ.கா) அரிசி போடுகிறேன்.**

**விடை :**
புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் ஒருபோதும் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**1. மழை பெய்தது**

மாலை மழை பெய்தது.
மாலை இடியுடன் மழை பெய்தது.
மாலை இடியுடன் மின்னலுமாய் மழை பெய்தது.
சென்னையில் மாலை இடியுடன் மின்னலுமாய் மழை பெய்தது.
சென்னையில் மாலை இடியுடன் மின்னலுமாய் கன மழை பெய்தது.
நேற்று சென்னையில் மாலை இடியுடன் மின்னலுமாய் கன மழை பெய்தது.

**2. வானவில்லைப் பார்த்தேன்**

வண்ண வானவில்லைப் பார்த்தேன்.
ஏழு வண்ண வானவில்லைப் பார்த்தேன்.
ஆற்றங்கரையில் ஏழு வண்ண வானவில்லைப் பார்த்தேன்.
நான் ஆற்றங்கரையில் ஏழு வண்ண வானவில்லைப் பார்த்தேன்.
நான் இன்று ஆற்றங்கரையில் ஏழு வண்ண வானவில்லைப் பார்த்தேன்.
நான் இன்று மதியம் ஆற்றங்கரையில் ஏழு வண்ண வானவில்லைப் பார்த்தேன்.

**3. குழந்தை சிரித்தது**

அழகாய் அழுத குழந்தை சிரித்தது.
பொம்மையை கொடுத்தவுடன் அழகாய் அழுத குழந்தை சிரித்தது.
வாத்து பொம்மையை கொடுத்தவுடன் அழகாய்அழுத குழந்தை சிரித்தது.
அம்மா வாத்து பொம்மையை கொடுத்தவுடன் அழகாய் அழுத குழந்தை சிரித்தது.

**4. எறும்புகள் போகின்றன**

சாரையாய் எறும்புகள் போகின்றன.
சாரை சாரையாய் எறும்புகள் போகின்றன.
உணவுடன் சாரை சாரையாய் எறும்புகள் போகின்றன.
புற்றுக்கு உணவுடன் சாரை சாரையாய் எறும்புகள் போகின்றன.
தன் புற்றுக்கு உணவுடன் சாரை சாரையாய் எறும்புகள் போகின்றன.

**5. படம் வரைந்தான்**


அழகிய படம் வரைந்தான்.
அழகிய மயில் படம் வரைந்தான்.
காகிதத்தில் அழகிய மயில் படம் வரைந்தான்.
காகிதத்தில் வண்ணமிட்ட அழகிய மயில் படம் வரைந்தான்.
இளங்கோ காகிதத்தில் வண்ணமிட்ட அழகிய மயில் படம் வரைந்தான்.
பள்ளியில் இளங்கோ காகிதத்தில் வண்ணமிட்ட அழகிய மயில் படம் வரைந்தான்.

---

**வேறுபட்ட வினையெச்சங்களைப் பயன்படுத்தி, முதல் வினைகளைத் துணை வினைகளாக மாற்றுக.**

**முதல் வினைகள் – பார்த்தேன், கொடுத்தார், நடந்தான், சேர்ந்தார், அமைத்தோம்**

**(எ.கா) பார்த்தேன்**




1. எழுதிப் பார்த்தேன்
2. தடுக்கப்ப பார்த்தேன்
3. கொடுத்துப் பார்த்தேன்
4. ஓடப் பார்த்தேன்

அ) கொடுத்தார்

எழுதிக்
படிக்கக் கொடுத்தார் வாங்கிக்
பார்த்துக்

1. எழுதிக் கொடுத்தார்
2. படிக்கக் கொடுத்தார்
3. வாங்கிக் கொடுத்தார்
4. பார்த்துக் கொடுத்தார்

ஆ) நடந்தான்

பார்த்து
கேட்டு நடந்தான் வாங்கி
சிரித்து

1. பார்த்து நடந்தான்
2. கேட்டு நடந்தான்
3. வாங்கி நடந்தான்
4. சிரித்து நடந்தான்

இ) சேர்ந்தார்

வந்து
போய்ச் சேர்ந்தார் நடந்து
ஒய்ந்து

1. வந்து சேர்ந்தார்
2. போய்ச் சேர்ந்தார்
3. நடந்து சேர்ந்தார்
4. ஒய்ந்து சேர்ந்தார்

ஈ) அமைத்தோம்

பார்த்து
கண்டு அமைத்தோம் கேட்டு
சேர்த்து

1. பார்த்து அமைத்தோம்
2. கண்டு அமைத்தோம்
3. கேட்டு அமைத்தோம்
4. சேர்த்து அமைத்தோம்

**வினையடிகளை முதல்வினையாகவும் துணைவினையாகவும் அமைந்த தொடர்களாக உருவாக்குக.**

**வினையடி – வா, போ, செய், மாற்று, இரு, கொடு, கொள், எழுது, விடு, போடு**

**(எ.கா) வினையடி–வை**

| வினையடி | முதல் வினை | துணை வினை |
|---|---|---|
| வை | மூட்டையைத் தலையில் வைத்தான்<br>இலையில் இனிப்பை வைத்தனர் | அம்மா குழந்தையைத் தூங்க வைத்தார்.<br>நான் உனக்கு ஒரு நூல் வாங்கி வைத்தேன்.<br>எதற்கும் சொல்லி வை. |

www.Padasalai.Net www.TrbTnpsc.com



விடை :

| வினையடி | முதல் வினை | துணை வினை |
|---|---|---|
| வா | நீ நாளைக்கு வீட்டுக்கு வா | அந்நியர் நம்மை ஆண்டு வந்தனர். |
| போ | அவன் எங்கு போகிறான் ? | மழை பெய்யப் போகிறது. |
| செய் | வேலை செய்தான் | மின் விசிறி வேலை செய்யப்போகிறது. |
| மாற்று | உடையை மாற்றிக் கொள் | கல்வி கல்லாதவரை மாற்றிவிடுகிறது. |
| இரு | என்னிடம் பணம் இருக்கிறது | நான் மதுரைக்குப் போயிருக்கிறேன். |
| கொடு | நான் அவருக்குப் பணம் கொடுத்தேன் | பாடம் சொல்லிக் கொடுப்பேன். |
| கொள் | பானை நான்குபடி அரிசிக் கொள்ளும் | நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான். |
| எழுது | நண்பனுக்குக் கடிதம் எழுது | பாடத்தை எழுதி வருவேன். |
| விடு | யாரையும் உள்ளே விடாதே | அடுத்த மாதம் நான் போய் விடுவேன். |
| போடு | புத்தகத்தைக் கீழே போடாதே | மலிவான விலையில் வாங்கிப் போட்டேன். |

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

*பேதை மனிதரே*
*மில்லி மீட்டர் அளவிலும்*
*எம்மினத்தில் உயிருண்டு*
*தன் எடை போல ஐம்பது*
*மடங்கு எறும்பு சுமக்கும்*
*நீர் சுமப்பீரா ?*

***– வைரமுத்து***



**செயல்திட்டம்.**

**கொடுக்கப்பட்ட இணையத்தள இணைப்பில் உள்ள காணொலியைக் கண்டு அதுகுறித்த உங்கள் கருத்துக்களை இருபக்க அளவில் எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**https://www.youtube.com/watch?v=0ReVrONNvoQ**

## நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள்...**

**அ) தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்.**

**ஆ) வகுப்பறையில் நண்பர்கள் வைத்திருக்கும் புதிய அழகிய பொருள்களைப் பார்த்தால் ஆசை வரும். அவர்களைப் போல நானும் முயன்று உழைத்து அவற்றை என்னுடைய பணத்தில் வாங்குவேன்.**

**இ) அறையை விட்டு வெளியே செல்லும்போது மின்விசிறி, மின்விளக்குகளை நிறுத்திவிட்டுச் செல்வேன்.**

ஈ) தேவையற்ற பொருள்களை வாங்காமல் பணத்தைச் சிக்கனமாக செலவு செய்வேன்.

உ) வீட்டிற்குப் போகும்போது வகுப்பறைக்குள் குப்பை இருந்தால் அதனைக் குப்பைத் தொட்டியில் போடுவேன்.

ஊ) ஆசிரியர் மற்றும் பெற்றோர்களிடம் பணிவாக நடந்துகொள்வேன்.

**கலைச்சொல் அறிவோம்**

**குமிழிக் கல்** – *Conical Stone*
**நீர் மேலாண்மை** – *Water Management*
**பாசனத் தொழில் நுட்பம்** – *Irrigation Technology*
**வெப்ப மண்டலம்** – *Tropical Zone*

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**அறிவை விரிவு செய்**

| | | |
|---|---|---|
| **1.அழகின் சிரிப்பு** | – | *பாவேந்தர் பாரதிதாசன்* |
| **2. தண்ணீர் தண்ணீர்** | – | *கோமல் சுவாமிநாதன்* |
| **3. தண்ணீர் தேசம்** | – | *வைரமுத்து* |
| **4. வாய்க்கால் மீன்கள்** | – | *வெ.இறையன்பு* |
| **5. மழைக்காலமும் குயிலோசையும்** | – | *மா. கிருஷ்ணன்* |

**மறைநீர் (*Virtual Water*)**

கண்ணுக்குத் தெரியாமல் நாம் இரண்டு வகையில் நீரைப் பயன்படுத்துகிறோம். முதல் வகை நாம் பயன்படுத்தும் பொருள்கள் வழியாக; இரண்டாவது வகை நாம் உண்ணும் உணவின் வழியாக. புலப்படாத் தண்ணீர் என்பது உணவுப் பொருள்களின் உற்பத்தி குறித்தும் அதனை உற்பத்தி செய்ய செலவிடப்பட்ட தண்ணீர்த் தேவை குறித்தும் பேசுவது ஆகும். ஒரு கிலோ ஆப்பிளை உற்பத்தி செய்ய 822 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ சர்க்கரையை உற்பத்தி செய்ய 1780 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ அரிசியை உற்பத்தி செய்ய 2500 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ காப்பிக் கொட்டையை உற்பத்தி செய்ய 18, 900 லிட்டர் தண்ணீரும் தேவைப்படுகின்றது. நீர்வளத்தைப் பாதுகாக்க நாட்டின் மேல்புற நீர்வளம் மற்றும் நிலத்தடி நீர்வளம் குறித்து அக்கறை கொள்ளவேண்டும். நீர் அதிகம் தேவைப்படும் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதைத் தவிர்த்து தேவைக்கேற்ப இறக்குமதி செய்துகொள்ள வேண்டும். இதனால் நாட்டின் நிலத்தடி நீரும், ஆற்று நீரும் சேமிக்கப்படும். ***– (மா.அமரேசன் – கண்ணுக்குப் புலப்படாத தண்ணீரும் புலப்படும் உண்மைகளும்)***

---

## இயல் இரண்டு — 2.8 கட்டுரை

### மழைநீர் சேமிப்பு

**முன்னுரை :** இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெரும் பேறு அவற்றுள் நீர் மிகவும் இன்றியமையாதது. அதனை உரிய வகையில் பயன்படுத்தி பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு அளிப்பது நமது பொறுப்பாகும்.

***"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்***
***தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"***

என வள்ளுவரால் போற்றப்பட்ட மழை இல்லையேல் மண்ணுலகில் எந்தச் செயலும் நடைபெறாது.

**மழையின் முக்கியத்துவம் :**

மழையே பயிர்க்கூட்டமும், உயிர்க்கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணை புரிகின்றது. மழை உழவுக்கு உதவுகிறது. விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது.

**மழைநீர் சேமிப்பின் முறை :**

**'சோழ வள நாடு சோறுடைத்து'** என்ற பெருமையுடைய தஞ்சை மாவட்டம் முழுவதும் பஞ்சத்தாலும் பட்டினியாலும் துன்பப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. காரணம் வான் பொய்த்தாலும் தான் பொய்க்காத காவிரியே தண்ணீர் கண்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒரே பாரதத் தாயின் மக்கள் என்று கூறிக் கொண்டே தண்ணீருக்கு பக்கத்து மாநிலத்தாரிடம் போராட வேண்டியுள்ளது. அதனால் மழைக்காலங்களில் தண்ணீரை வீணடிக்காமல் நிலத்தடியில் சேமித்து வைக்க வேண்டும். அப்போது கோடைக்காலத்தில் நாம் துன்பப்பட தேவையில்லை.

**மழைநீரைச் சேமிக்கும் முறை :**

நம் வீட்டின் மேல் விழும் மழை நீரைக் குழாய்கள் மூலம் தரைக்குக் கொண்டு வர வேண்டும். தரைப் பகுதியில் மழை நீர்த்தொட்டி ஒன்றைக் கட்டி அதில் ஆற்று மணலைப் பரப்பி, சரளைக் கற்களை அதன் மேல் பரப்ப வேண்டும். அந்த தொட்டியில் மழைநீரை குழாய்கள் மூலமாக வந்து விழுமாறு செய்ய வேண்டும். இதனால் வீடுகளில் பெய்யும் மழைநீர் நம் வீட்டில் தேங்கி, நிலத்தடி நீரின் அளவு உயரும்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

அதுபோல் ஊர்களில் உள்ள நீர் நிலைகளையும் தூர்வாரி ஆழப்படுத்தினால், அதிகளவில் மழைநீர் அதில் நிறையும். மேலும் பல புதிய அணைகளை கட்ட வேண்டும்.

**மரத்தின் முக்கியத்துவம் :**

மரத்தை வெட்டுவதால் மழையின் அளவு குறைகிறது. அதனால் மரத்தை வெட்டுவதற்கேற்ப பலமடங்கு மரக்கன்றுகளை அமைத்து அவற்றை பராமரித்து வளர்க்க வேண்டும்.

**பயன்கள் :**

குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும். நிலத்தடி நீர் மட்டம் உயரும். வறட்சி குறையும். விவசாயத்திற்குப் பயன்படும். பஞ்சம் ஏற்படாது.

**முடிவுரை :**

முன்பெல்லாம் **"தண்ணீரை போல் பணத்தை செலவழிக்காதே"** என்று சொல்வார்கள். ஆனால் இன்று பணத்தை எண்ணி எண்ணி செலவழிப்பது போல, தண்ணீரை அளந்து அளந்து உபயோகிக்க வேண்டியுள்ளது. அதனால் பருவகாலங்களில் நீரை வீணடிக்காமல் சேமித்து வைக்க வேண்டும். அதற்கு மழைநீர் சேமிக்கும் முறையை நன்கறிந்து உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

---

## கடிதம்

### இன்பச் சுற்றுலா குறித்து நண்பனுக்கு மடல்

83, விவேகானந்தர் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை.
தேதி :

அன்பு தோழி கயல்,

இங்கு நானும் என் பெற்றோரும் நலம். இது போல உன் பெற்றோர் நலனும் அறிய ஆவல்.

நான் எனது குடும்பத்தாருடன் மகாபலிபுரம் சென்று வந்தேன். அங்கு நாங்கள் பார்த்தவற்றை உனக்கு விளக்குகிறேன். அங்கு ஒரே பாறையில் செதுக்கிச் செய்யப்பட்ட ஐந்து இரதக் கோயில்கள் மிகவும் சிறப்பாக இருந்தன. மேலும் வராக மண்டபம் கடற்கரைக் கோயிலை கண்டு மகிழ்ந்தோம். மேலும் அர்ச்சுனன் தபசு என்னும் பாறையில் செதுக்கப்பட்டிருந்த மனிதர்கள், விலங்குகள், பறவைகள் உயிருள்ளவற்றை நேரில் பார்ப்பது போல இருந்தது. நீயும் வரும் கோடை விடுமுறையில் அங்கு சென்று வர வேண்டும் என்பது என் ஆவலாகும்.

உன் ஆருயிர் தோழி
நா. முத்துச் செல்வி

உறை மேல் முகவரி
க.கயல்
63, கம்பர் தெரு,
மதுரை மெயின் ரோடு,
வத்தலகுண்டு – 624 202.
திண்டுக்கல் மாவட்டம்.

அஞ்சல் தலை

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**இயல் மூன்று** — **உள்ளத்தின் சீர்**

**இயல் மூன்று** — **உரைநடை உலகம்**

**3. ஏறுதழுவுதல்**

## மதிப்பீடு

**பலவுள் தெரிக.**

**1. பொருந்தாத இணை எது ?**

அ) ஏறுகோள் – எருதுகட்டி

ஆ) திருவாரூர் – கரிக்கையூர்

இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு

ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்

**விடை: ஆ) திருவாரூர் – கரிக்கையூர்**

**2. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.**

அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்.

ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.

இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்.

ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.

**விடை: ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.**

**3. சொற்றொடர்களை முறைப்படுத்துக.**

அ) ஏறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி இ) தழுவிப் பிடித்தல் என்கிறது

(i)ஆ – அ – இ (ii)ஆ – இ – அ

(iii)இ – ஆ – அ (iv)இ – அ – ஆ

**விடை: (i)ஆ – அ – இ**

---

**குறுவினா.**

**1. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது ?**

1. மாடுபிடித்தல், 2. சல்லிக்கட்டு, 3. மஞ்சு விரட்டு, 4. காளை விரட்டு, 5.எருதுகட்டி.

---

**2. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக ?**

1. கலித்தொகை– ஏறு தழுவுதல், சிலப்பதிகாரம், புறப்பொருள்வெண்பாமாலை– ஏறுகோள்.
2. கண்ணுடையம்மன் பள்ளு – எருதுகட்டி என்னும் மாடு தழுவுதல்.

---

**3. ஏறுதழுவுதல் குறித்துத் தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிடுக.**

1. சேலம் மாவட்டம் – கருவந்துறை – நடுகல்
2. நீலகிரி மாவட்டம் – கோத்தகிரி அருகே கரிக்கையூர் – பாறை ஓவியம்
3. மதுரை மாவட்டம் – உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டி – காளையை அடக்கும் ஓவியம்
4. தேனி மாவட்டம் – மயிலாடும் பாறை அருகே சித்திரக்கல் புடவில் – காளை ஓவியம்
5. சிந்துவெளி அகழாய்வு – கல்முத்திரை

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிறுவினா.**

**1. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக ?**

1. தமிழக உழவர்கள் அறுவடைக்குப் பெரிதும் துணை நின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப்பொங்கல்.

2. இதன் தொடர்ச்சியாக மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறுதழுவுதலாகும்.

3. ஏறு தழுவுதல், முல்லை நிலத்து மக்களின் வீர அடையாளத்தோடு பிணைந்தது.

4. மருதநில வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடு பிணைந்தது.

5. பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடு பிணைந்தது.

6. இதுவே வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியாக விளங்குகிறது.

---

**2. ஏறுதழுவுதல் திணை நிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது ?**

★ ஏறு தழுவுதல், முல்லை நில மக்களின் வீர அடையாளத்தோடும்,

★ மருதநிலத்து வேளாண் தொழில் உற்பத்தியோடும்,

★ பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்திருந்தது.

---

**நெடு வினா.**

**1. ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.**

ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்கள்:

1. தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில் காளையைக் கொன்று அடக்குபவனே வீரன். அவ்விளையாட்டில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு.

2. காளையை அடக்கும் வீரன் வென்றாலும் தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் அந்தக் காளை சில நாட்டு விளையாட்டுக்களில் கொல்லப்படுவதும் உண்டு.

3. அது வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது போல் இருக்கிறது.

4. தமிழகத்தில் நடைபெறும் ஏறு தழுவுதலில் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது.

5. நிகழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர்.

6. எவராலும் அடக்க முடியாத காளைகள் வெற்றிபெற்றதாகக் கருதப்படும்.

7. அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

---

**2. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்யவேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.**

★ உழவர்கள் தங்களின் உழவு சார்ந்த கருவிகளோடு அறுவடைக்குப் பெரிதும் துணை நின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப்பொங்கல்.

★ இதன் தொடர்ச்சியாக வேளாண் குடிகளின் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்து கிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறுதழுவுதலாகும். பின்னர் கலை நிகழ்ச்சிகள் பல நடைபெறும்.

★ கலித்தொகை, சிலப்பதிகாரம் போன்ற சங்க இலக்கியங்களில் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

★ சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட மாடு தழுவும் கல்முத்திரை தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறு தழுவுதலைக்குறிக்கிறது

★ பண்டைய வீர உணர்வை நினைவூட்டும் ஏறுதழுவுதல் விலங்குகளை முன்னிலைப்படுத்தும் வழிபாட்டையும் இயற்கை வேளாண்மையையும் வலியுறுத்தும் பண்பாட்டுக் குறியீடாகும்.

★ ஆகையால் நம் முன்னோர்களின் இத்தகைய பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் ஏறுதழுவுதல் நிகழ்வைக் காணவும், ஏறுகளைப் பேணவும் நாம் உறுதி கொள்ள வேண்டும்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



★ மாட்டுப் பொங்கல் விழாவை பெரிய நிகழ்வாகக் கொண்டாட வேண்டும்.
★ கலை பண்பாட்டு நிகழ்வுகளை ஆண்டுதோறும் விழாவாகக் கொண்டாட வேண்டும்.
★ குழந்தைகளுக்கு நமது பண்பாட்டுக்களையும் வீர விளையாட்டுக்களையும் கற்றுத்தர வேண்டும்.

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. "நிலத்திலிருந்து" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........**

அ) நிலத்தில் + யிருந்து ஆ) நிலம் + இருந்து
இ) நிலத்தில் + இருந்து ஈ) நிலம் + யிருந்து

**விடை: இ) நிலத்தில் + இருந்து**

**2. எருது பொருதார் கல் இடம்பெற்றுள்ள மாவட்டம் .........**

அ) திருச்சி ஆ) மதுரை
இ) சேலம் ஈ) நீலகிரி

**விடை: இ) சேலம்**

**3. திமிலுடன் கூடிய காளையொன்றை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் ........ மாவட்டத்தில் உள்ளன**

அ) மதுரை ஆ) தேனி
இ) நீலகிரி ஈ) சேலம்

**விடை: அ) மதுரை**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ஏறுதழுவுதல் குறிப்புகள் உள்ள பிற்காலச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று ...............

**விடை: பள்ளு இலக்கியம்**

2. புறப்பொருள்வெண்பாமாலை என்னும் நூலில்.............. குறித்துக் கூறப்பட்டுள்ளது.

**விடை: ஏறுகோள்**

3. சிந்துவெளி நாகரிக மக்கள் .............. யைத் தெய்வமாக வழிபட்டனர்.

**விடை: காளை**

**சிறுவினா.**

**1. உலகில் காளைப் போர் குறித்த செய்திகள் எங்கெங்கு இடம்பெற்றுள்ளன ?**

எகிப்தில் உள்ள பெனி – ஹாசன் சித்திரங்களிலும், கிரீட் தீவிலுள்ள கினோஸஸ் என்னுமிடத்தில் உள்ள அரண்மனைச் சித்திரங்களிலும் காளைப் போர் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**4. ஜல்லிக்கட்டு சிறுகுறிப்பு தருக.**

★ சல்லிக்கட்டு பேச்சு வழக்கில் திரிபுற்று ஜல்லிக்கட்டு என அழைக்கப்படுகிறது.
★ சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையத்தினைக் குறிக்கும்.
★ சல்லி நாணயங்களை துணியில் முடிந்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கம் இருந்ததால் அப்பெயர் ஏற்பட்டது. மாட்டைத் தழுவும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும்.

**தொடர்களில் உள்ள சந்திப் பிழையை நீக்கி எழுதுக.**

**கலி தொகையில் ஏறுதழுவுதல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது**

**விடை** – கலித்தொகையில் ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது

**ஒருமைப் பன்மைப் பிழை நீக்கி எழுதுக.**

**கல் முத்திரை ஏறுதழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்கள்.**

**விடை** – கல் முத்திரை ஏறுதழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கீழே கொடுக்கப்பட்டுள்ள அடிகளில் உள்ள எதுகை, மோனையைக் கண்டறிந்து எழுதுக.**

**எழுந்தது துகள்**
**ஏற்றனர் மார்பு**
**கவிழ்ந்தன மருப்பு**
**கலங்கினர் பலர்**

**எதுகை** – கலங்கினர் – பலர்; எழுந்தது – கலங்கினர்; ஏற்றனர் – மருப்பு

**மோனை** – எழுந்தது – ஏற்றனர்; மார்பு – மருப்பு; கவிழ்ந்தன – கலங்கினர்

---

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

**சங்ககாலத் தமிழர்கள் இயற்கையைச் சார்ந்தும் பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்தனர்**

**விடை :** சங்ககாலத் தமிழர்கள் எவ்வாறு வாழ்ந்தனர் ?

---

## கற்பவை கற்றபின்..

**1. இலக்கியங்கள் காட்டும் ஏறுதழுவுதல் காட்சிகளை உங்கள் பகுதியில் நடைபெற்ற எருது விடும் விளையாட்டு நிகழ்வுடன் ஒப்பிட்டு வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**ஆனந்தி:** சங்க காலத்தில் வேளாண் குடிகளின் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்து கிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறுதழுவுதல் ஆகும்.

**தேவிப்பிரியா:** ஆம். சரியாகக் கூறினாய்... இக்காலத்திலும் நம் பகுதியில் ஏறுதழுவுதல் விளையாட்டு நடைமுறையில் உள்ளது.

**அன்பரசு:** ஏறுதழுவுதல் இன்றைக்கு நடைமுறையில் உள்ளதா ?

**தினகரன்:** ஆம்! ஆனால் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

**தேவிப்பிரியா:** ஆம். ஏறு தழுவுதலை மாடுபிடித்தல், மாடு அணைத்தல், மாடுவிடுதல், மஞ்சுவிரட்டு, எருதுகட்டி, காளைவிரட்டு, ஏறுவிடுதல், சல்லிக்கட்டு எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது

**பூங்குழலி:** ஓ...அப்படியா!... எங்கள் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு என்னும் பெயரில் தை மாதம் நடைபெறும்

**அன்பரசு:** சங்க காலத்தில் புளியங்கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணிவிப்பார்கள். மேலும் அக்காலத்தில் புழங்கிக் கொண்டிருந்த சல்லி நாணயங்களை துணியில் முடிந்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கம் இருந்தது. மாட்டைத் தழுவும் வீரருக்கு அந்தப் பண முடிப்புச் சொந்தமாகும்.

**லட்சுமி:** சரியாகக் கூறினாய்... எனது ஊரில் ஏறு தழுவுதல் நடைபெறும். அப்பொழுது மாட்டை அடக்கும் வீரருக்கு ரொக்கமாகப் பணம் அல்லது பரிசுப் பொருள் வழங்கப்படும்.

---

**2. உங்கள் ஊரில் பொங்கல் விழா நடைபெறுகிறது. அவ்விழாவில் சாக்கு ஓட்டம், தவளை ஓட்டம், புட்டியில் தண்ணீர் நிரப்புதல், இசை நாற்காலி, உருளைக்கிழங்கு பொறுக்குதல், ஊசியில் நூல் கோத்தல், கோலம் போடுதல், கயிறு இழுத்தல், மெதுவாக மிதிவண்டி ஓட்டுதல், பானை உடைத்தல் ஆகிய போட்டிகள் நடைபெறுகின்றன. அப்போட்டிகள் குறித்து நேரடி வருணனை செய்க.**

போட்டிகளில் கலந்து கொள்ள வந்திருக்கும் அனைவருக்கும் நன்றி. பொங்கல் விழாவை முன்னிட்டு இதோ முதலில் நடைபெறும் போட்டி.

**சாக்கு ஓட்டம் :** சாக்கு ஓட்டத்தில் பல்வேறு வயதிற்கு உட்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொள்கிறார்கள். கீழிருந்து இடுப்பு வரை சாக்குகளைப் போர்த்திக்கொண்டு கைகளால் பிடித்தபடி, தாவித் தாவி செல்கிறார்கள். கீழே விழுபவர் ஆட்டத்தில் இருந்து நீக்கப்படுவார். முதலில் இலக்கை அடைபவர் வெற்றியாளர் ஆவார்.

**தவளை ஓட்டம் :** கையினை கால்களுக்கு இடையே வைத்துக்கொண்டு கையினை ஊன்றித் தாவித் தாவிச் செல்கிறார்கள். பட்டவர் தொடுவதற்காக விரட்டிவர மற்றவர் பிடிபடாமல் நகர்ந்து போய்க் குறிப்பிட்ட எல்லையை நோக்கித் தத்திச் செல்கிறார்கள். சிறுவர் பலர் தவளை போல் தத்திச் செல்கிறார்கள்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**புட்டியில் தண்ணீர் நிரப்புதல்:** நீரை ஐந்துவிரல்களை ஒட்டியபடி எடுத்துக்கொண்டு மறுமுனையில் உள்ள புட்டியில் தண்ணீரை சிதறாமல் பதற்றமின்றி சிறுவர்கள் ஊற்றி நிரப்புகின்றார்கள். போட்டியின் முடிவில் யார் அதிகமாகத் தண்ணீரைப் புட்டியில் நிரப்பியுள்ளாரோ அவரே வெற்றியாளர் ஆவார்.

**இசை நாற்காலி :** இசை நாற்காலி விளையாட்டு இதோ ஆரம்பமாகிவிட்டது. இதன் விதிகளைக் கூறுகிறேன். நாற்காலிகளை வெளிப்பக்கம் பார்க்குமாறு அடுக்குவார்கள். பின் இசை இசைக்கப்படும். அனைவரும் நாற்காலிகளைச் சுற்றிச் சுற்றி ஓடவேண்டும். இசை எப்போது நிறுத்தப்படுகிறதோ, அப்போது அனைவரும் நாற்காலியில் அமரவேண்டும். அமர நாற்காலி இல்லாதவர் வெளியேற்றப்படுவார். ஒவ்வொரு முறை வெளியேற்றப்படும்போதும் ஒரு நாற்காலியைக் குறைக்க வேண்டும். இறுதியில் நாற்காலியில் உட்காருபவரே வெற்றியாளர்.

**உருளைக்கிழங்கு பொறுக்குதல் :** ஒரு முனையில் கொட்டியிருக்கும் உருளைக் கிழங்குகளைப் பொறுக்கிக் கொண்டு மற்றொரு முனையில் உள்ள கூடையில் போடுகிறார்கள். இறுதியில் யார் அதிக உருளைக்கிழங்குகளைப் பொறுக்கியிருக்கிறார்களோ அவர்களே வெற்றியாளர் ஆவார்.

**ஊசியில் நூல் கோத்தல்:** மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் அனைவரும் இப்போட்டியில் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்கிறார்கள். அனைவரும் போட்டியில் முழுக்கவனத்துடன் ஊசியில் நூலைக் கோர்க்கிறார்கள்.

**கோலம் போடுதல்:** பெண்கள் அனைவரும் மிக ஆர்வத்துடன் கோலம் போடுகிறார்கள். இறுதியில் யார் அழகான கோலம் வரைந்துள்ளார்களோ அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

**கயிறு இழுத்தல்:** வலது குழு கயிறை வேகமாக இழுக்கிறது, இடது குழு கயிறை மெதுவாக இழுக்கிறது. எனவே வலது குழுவே வெற்றிக் குழுவாகும்.

**மெதுவாக மிதி வண்டி ஓட்டுதல் :** சிறுவர்கள் மிதிவண்டியை மிகவும் மெதுவாக ஓட்டத் துவங்கினார்கள். மிகவும் மெதுவாக மிதிவண்டியை ஓட்டி யார் இறுதியாக இலக்கை அடைகிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர். நடுவில் கால்களை கீழே வைத்தவர்கள் விளையாட்டில் இருந்து நீக்கப்படுவார்கள்.

**பானை உடைத்தல் :** இதோ பானை உடைப்பவர் வந்துவிட்டார். அவர் கையில் கம்பு ஒன்றைக் கொடுங்கள். அவரது கண்களைக் கட்டுங்கள். அவரை இரண்டு மூன்று சுற்றுக்கள் திருப்பி விடுங்கள். 20 அடி தொலைவில் பானை வைக்கப்படும். பானைஉடைப்பதற்கு மூன்று வாய்ப்புகள் தரப்படும். உடைக்காவிட்டால் அவரது கண்கட்டு அவிழ்த்து விடப்பட்டு வேறொருவருக்கு வாய்ப்புத் தரப்படும். இறுதியில் பானை உடைத்தவருக்கே பரிசுவழங்கப்படும்.

## இயல் மூன்று — கவிதைப்பேழை

## 3.1 மணிமேகலை

**பலவுள் தெரிக.**

**1.ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்**

அ) திசைச் சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) உரிச் சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

**விடை: ஈ) தொகைச் சொற்கள்**

**குறுவினா.**

**1.பழமணல் மாற்றுமின் ; புதுமணல் பரப்புமின் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :** மணிமேகலை விழாவறைக் காதையில் முரசு கொட்டுபவன் இவ்வரிகளைக் கூறினான்.

**பொருள் விளக்கம் :** புகார் நகரில் இருபத்தெட்டு நாட்கள் இந்திரவிழா நடைபெறுவதால், தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புது மணலைப் பரப்புங்கள் என்று இவ்வடி விளக்குகிறது.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**2. பட்டிமண்டபம், பட்டிமன்றம் இரண்டும் ஒன்றா விளக்கம் எழுதுக.**

பட்டிமண்டபம், பட்டிமன்றம் இரண்டும் ஒன்றே.

**விளக்கம் :** பட்டி மண்டபம் என்பதுதான் இலக்கிய வழக்கு. ஆனால் இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள். பேச்சு வழக்கிலும் ஏற்றுக் கொள்கிறோம்.

---

**சிறுவினா.**

**1.உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.**

**அ) எங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகள் :**

1. கோவிலையும், தெருக்களையும் தூய்மைப் படுத்துவார்கள்
2. தென்னையோலையால் தெருவெங்கும் பந்தல் கட்டுவார்கள்
3. வாழை மரங்களைக் கட்டிவைப்பார்கள்
4. நாடகம், இசைக் கச்சேரி, கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் போன்றவற்றை நடத்திட ஏற்பாடு செய்வார்கள்.

**ஆ) இந்திர விழா நிகழ்வுகள் :**

1. தெருக்களிலும், மன்றங்களிலும் பூரணகும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மற்றும் மங்கலப் பொருட்களைமுறையாக அழகுபடுத்திவைப்பார்கள்.
2. பாக்கு மரம், வாழை மரம், வஞ்சிக் கொடி, பூங்கொடி, கரும்பு போன்றவற்றை நட்டு வைத்தனர்.
3. வீடுகளின் முன் தெருத்திண்ணையில் இருக்கும் தங்கத் தூண்களில் முத்து மாலைகளைத் தொங்கவிட்டனர்.
4. விழாக்கள் நிறைந்த மூதூரின் தெருக்களிலும், மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்பினார்கள்.
5. சொற்பொழிவு, பட்டிமண்டபம் நடத்தினார்கள்.

---

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. "தோம்" என்னும் சொல்லின் பொருள்.........**

அ) மன்றம் ஆ) குற்றம் இ) தூண் ஈ) மாலை **விடை: ஆ) குற்றம்**

**2. "கோட்டி"என்னும் சொல்லின் பொருள்.........**

அ) மாலை ஆ) மன்றம் இ) மழை ஈ) போர் **விடை: ஆ) மன்றம்**

**3. "துணியாலான கொடி"என்னும் பொருளை உணர்த்தும் சொல்.........**

அ) வசி ஆ) செற்றம் இ) விலோதம் ஈ) துருத்தி **விடை: இ) விலோதம்**

**4. பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடுக்க**

அ) வசி – மழை ஆ) தாமம் – சினம்
இ) கலாம் – போர் ஈ) துருத்தி – ஆற்றிடைக்குறை **விடை: ஆ) தாமம் – சினம்**

**5. எண்பேராயம் – இவற்றில் பொருந்தாது எது ?**

அ) தூதர் ஆ) கனகச்சுற்றம்
இ) யானை வீரர் ஈ) இவுளி மறவர் **விடை: அ) தூதர்**

**6. ஐம்பெருங் குழுக்களில் ஒருவர் ...........**

அ) கனகச்சுற்றம் ஆ) கருமவிதிகள் இ) கடைக்காப்பாளர் ஈ) சாரணர்
**விடை: ஈ) சாரணர்**

---

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. "குழீஇ" என்னும் சொல்லின் பொருள் ............... **விடை: ஒன்றுகூடி**
2. "பொலம்" என்னும் சொல்லின் பொருள் ............... **விடை: பொன்**
3. "தூணம்" என்னும் சொல்லின் பொருள் ...............யை உணர்த்துகிறது. **விடை: தூண்**
4. "தாமம்" என்னும் சொல்லின் பொருள் ...............யை உணர்த்துகிறது. **விடை: மாலை**
5. "வசி" என்னும் சொல்லின் பொருள் ...............யை உணர்த்துகிறது. **விடை: மழை**
6. "செற்றம்" என்னும் சொல்லின் பொருள் ...............யை உணர்த்துகிறது. **விடை: சினம்**

www.Padasalai.Net www.TrbTnpsc.com



7. "கலாம்" என்னும் சொல்லின் பொருள் ...............யை உணர்த்துகிறது. **விடை: போர்**

9. "துருத்தி" என்னும் சொல்லின் பொருள் ...............யை உணர்த்துகிறது.
**விடை: ஆற்றிடைக்குறை**

---

**குறுவினா.**

**1. அரசர்க்குரிய அமைச்சர் குழுக்கள் யாவை ?**

1. ஐம்பெருங்குழு 2. எண்பேராயம்

---

**சிறுவினா.**

**1. ஐம்பெருங்குழுக்களில் உள்ளோர் யாவர் ?**

**ஐம்பெருங்குழுக்களில் உள்ளோர் :**

1. அமைச்சர் 2. சடங்கு செய்விப்போர் 3. படைத்தலைவர்
4. தூதர் 5. சாரணர் (ஒற்றர்)

---

**2. எண்பேராயத்தில் உள்ளோர் யாவர் ?**

**எண்பேராயத்தில் உள்ளோர்:**

1. கரணத்தியலவர் 2. கரும விதிகள் 3. கனகச்சுற்றம் 4. கடைக்காப்பாளர்
5. நகர மாந்தர் 6. படைத்தலைவர் 7. யானை வீரர் 8. இவுளி மறவர்

---

**3. முரசறைவோன் அறிவித்த வாழ்த்துச் செய்தி யாது ?**

**"பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் பெருகுவதாக"** என வாழ்த்தி மேற்கண்ட செய்திகளை நகருக்கு முரசறைவோன் அறிவித்தான்.

---

**4. சாத்தன் குறிப்பு தருக.**

**ஆசிரியர் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| **இயற்பெயர்** | : | சாத்தன் |
| **சிறப்புப் பெயர்** | : | கூலவாணிகம் (கூலம் – தானியம்) செய்ததால் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என அழைக்கப்பட்டார். |
| **ஊர்** | : | திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சீத்தலை |
| **வாழ்ந்த இடம்** | : | மதுரை |
| **காலம்** | : | கி.பி. 2 ஆம் நூற்றாண்டு |
| **சிறப்பு** | : | தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற் புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார் |

---

**5. மணிமேகலை நூல் குறிப்பு தருக.**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | மணிமேகலை |
| **இயற்றியவர்** | : | கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் |
| **சிறப்பு** | : | ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம், பண்பாட்டுக் கூறுகளைக் காட்டும் தமிழ்க் காப்பியம். இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான இது தமிழ் மக்களின் வாழ்வியலைச் சொல்லும் கருவூலமாகும். |
| **நூலின் வேறு பெயர்** | : | மணிமேகலைத் துறவு |
| **சமயம்** | : | பௌத்த சமயம் |
| **காதை** | : | முப்பது |
| **முதல் காதை** | : | விழாவறைக் காதை |

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**இலக்கணக் குறிப்பு தருக.**

1. தோரணவீதியும், தோமறு கோட்டியும் என்பதன் இலக்கணக்குறிப்பு ............
**விடை : எண்ணும்மைகள்**

2. காய்க்குலைக் கமுகு , பூக்கொடி வல்லி, முத்துத்தாமம் என்பதன் இலக்கணக்குறிப்பு ............
**விடை : இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகைகள்**

3. மாற்றுமின், பரப்புமின் என்பதன் இலக்கணக்குறிப்பு ............ **விடை : ஏவல் வினைமுற்றுகள்**

4. உறுபொருள் என்பதன் இலக்கணக்குறிப்பு ............ **விடை : உரிச்சொல்தொடர்**

5. தாழ்பூந்துறை என்பதன் இலக்கணக்குறிப்பு ............ **விடை : வினைத் தொகை**

6. பாங்கறிந்து என்பதன் இலக்கணக்குறிப்பு ............ **விடை : இரண்டாம் வேற்றுமைத் தொகை**

7. நன்பொருள், தண்மணல், நல்லுரை என்பதன் இலக்கணக்குறிப்பு ............
**விடை : பண்புத் தொகைகள்**

---

**பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**1. பரப்புமின் என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்**

**விடை :** **– பரப்பு + மின்**

பரப்பு – பகுதி

மின் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி

**2. அறைந்தனன் என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்**

**விடை :** **– அறை + த்(ந்) + த் + அன் + அன்**

அறை – பகுதி; த் – சந்தி,

த் – ந் ஆனது விகாரம்;

த் – இறந்தகால இடைநிலை

அன் – சாரியை

அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

---

**தொகைச் சொற்கள் :**

**1. மும்முரசு** – படைமுரசு, கொடை முரசு, மணமுரசு

**2. ஐம்பெருங்காப்பியம்** – சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

**3. ஐஞ்சிறுங்காப்பியங்கள்** – யசோதர காவியம், உதயகுமார காவியம், நாககுமார காவியம், நீலகேசி, சூளாமணி.

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்பவை கற்றபின்....

**1. உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கான அழைப்பிதழ் ஒன்றினை வடிவமைக்க**

உ

ஸ்ரீ சவுண்டம்மன் துணை

அருப்புக் கோட்டை, சொக்கலிங்கபுரம், ஈரானியபுரம் ஓசை சவுண்டம்மன் கோவில்
பங்குனிப் பொங்கல் விழா

நிகழ்ச்சி நிரல்

| நாள் | நேரம் | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| ஏப்ரல் 9 | மாலை 7.00மணி | காப்பு கட்டுதல் |
| ஏப்ரல் 13 | காலை 9.00 மணி | பந்தல் கால் நடுதல் |
| ஏப்ரல் 17 | பிற்பகல் 2.00 மணி<br>மாலை 5.00 மணி | பூசாரி அழைத்தல், கரகம் எடுத்துப் புறப்படுதல் விளையாட்டுப் போட்டிகள், முளைப்பாரி வலம் வருதல் சொற்பொழிவு – ஆசிரியர்.மு.ரமேஷ் ஐயாஅவர்கள் கத்தி ஆட்டம் (அலகு சேவை) சிலம்பாட்டம் |
| ஏப்ரல் 18 | காலை 7.00 மணி<br>பிற்பகல் 2.00 மணி<br>இரவு 7.00 மணி | ரதி சேர்த்தல், சக்தி அழைக்க புறப்படுதல்<br>விளையாட்டுப் போட்டிகள்<br>கலை நிகழ்ச்சிகள் |
| ஏப்ரல் 19 | காலை 7.00 மணி<br>காலை 10.00 மணி<br>மாலை<br>இரவு | கோலப்போட்டி<br>சுமங்கலி பூஜை (கோவில் எதிர் வீட்டில் பெயர் கொடுக்கவும்)<br>முளைப்பாரி புறப்படுதல், பரிசுகள் வழங்குதல்<br>அம்மன் பல்லக்கு புறப்படுதல் |
| ஏப்ரல் 20 | காலை 6.00 மணி<br>காலை 9.00 மணி | மஞ்சள் நீராடுதல்<br>அம்மன்அருட்பிரசாதம் வழங்குதல் |

**2. குறிப்புகளைக் கொண்டு ஓர் இயற்கைக் காட்சியை விரித்தெழுதுக.**

**பூஞ்சோலை – சிரிக்கும் மலர்கள் – பசுமையான புல்வெளி – கூவும் குயில் – வீசும் தென்றல் – விளையாடும் குழந்தைகள் – அழகிய காட்சிகள்**

மாலை வேளையில் களைப்புடன் சற்று நேரம் நான் பூஞ்சோலைக்குச் சென்றேன். அங்கு அடர்ந்த மர உச்சியில் அழகிய பறவைகளின் கூட்டினைக் கண்டு வியந்தேன். அதன் அடர்ந்த நிழலில் தஞ்சம் அடைந்தேன். அங்குள்ள சிரிக்கும் மலர்களைக் காண்கையில் என் உள்ளம் மகிழ்ச்சியடைந்தது. பசுமையான புல்வெளியின் மேல் சற்று நேரம் அமர்ந்திருந்தேன். அவ்வப்போது என் செவியினை வந்தடைந்தது கூவும் குயிலின் ஓசை... ஆஹா! என்ன ஒரு இனிமை.... பின் பூவாசம் புடைசூழ வீசும் தென்றல் என்னைத் தீண்டி உடை புகுந்தது. என் களைப்பு பறந்தது.

அங்கு சற்றுத் தொலைவில் விளையாடும் குழந்தைகளைக் கண்டேன். அவர்கள் பூத்துக்குலுங்கும் சிரிப்புடன் விளையாடி மகிழ்ந்தார்கள். பூக்களின் புன்னகையில்தான் எத்தனை வண்ணங்கள் பார்ப்பதற்கு... அழகிய காட்சிகளாகத் தோன்றியது. மனநிறைவடைந்தேன். வீடு திரும்பினேன்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



விரிவானம்

## இயல் மூன்று 3.2 அகழாய்வுகள்

### மதிப்பீடு

**குறுவினா.**

**1. தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும் ஏன் ?**

★ அகழாய்வில் கிடைத்த ஆவணங்களே அடுத்த தலைமுறைக்கு நம் பண்பாட்டின் மேன்மையைப் பறை சாற்றும்.

★ நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தித் தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெரும் கல்வியாக அமைகின்றது.

---

சிறுவினா.

**1. வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்துரைக்க.**

★ நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கை முறையை வாழ்ந்தவர்கள்

★ தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

★ பழமையின் பட்டையை உரித்துக்கொண்டுதான் புதுமையே பிறக்கும். தனியாகப் புதுமைக்கென்று வேரோ விதையோ கிடையாது.

★ நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தித் தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெரும் கல்வியாக அமைகிறது.

★ வணிக அறிவியலின் விளைவுதான் நெகிழிக் குப்பைகள். ஆனால் அகழாய்வில் கிடைத்த பொருள்கள் பல நூற்றாண்டுகளாக வாழையடி வாழையாகப் பயன்பாட்டில் இருந்தன.

---

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. இராபர்ட் புரூஸ்புட் பல்லாவரத்தில் கல்லாயுதத்தைக் கண்டறிந்த ஆண்டு ?**

அ) 1863 ஆ) 1898 இ) 1914 ஈ) 1941 **விடை: அ) 1863**

**2. 1914 ஆம் ஆண்டு முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் ?**

அ) பல்லாவரம் ஆ) கோவை
இ) ஆதிச்சநல்லூர் ஈ) கீழடி
**விடை: இ) ஆதிச்சநல்லூர்**

**3. பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின் – இவ்வடி எந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது ?**

அ) சிலப்பதிகாரம் ஆ) திருவாசகம்
இ) மணிமேகலை ஈ) கம்பராமாயணம்
**விடை: இ) மணிமேகலை**

---

**குறுவினா.**

**1. அரிக்கமேடு அகழாய்வு மூலம் எவை உறுதிப்படுத்தப்பட்டது ?**

அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மண்பாண்டங்கள் கிடைத்தன. அதனால் ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நெடுவினா.**

**1.அகழாய்வின் முக்கியத்துவத்தைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :** பண்பாட்டு அளவில் சிறந்த வாழ்வை வெளிப்படுத்திய தமிழர்களின் வரலாற்றை அறிந்து கொள்ளத் தமிழகத்தின் தொன்மையான பகுதிகளை அகழாய்வு செய்தல் இன்றியமையாதது.

**அகழாய்வு :** அகழாய்வு செய்தல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியை செதுக்கிச் செதுக்கி ஆராய்தல் ஆகும். அகழாய்வு வரலாறு முழுமை பெற உதவுகிறது. அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நாம் வாழ்ந்த காலத்தை மட்டுமின்றி, நமது வரலாற்றையும் உணர்த்துகின்றன.

**அகழாய்வின் அவசியம் :** பெரும்பான்மையான இடங்கள், இறப்பு தொடர்பான தடயங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. ஆனால், கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப் பகுதியும் செங்கல் கட்டுமானங்களும் இதரப் பொருட்களும் தமிழரின் உயரிய நாகரிகத்தைக் கண்முன் காட்டும் சாட்சிகளாய் அமைந்துள்ளன.

**பண்பாட்டை அறிதல்:** மண்ணைத் தோண்டிப் பார்ப்பது எலும்புகளைச் சேகரித்து எண்ணிப் பார்ப்பதற்கன்று, நம் முன்னோர்களின் பண்பாட்டை எண்ணிப் பார்ப்பதற்கு. நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

**பண்பாட்டின் மேன்மை :** மடிக்கணினியில் பூக்கின்ற ரோஜா மணக்காது. செல்லிடப் பேசியில் பார்க்கும் வற்றல் குழம்பு சுவைக்காது. மாறாக நமது மூளையைக் குப்பைத் தொட்டியாக்கும். நமது மண்ணை நெகிழிக் கிடங்காக மாற்றும். ஆனால், அகழாய்வில் கிடைத்த ஆவணங்களோ அடுத்த தலைமுறைக்கு நம் பண்பாட்டின் மேன்மையை பறைசாற்றும்.

**பண்டைக்காலச் சிறப்பு :** நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தித் தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெரும் கல்வியாக அமைகின்றது. தமிழகத்தில் பண்டைக் காலத்திலேயே நமது தமிழ் முன்னோர்கள் செம்மையான பண்பாட்டுக் கட்டமைப்போடு வாழ்ந்திருக்கிறார்கள்.

**அகழாய்வு உணர்த்துபவை :** நமது முன்னோர்கள் கண்டுபிடித்துப் பயன்படுத்திய சுடுமண்ணாலும் உலோகத்தாலும் செய்யப்பட்ட பொருள்கள் பல தலைமுறைகளைக் கடந்து பயன்பாட்டில் இருந்திருக்கின்றன. அகழாய்வு தரும் சான்றுகளின் மூலம் நமது வளமான வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்துகொண்டு வலிமையான எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

**அறிவியலின் வகைப்பாடு :** அறிவியலில் இரண்டு வகையுண்டு. ஒன்று வணிக அறிவியல். மற்றொன்று மக்கள் அறிவியல். வணிக அறிவியல் முதலீட்டைப் பெருக்குவதற்காகப் பொருள்களைக் கண்டுபிடிக்கிறது. அதனை விற்பனை செய்கிறது. அதன் விளைவுதான் நெகிழிக்குப்பைகள். ஆனால், அகழாய்வில் கிடைத்த சுடுமண், கல், இரும்பு, செம்பு ஆகியவற்றாலான புழங்கு பொருள்கள், கருவிகள் பல நூற்றாண்டுகளாக வாழையடி வாழையாகப் பயன்பாட்டில் இருந்தன.

**மக்கள் அறிவியல்:** மக்கள் அறிவியல் என்ற மகத்தான சிந்தனையைப் புரிந்து கொள்வதற்கும் நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக்கொண்டு சிறப்பாக வாழ்வதற்கும் அகழாய்வு துணை நிற்கின்றது.

**முடிவுரை :** அகழாய்வு என்பது அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய, புரிந்து கொள்ள வேண்டிய தேவையான செயல்பாடாகும். அகழாய்வைத் தொடர்வோம்,தொன்மை வரலாற்றை மீட்போம்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்பவை கற்றபின்...

**1. இளைஞர்களிடையே பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிப்பது குடும்பமா? சமூகமா? – என்னும் தலைப்பில் சொற்போர் நிகழ்த்துக.**

**நடுவர்** : அன்பிற்குரிய நல்லுள்ளங்களே.., வணக்கம். இன்று இளைஞர்களிடையே பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிப்பது குடும்பமா? சமூகமா? என்னும் தலைப்பில் சொற்போர் நிகழ்த்த, முத்து, பாத்திமா, அன்புமேரி, செல்வன் ஆகியோர் பங்கேற்கின்றனர். அவர்கள் வாதத்தை ஆரம்பிக்கவும்.

**அன்புமேரி** : ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்ற பழமொழிக்கேற்ப சிறுவயதில் குடும்பத்தில்தான் நல்ல பண்பாட்டினை ஒருவன் பெறமுடியும்.

**பாத்திமா** : நாட்டுப்பற்று, தேசப்பற்று, தேசிய ஒருமைப்பாடு, மனிதநேயம் போன்றவற்றை சமூகத்தில்தான் ஒருவன் அறிந்து கொள்கிறான்

**முத்து** : தாயிற் சிறந்த கோவிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை – இச்சொற்கள் மூலம் பண்பாட்டினை குடும்பத்தில்தான்ஒருவன் அறிகிறான்.

**செல்வன்** : திருவிழாக்கள் மூலம்தான் இளைஞர்கள் பண்பாட்டினை வளர்க்க முடியும்

**நடுவர்** : பல குடும்பங்கள் இணைந்ததுதான் சமுதாயம் ஆகும். எனவே, இளைஞர்களிடையே பண்பாட்டினை வளர்ப்பது குடும்பமே.

---

**2. தொல்லியல் துறை சார்ந்த அலுவலர் ஒருவரிடம் நேர்காணல் நிகழ்த்துவதற்கான வினாப் பட்டியலை உருவாக்குக.**

**வினா 1:** ஐயா. நீங்கள் பிறந்த ஊர் எது?

**வினா 2:** தொல்லியல் துறை எந்த ஆண்டில் துவங்கப்பட்டது?

**வினா 3:** நீங்கள் மேற்கொண்ட ஆய்வினுள் ஏதேனும் மறக்கமுடியாத நிகழ்வுகள் உண்டா?

**வினா 4:** தொல்லியல் சார்ந்த படிப்புகள் உள்ளதா?

**வினா 5:** தமிழகத்தில் அகழாய்வுகள் நடத்தப்பட்ட இடங்கள் யாவை?

**வினா 6:** தொல்லியல் மூலம் கண்டெடுக்கப்பட்டதை நீங்கள் என்ன செய்வீர்கள்? அதன் மூலம் நீங்கள் பெறும் பயன் என்ன?

**வினா 7:** இன்றைய தலைமுறைக்கு நீங்கள் கூற விரும்பும் கருத்து யாது?

**வினா 8:** இத்துறைக்கு நீங்கள் வருவதற்கான காரணம் என்ன?

**வினா 9:** தொல்லியல் துறையில் நீங்கள் மேற்கொண்ட முயற்சிகள் பற்றிக் கூறுக.

**வினா 10:** அடுத்ததாக நீங்கள் மேற்கொள்ளவிருக்கின்ற தொல்லியல் ஆய்வினைப் பற்றிக் கூறுக.

---

**3. உங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடத்தைப் பார்வையிட்டு குறிப்பு எழுதுக.**

நான் மதுரை மீனாட்சியம்மன் கோயிலைப் பார்வையிட்டேன். இது மதுரை மாநகரில் அமைந்துள்ளது. இந்தக் கோவில் 1600 ஆண்டுகால பழமை வாய்ந்தது. இக் கோவிலின் தல விருட்சம் கடம்ப மரம். தீர்த்தம் பொற்றாமரைக் குளமும், வைகை நதியும் ஆகும்.

மதுரை மாநகரத்தின் மத்தியில் அமைந்துள்ள இந்தக் கோயிலுக்கு மொத்தம் ஐந்து நுழைவு வாயில்கள் உள்ளன. கோவிலின் மொத்த பரப்பளவு 45 ஏக்கர். இந்தக் கோவிலில் மொத்தம் 12 கோபுரங்கள் உள்ளன. தெற்குக் கோபுரம் மிக உயரமானது. மேலும் இக்கோவிலில் அஷ்ட சக்தி மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம், ஊஞ்சல் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், வசந்த மண்டபம், கம்பத்தடி மண்டபம், கிளிக்கூடு மண்டபம், மங்கையர்க்கரசி மண்டபம் உள்ளது. ஆயிரங்கால் மண்டபத்தில் 985 தூண்களும் நடுவில் நடராஜர் சிலையும் உள்ளது. அவை பார்ப்பதற்கு மிகவும் அழகாகத் தெரியும்.

வடக்கு கோபுரத்திற்கு அருகில் ஐந்து இசைத் தூண்கள் உள்ளன. அஷ்டசக்தி மண்டபத்தில் கலை நயமிக்க எட்டு அம்மன் சிலைகள் உள்ளன. கிழக்குகோபுரத்திற்கு எதிரே உள்ள புதுமண்டபத்தில் தல வரலாற்றை விளக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மேலும், சித்திரைத் திருவிழா கோவிலின் தல வரலாற்றை எடுத்துரைக்கும் திருவிழாவாகும்.இவை அனைத்தையும் கண்டு மகிழ்ந்தேன்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



கற்கண்டு

## இயல் மூன்று 3.3 வல்லினம் மிகும் இடங்கள்

### மதிப்பீடு

**பலவுள் தெரிக.**

**1. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று –**

அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன

ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது

இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகாது

ஈ) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது

**விடை: இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகாது**

### கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். இதற்கு எடுத்துக்காட்டு.**

அ) ஊருக்குச் செல் ஆ) மிகப்பெரியவர்

இ) நிலாச் சோறு ஈ) கதவைத் திற

**விடை: ஈ) கதவைத் திற**

**2. கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று –**

அ) ஒரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும்

ஆ) திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்

இ) உவமைத் தொகையில் வல்லினம் மிகாது

ஈ) ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்

**விடை: இ) உவமைத் தொகையில் வல்லினம் மிகாது**

**குறுவினா.**

**1. விகாரப் புணர்ச்சியின் வகைகள் யாவை ?**

தோன்றல், திரிதல், கெடுதல் என விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்

**2. வல்லினம் மிகும், மிகா இடங்களை அறிவதற்கு எளிய வழி யாது ?**

மரபையும், பட்டறிவையும் தாண்டி, சொற்களை ஒலித்துப் பார்ப்பதும் வல்லினம் மிகும், மிகா இடங்களை அறிவதற்கு எளிய வழி ஆகும்.

**சிறுவினா.**

**1. வல்லினம் மிகுதல் என்றால் என்ன ?**

வல்லெழுத்துகள் க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். இவை நிலைமொழியுடன் புணர்கையில் அவற்றின் மெய்யெழுத்துகள் தோன்றிப் புணரும். இதை வல்லினம் மிகுதல் என்பர்

**2. வல்லின எழுத்துக்களின் புணர்ச்சி இலக்கணம் எதற்குத் தேவைப்படுகிறது ?**

சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும், பொருள் மயக்கத்தைத் தவிர்க்கவும் பேச்சின் இயல்பைப் பேணவும், இனிய ஓசைக்காகவும் இவ்வல்லின எழுத்துக்களின் புணர்ச்சி இலக்கணம் தேவைப்படுகிறது

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நெடுவினா.**

**வல்லினம் மிகும் இடங்கள் இரண்டு சான்று தந்து விளக்குக**

| |
|---|
| 'அ', 'இ' என்னும் சுட்டெழுத்துக்களுக்குப் பின்னும், 'அந்த', 'இந்த'என்னும் சுட்டுப்பெயர்களின் பின்னும் 'எ'என்னும் வினாவெழுத்தின் பின்னும், 'எந்த'என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும். **சான்று :** அச்சட்டை ; இந்தக் காலம்; எத்திசை ? ; எந்தப் பணம் ? |
| 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். **சான்று :** கதவைத் திற ; தகவல்களைத் திரட்டு; காட்சியைப் பார் |
| 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். **சான்று :** முதியவருக்குக் கொடு; மெட்டுக்குப் பாட்டு; ஊருக்குச் செல் |
| 'என', 'ஆக' போன்ற சொல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும். **சான்று :** எனக் கேட்டார்; வருவதாகக் கூறு |
| 'அதற்கு', 'இதற்கு', எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும். **சான்று :** அதற்குச் சொன்னேன்; இதற்குக் கொடு; எதற்குக் கேட்கிறாய் ? |
| 'இனி', 'தனி' ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகும். **சான்று :** இனிக் காண்போம்; தனிச் சிறப்பு |
| 'மிக' என்னும் சொல்லின் பின் வல்லினம் மிகும். **சான்று :** மிகப் பெரியவர் |
| 'எட்டு', 'பத்து' என்னும் எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகும். **சான்று :** எட்டுத்தொகை; பத்துப்பாட்டு |
| 'ஓரெழுத்து ஒரு மொழிக்குப்' பின் வல்லினம் மிகும். **சான்று :** தீப்பிடித்தது; பூப்பந்தல் |
| ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும். **சான்று :** கூவாக் குயில்; ஓடாக் குதிரை |
| வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலைமொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும். **சான்று :** கேட்டுக்கொண்டான் ; விற்றுச் சென்றான் |
| (அகர, இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும். **சான்று :** ஆடச்சொன்னார்; ஓடிப்போனார் |
| ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும். **சான்று :** புலித் தோல் |
| திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும். **சான்று :** கிழக்குப் பகுதி; வடக்குப் பக்கம் |
| இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும். **சான்று :** மல்லிகைப் பூ; சித்திரைத் திங்கள் |
| உவமைத் தொகையில் வல்லினம் மிகும். **சான்று :** தாமரைப் பாதம் |
| 'சால', 'தவ', 'தட', 'குழ' என்னும் உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும். **சான்று :** சாலப் பேசினார்; தவச் சிறிது |
| தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின் பின் வல்லினம் மிகும். **சான்று :** நிலாச் சோறு; கனாக் கண்டேன் |
| சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும். **சான்று :** வாழ்க்கைப் படகு; உலகப் பந்து |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கற்பவை கற்றபின்**

**1. வல்லினம் மிகலாமா ?**

**அ) பெட்டி__செய்தி** – பெட்டிச் செய்தி
**ஆ) விழா __ குழு** – விழாக்குழு
**இ) கிளி __பேச்சு** – கிளிப்பேச்சு
**ஈ) தமிழ் __ தேன்** – தமிழ்த்தேன்
**உ) தை __ பூசம்** – தைப்பூசம்
**ஊ) கூட__ கொடு** – கூடக்கொடு
**எ) கத்தியைவிட __ கூர்மை** – கத்தியை விடக் கூர்மை
**ஏ) கார் __ பருவம்** – கார்ப் பருவம்

**2. தொடர் தரும் பொருளைக் கூறுக.**
**அ) சின்னக்கொடி, சின்னகொடி**
**ஆ) தோப்புக்கள், தோப்புகள்**
**இ) கடைப்பிடி, கடைபிடி**
**ஈ) நடுக்கல், நடுகல்**
**உ) கைம்மாறு, கைமாறு**
**ஊ) பொய்ச்சொல், பொய்சொல்**

அ) சின்னக்கொடி – ஒரு சின்னம் பொறித்த கொடி
சின்னகொடி – சிறிய தாவர கொடி
ஆ) தோப்புக்கள் – தோப்பில் வடித்த கள்
தோப்புகள் – ஒரே வகையான மரங்கள் வளர்க்கப்படும் இடம்
இ) கடைப்பிடி – சாலை விதிமுறைகளைப் பின்பற்றுதல்
கடைபிடி – கடையைக் கைப்பற்றுதல்
ஈ) நடுக்கல் – நடுவில் உள்ள கல்
நடுகல் – தொல்சான்றான கல்
உ) கைம்மாறு – உதவிக்கு மறு உதவி
கைமாறு – ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்கு மாறிவிடுவது
ஊ) பொய்ச்சொல் – பொய்யான சொல்
பொய் சொல் – பொய் சொல்லுதல்

**சிந்தனை வினா.**

**3. நாளிதழ்கள் சிலவற்றில் வல்லினம் மிகவேண்டிய இடத்தில் மிகாமல் எழுதிவருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு எழுதுவது மொழிக்கு வளம் சேர்க்குமா ? வல்லினம் மிக வேண்டியதன் முக்கியத்துவத்தை எழுதுக.**

வல்லினம் மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவது மொழிக்கு வளம் சேர்க்காது.

**வல்லினம் மிகவேண்டியதன் முக்கியத்துவம் :**

* சொல்லின் பொருள் மாறாது அறிய உதவுகிறது
* வல்லினம் மிகும் இடங்களை இனங்கண்டு பயன்படுத்தத் தொடங்கினாலே தவறுகளைத் தவிர்க்கலாம். (எ.கா)

| | |
|---|---|
| அதற்க்கு – தவறு | அதற்கு = அது + அன் + கு<br>அது (சுட்டுப் பெயர்) + அன் (சாரியை) + கு (வேற்றுமை உருபு)<br>அதன் + கு = அதற்கு – என்பதே சரி<br>(எ.கா) இந்தப்பொருள் வேண்டாம். அதற்குப் பதிலாக இதை வைத்துக்கொள். |
| கடைபிடித்தல்<br>கடைப்பிடித்தல் | கடைபிடித்தல் = கடையைப் பிடித்தல்<br>கடைப்பிடித்தல் = பின்பற்றுதல்<br>(எ.கா) சேகர் புதிதாக வாணிகம் தொடங்கக் கடை பிடித்தார்<br>நாங்கள் என்றும் தூய்மையைக் கடைப்பிடிப்போம் |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**4. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

**பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடு தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்றப் பொருள்களும் உறுதி படுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று.**

**கீழடியில் வாழ்ந்த மக்களுள் பலர்ச் செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்தப் பொருள்கள் நமக்கு உணர்த்துகின்றன. இங்கு குறைவான எண்ணிக்கையில் தான் தங்கத்தினாலானாப் பொருள்கள் கிடைக்கின்றன.**

**மேலும் இரும்பை பயன்படுத்தி செய்தக் கோடாரி, குத்தீட்டிகள் முதலான கருவிகளும் யானை தந்தத்தினால் செய்தச் சீப்பு, மோதிரம், பகடை, காதணிகள், கண்ணாடிப் பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடு போன்றவையும் கிடைத்துள்ளன.**

**விடை :** பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடு தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்ற பொருள்களும் உறுதிப் படுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று.

கீழடியில் வாழ்ந்த மக்களுள் பலர் செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நமக்கு உணர்த்துகின்றன. இங்கு குறைவான எண்ணிக்கையில் தான் தங்கத்தினாலானா பொருள்கள் கிடைக்கின்றன.

மேலும் இரும்பைப் பயன்படுத்திச் செய்த கோடாரி, குத்தீட்டிகள் முதலான கருவிகளும் யானைத் தந்தத்தினால் செய்த சீப்பு, மோதிரம், பகடை, காதணிகள், கண்ணாடிப் பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடு போன்றவையும் கிடைத்துள்ளன.

---

## இயல் மூன்று — 3.4 மொழியை ஆள்வோம் !

**படித்துச் சுவைக்க.**

***ஆராரோ ஆரிராரோ ஆராரோ ஆரிராரோ***
***தூங்காத கண்ணே உனைத் தூங்க வைப்பேன் ஆரிராரோ***
***மாம்பழத்தைக் கீறி வயலுக்கு உரம்போட்டுத்***
***தேன் பார்த்து நெல்விளையும் செல்வந்தனார் புத்திரனோ!***
***வெள்ளித்தேர் பூட்டி மேகம்போல் மாடுகட்டி***
***அள்ளிப் படியழக்கும் அதிர்ஷ்டமுள்ள புத்திரனோ***
***முத்துச் சிரிப்பழகா முல்லைப்பூப் பல்லழகா***
***தொட்டில் கட்டித் தாலாட்ட தூக்கம் வருமோடா***
***கதிரறுக்கும் நேரத்திலே கட்டியுன்னைத் தோளிலிட்டால்***
***மதியத்து வெயிலிலே மயக்கமும்தான் வாராதோ***
***வயலிலே வேலை செய்வேன் வரப்பினிலே போட்டிடுவேன்***
***வயலைவிட்டு ஏறுமுன்னம் வாய்விட்டு அழுவாயோ ?***

***– நாட்டுப்புறப் பாட்டு. தகவலாளர் – வேலம்மாள்***

---

**பொன்மொழிகளை மொழிபெயர்க்க.**

**1. A nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi**

ஒரு நாட்டின் பண்பாடானது மக்களின் இதயங்களிலும், ஆன்மாவிலும் தங்கியுள்ளது.
– மகாத்மா காந்தி

**2. The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru**

மக்களின் கலை உணர்வேஅவர்களின் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும்.
– ஜவஹர்லால் நேரு

**3. The biggest problem is the lack of love and charity - Mother Teresa**

அன்புக் குறைவும், தொண்டுப் பற்றாக்குறையும்தான் இன்றைய மிகப்பெரிய பிரச்சனை.
– அன்னை தெரசா

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**4. You have to dream before your dreams come true - A.P.J. Abdul Kalam**
உங்கள் கனவுகள் நனவாகும்வரை கனவு காணுங்கள். – ஏ.பி.ஜே.அப்துல் கலாம்

**5. Winners don't do different things, they do things differently - Shiv Khera**
வெற்றியாளர்கள் வேறுபட்ட செயல்களைச் செய்வதில்லை, அவர்கள் செயல்களை வித்தியாசமாகச் செய்கிறார்கள். – ஷிவ் கேரா

---

**வடிவம் மாற்றுக.**

**பின்வரும் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு, வரிசைப்படுத்தி முறையான பத்தியாக்குக.**

**1. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது.**

**2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டதில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன.**

**3. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால் பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன.**

**4. தமிழ் மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்து கொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன.**

**விடை :**

4. தமிழ் மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்து கொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன.

2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்கள்அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டதில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன.

3. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால் பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன.

1. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது,

---

**மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

**1. மேடும் பள்ளமும்** **2.நகமும் சதையும்**
**3. முதலும் முடிவும்** **4. கேளிக்கையும் வேடிக்கையும்**
**5. கண்ணும் கருத்தும்**

**(எ.கா)– ஆரிப் சொன்னதில் நம்பிக்கை இல்லாமல் குமார் மேலும் கீழும் பார்த்தான்**

**1. மேடும் பள்ளமும்**– மலைப்பகுதி **மேடும் பள்ளமும்** நிறைந்தது.

**2. நகமும் சதையும்** – நானும் என் நண்பனும் எப்போதும் **நகையும் சதையும்** போல இருப்போம்.

**3. முதலும் முடிவும்** – கனவுக்கு **முதலும் முடிவும்** இருக்காது.

**4. கேளிக்கையும் வேடிக்கையும் – கேளிக்கையும் வேடிக்கையுமாக** இருந்து நல்ல பொழுதை வீணடிக்கக்கூடாது.

**5. கண்ணும் கருத்தும்** – எச்செயலைச் செய்தாலும் **கண்ணும் கருத்துமாகச்** செய்ய வேண்டும்.

---

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**தொகுப்புரை எழுதுக.**
**பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டி தொகுப்புரை உருவாக்குக.**

இடம் : அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மேலூர். இலக்கிய மன்றச் செயலர்.

பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குதல்.

★ தமிழ்த்தாய் வாழ்த்துடன் பள்ளி இலக்கிய மன்ற விழா இன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்றது.

★ இந்நிகழ்ச்சிக்குப் பள்ளித் தலைவர் தலைமையேற்றுத் தலைமையுரை ஆற்றினார். அவர் தலைமையுரை ஆற்றும்போது, மாணவர்கள் தமிழ் மீது பற்று கொண்டு தமிழைப் போற்றிப்பரவ வேண்டும் என்றார்.

★ முன்னதாக இலக்கிய மன்றச் செயலர் 9 ஆம் வகுப்பு மாணவி விஜயலெட்சுமி அனைவரையும் வரவேற்றார்.

★ பள்ளித் தலைமை ஆசிரியர் முன்னிலை நிகழ்விற்கு முன்னிலை வகித்தார்

★ 10 ஆம் வகுப்பு மாணவி சுமதி "காலம் பொன் போன்றது" என்னும் தலைப்பில் பேசும்போது,காலம் காற்றைப் போல் வந்தவுடன் வேகமாகச் சென்றுவிடும். தக்க காலத்தில் தக்க செயல்களைச் செய்து முடியுங்கள். அதுவே உங்களுக்குப் பாதுகாப்புத் தரும் என்றார்.

★ இந்நிகழ்வில் கவிஞர்.ஞானதேசிகன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று கவிதை மழையுடன் சொற்பொழிவாற்றினார். பல்வேறு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார்.

★ 10 ஆம் வகுப்பு மாணவி தமிழரசி நிகழ்வின் இறுதியில் நன்றியுரை ஆற்றினார்.

★ நாட்டுப்பண்ணுடன் விழா நிகழ்வு நிறைவுற்றது.

---

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று "காங்கேயம்" கருதப்படுகின்றது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**1. பின்வரும் நான்கு வினாக்களுக்கும் பொருந்தும் ஒரு விடையைத் தருக.**

அ) மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை ?
ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது ?
இ) பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கின்ற காளை இனம் எது ?
ஈ) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது ?

**விடை : காங்கேயம் காளை**

**2. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.**

அ) கர்நாடகம் ஆ) கேரளா
இ) இலங்கை ஈ) ஆந்திரா

**விடை : இலங்கை**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**3. பிரித்து எழுதுக. கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன ஆ) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன

இ) கண்டெடுக்க + பட்டு + உள்ளன ஈ) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன

**விடை : அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன**

**4. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன – இது எவ்வகைத் தொடர்**

அ) வினாத்தொடர் ஆ) கட்டளைத்தொடர்

இ) செய்தித் தொடர் ஈ) உணர்ச்சித் தொடர்

**விடை : இ) செய்தித் தொடர்**

---

## இயல் மூன்று 3.5 மொழியோடு விளையாடு

**பொருள் எழுதித் தொடரமைக்க.**

**கரை, கறை; குளவி, குழவி; வாளை, வாழை; பரவை, பறவை; மரை, மறை**

**(எ.கா) அலை – கடலலை –இன்று கடலலையின் வேகம் மிக அதிகமாகவுள்ளது**

**அழை – வரவழைத்தல் – என் நண்பர்களை வரவழைத்துள்ளேன்**

**விடை**

கரை – கடற்கரை – கடற்கரையில் அலையோடு விளையாடலாம்

கறை – அழுக்கு – ஆடையில் கறை படிந்தால் துவைக்க வேண்டும்

குளவி – பூச்சி – தேனுக்காக பூக்களைக் குழவிகள் மொய்த்தன

குழவி – குழந்தை – பொம்மையைப் பார்த்து அழுத குழந்தை சிரித்தது

வாளை – ஆயுதம் – போர்வீரன் வாளைச் சுழற்றிப் பயிற்சி செய்தான்

வாழை – மரம் – கோவில் திருவிழாவில் வாழை மரம் கட்டுவார்கள்

பரவை – கடல் – கடலில் மீனவர்கள் மீன் பிடித்தனர்

பறவை – பறவை – அதிகாலையில் பறவை எழுந்துவிடும்

மரை – மான் – காட்டில் மான்கள் கூட்டமாக வாழும்

மறை – வேதம் – மறை நான்கு வகைப்படும்

---

**அகராதியில் காண்க.**

**இயவை, சந்தப்பேழை, சிட்டம், தகழ்வு, பௌரி**

**விடை :**

| | | |
|---|---|---|
| இயவை | – | வழி |
| சந்தப்பேழை | – | அழகிய பெட்டி |
| சிட்டம் | – | பெருமை |
| தகழ்வு | – | வீண் ஆடம்பரம் |
| பௌரி | – | பெரும் பண் வகை |

---

**பொருள் தரும் வகையில் சொற்றொடர் உருவாக்குக.**

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள்தரும் வகையில் ஒரு சொல்லில் தொடரைத் தொடங்குக. அத்துடன் அடுத்தடுத்துச் சொற்களைச் சேர்த்து, புதிய புதிய சொற்றொடர்களை உருவாக்குக. இறுதித்தொடர் அனைத்துச் சொற்களையும் சேர்த்ததாக அமையவேண்டும்**

**காலங்களில் தெருவில் வைக்காதீர்கள் காப்புக் கம்பிகள் கவனக்குறைவுடன் ஆகியவற்றின் மீது காலை அறுந்த மழை மின் கம்பிகள்.**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

1. வைக்காதீர்கள் ..................
2. ...................... வைக்காதீர்கள்
3......................, ......................... வைக்காதீர்கள்
4. ........................

விடை:

1. வைக்காதீர்கள்
2. காலை வைக்காதீர்கள்
3. கவனக்குறைவுடன் காலை வைக்காதீர்கள்
4. காப்புக் கம்பிகள், அறுந்த மின் கம்பிகள் ஆகியவற்றின் மீது கவனக்குறைவுடன் காலை வைக்காதீர்கள்.
5. தெருவில் காப்புக் கம்பிகள், அறுந்த மின் கம்பிகள் ஆகியவற்றின் மீது கவனக்குறைவுடன் காலை வைக்காதீர்கள்.
6. மழைக்காலங்களில் தெருவில் காப்புக் கம்பிகள், அறுந்த மின் கம்பிகள் ஆகியவற்றின் மீது கவனக்குறைவுடன் காலை வைக்காதீர்கள்.

**குறுக்கெழுத்துப் புதிர்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஏ 1 | ■ | இ 2 | ந் | தி 3 | ர | வி 4 | ழா | ■ |
| று | த 5 | வ | ■ | ர | ■ | தை | ■ | சா 6 |
| த 7 | வ | ளை | ஓ 8 | ட் | ட | ம் | ■ | ல |
| ழு | ■ | ■ | ரை | சி 9 | ■ | வி 10 | தி | ■ |
| வு | ய் | ஆ 11 | ■ | ர் | னா | த | த் | சா 12 |
| த | ■ | ■ | ■ | கா | ■ | மா 13 | வ 14 | டி |
| ல் | ■ | ர் | க 15 | க் | ளை | கா 16 | ■ | க |
| ■ | ள் | யா 17 | னி | த 18 | ■ | ■ | கொ 19 | ள் |

**இடமிருந்து வலம்**

2. விழாவறை காதை குறிப்பிடும் விழா (6) – இந்திரவிழா
5. சரி என்பதற்கான எதிர்ச்சொல் தரும் எழுத்துக்கள் இடம்மாறியுள்ளன (3) – தவறு
7. பொங்கல் விழாவையொட்டி நடத்தப்படும் சிறுவர்களுக்கான போட்டிகளில் ஒன்று (7) – தவளை ஓட்டம்
10. ஊழ் என்பதற்குத் தற்காலப் பயன்பாட்டில் உள்ள சொல் (2) – விதி
13. மா + அடி – இதன் புணர்ந்த வடிவம் (3) – மாவடி
19. கொள்ளுதல் என்பதன் முதல்நிலை திரிந்த சொல் (2) – கொள்

**வலமிருந்து இடம்**

9. தூய்மையற்ற குருதியை எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய் (2) – சிரை
11. ஆராய்ச்சி என்பதன் சொற்சுருக்கம் (3) – ஆய்வு
12. மணிமேகலை காப்பியத்தின் ஆசிரியர் (5) – சாத்தனார்
16. சல்லிக்கட்டு விளையாட்டுக்கு உரிய விலங்கு (2) – காளை
18. தனி + ஆள் – சேர்த்து எழுதுக (4) – தனியாள்

**மேலிருந்து கீழ்**

1. தமிழர்களின் வீரவிளையாட்டு (7) – ஏறு தழுவுதல்
2. இவள் + ஐ – சேர்ந்தால் கிடைப்பது (3) – இவளை
3. மரத்தில் காய்கள் ........... ஆகக் காய்த்திருந்தன (4) – திரட்சி
4. ஆடிப்பட்டம் தேடி .......... (2) – விதை
5. உரிச்சொற்களுள் ஒன்று (2) – தவ
6. ................. சிறந்தது (2) – சால
8. நேரத்தைக் குறிப்பிடும் வானியல் சொல் (2) – ஓரை
12. அகழாய்வில் கிடைத்த கொள்கலன்களுள் ஒருவகை (4) – சாடிகள்
15. காய் பழுத்தால் ......... (2) – கனி

**கீழிருந்து மேல்**

14. ஒருவர் பற்றி ஒருவர் பிறரிடம் இதை வைக்கக்கூடாது (3) – வத்தி
17. யா முதல் வரும் வினாப்பெயர் (2) – யார்
18. தகவிலர் என்பதற்கு எதிர்ச்சொல்லாகத் திருவள்ளுவர் குறிப்பிடுவது (4) – தக்கார்

---

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக**



*பகலவனுடன் போட்டியிட்டு*
*பனித்துளியுடன் துயில் எழுந்தேன்*
*துள்ளி வந்த புது வெள்ளம் போல்*
*அள்ளி முடித்து ஒப்பனித்து*
*ஏகினேன் கோவில் வாசலுக்கு*

*எங்கு நோக்கினும் மக்கள் திரள்*
*அவர் உள்ளம் எங்கும் உற்சாகக் கழல்*
*இருண்டு வந்த மேகம் போல்*
*திரண்டு சூழ்ந்து நின்றனர்*
*மேளதாள முழக்கங்கள்*
*ஊரை திரட்டி அழைத்தது*

*பொம்மலாட்டம் கரகாட்டம்*
*பொய்க்கால் குதிரை பட்டி மன்றம்*
*கரகாட்டம் காவடியாட்டம்*
*ஒயிலாட்டம் தெருக்கூத்து என*
*கலைக் கட்டியது திருவிழா*

*கடைத் தெருக்கள் வீதியில் எங்கும்*
*மொய்த்து நின்றது அங்கு சிறார் கூட்டம்*
*தேரில் பவனி வந்தனர் கருப்புச் சித்தர்*
*பக்தியில் திளைத்து நின்றது பெரியவர் நாட்டம்*
*ஏர்பிடித்த கரங்கள் எல்லாம்*
*தேர் வடம் பிடித்தது*
*வண்ண வண்ண கோலமிட்டு*
*பொங்கலிட்டன மங்கையர் கரங்கள்*
*அங்கு குழுமி நின்றனர் அவர்தம் உறவினர்*

*வானவேடிக்கை வெடித்து சிதறின*
*அது பலகாத தூரம் எட்டி முழங்கின*
*இச்சித்திரை மாத திருவிழா*
*ஊர் மக்களுக்கோ பெருவிழா*

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## செயல்திட்டம்

**தமிழ் நாட்டில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள் குறித்த செய்திகளை, நாளிதழ்களிலோ புத்தகங்களிலோ திரட்டிச் செய்திப் படத்தொகுப்பினை உருவாக்குக.**

**முன்னுரை :** நம்முன்னோர்களின் பண்பாட்டை எண்ணிப் பார்ப்பதற்கு கடந்த காலத்தைப் புரிந்து கொள்வதற்கும், நிகழ்காலத்தில் வெற்றிபெறவும், எதிர்காலத்தைக் கணிக்கவும் அகழாய்வுகள் துணை புரிகின்றன.

**பல்லவரம் அகழாய்வு :** 1863 ஆம் ஆண்டு இராபர்ட் புரூஸ்புட் என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் பல்லாவரம் செம்மண் மேட்டுப் பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார். இந்தக் கற்கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம்.

**அரிக்கமேடு அகழாய்வு :** அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மண்பாண்டங்கள் கிடைத்தன. அதனால், ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது

**ஆதிச்ச நல்லூர் அகழாய்வு :** அதற்குப் பின்னால், 1914 ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

**கீழடி அகழ்வாய்வு :** மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருள்கள், உலோகப் பொருள்கள், முத்துகள், கிளிஞ்சல் பொருள்கள், மான்கொம்புகள், சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், இரத்தினக்கல் வகைகள், பழுப்பு, கறுப்பு, சிவப்பு கறுப்புப் பானைகள், சதுரங்கக் காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், செம்பு, சங்கு வளையல்கள், எலும்பினால் ஆன கூர் முனைகள், தமிழ் – பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், நீர் சேகரிக்கும் பெரிய மட்கலன்கள், சிறிய குடுவைகள், உறைக்கிணறுகள், சுடுமண் கூரை ஓடுகள் போன்ற பல்வேறு தொல்லியல் பொருள்கள் கிடைத்துள்ளன. மூன்று வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த இவற்றுள் தொன்மையானவை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன. இதுவரை அகழாய்வு செய்யப்பட்ட பெரும்பான்மையான இடங்கள் இறப்பு தொடர்பான தடயங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. ஆனால், கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப்பகுதியும் செங்கல் கட்டுமானங்களும் இதரப்பொருள்களும் தமிழரின் உயரிய நாகரிகத்தைக் கண்முன் காட்டும் சாட்சிகளாய் அமைந்துள்ளன.

**முடிவுரை :** தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழ்வாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

---

## நிற்க அதற்குத் தக...

**நான் பாராட்டு பெற்ற சூழல்கள்**

**அ) கூடுதலாக மீதம் கொடுத்த கடைக்காரரிடம் அந்தப் பணத்தை மீண்டும் அளித்தபோது.**

**ஆ) கட்டுரை ஏடுகளைக் கீழே தவறவிட்ட என் ஆசிரியருக்கு அதை எடுத்துத் தந்தபோது.**

இ) <u>சாலையைக் கடக்க தடுமாறிய மூதாட்டிக்கு உதவியபோது</u>

ஈ) <u>விளையாட்டு மைதானத்தில் கிடந்த வெள்ளிக் கொலுசினை வகுப்பாசிரியரிடம் ஒப்படைத்தபோது</u>

---

## அறிவை விரிவு செய்

1. தமிழர் நாகரிகமும் பண்பாடும் – *அ.தட்சிணாமூர்த்தி*
2. தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் – *மா. இராசமாணிக்கனார்*
3. தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் பறவைகள் – *க.ரத்னம்*
4. தொல்லியல் நோக்கில் சங்க காலம் – *கா.ராஜன்*
5. தமிழர் சால்பு – *சு. வித்யானந்தன்*

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் மூன்று

## 3.6 திருக்குறள்

### கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக.**

**1.அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை– இக்குறள் உணர்த்தும் அணி எது ?**

அ) உவமையணி ஆ) சொற்பொருள் பின்வரு நிலையணி

இ) ஏகதேச உருவக அணி ஈ) இவை ஏதுமில்லை **விடை: அ) உவமையணி**

**2. திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகளுள் சிறந்த உரை .........**

அ) தருமர் ஆ) நச்சர்

இ) பரிப்பெருமாள் ஈ) பரிமேலழகர் **விடை: ஈ) பரிமேலழகர்**

**3. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு ............**

அ) 1812 ஆ) 1814

இ) 1816 ஈ) 1818 **விடை: அ) 1812**

**4. திருக்குறளில் இடம்பெறும் இருமலர்களில் ஒன்று அனிச்சம் மற்றொன்று .............**

அ) அல்லி ஆ) குவளை

இ) ரோஜா ஈ) முல்லை **விடை: ஆ) குவளை**

**5. திருக்குறளுக்கு முதன்முதலில் உரை எழுதியவர் ...............**

அ)தருமர் ஆ) மணக்குடவர்

இ) பரிதி ஈ) மல்லர் **விடை: ஆ) மணக்குடவர்**

**6.திருக்குறளில் கோடி என்ற சொல் ............... இடங்களில் இடம்பெற்றுள்ளது**

அ) ஐந்து ஆ) ஆறு

இ) ஏழு ஈ) எட்டு **விடை: இ) ஏழு**

**7. திருக்குறளில் .................. என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.**

அ)ஏழு ஆ) தீயவை

இ) தலை ஈ) கெடும் **விடை: அ) ஏழு**

**பொருத்துக.**

| திருக்குறள் | | குறிப்புகள் |
|---|---|---|
| 1. பழம் | – | குன்றிமணி |
| 2. விதை | – | பனை, மூங்கில் |
| 3. அதிகாரம் | – | நெருஞ்சி |
| 4. மரங்கள் | – | குறிப்பறிதல் |

**விடை :**

| திருக்குறள் | | குறிப்புகள் |
|---|---|---|
| 1. பழம் | – | நெருஞ்சி |
| 2. விதை | – | குன்றிமணி |
| 3. அதிகாரம் | – | குறிப்பறிதல் |
| 4. மரங்கள் | – | பனை, மூங்கில் |

**குறுவினா**

1. ***எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்*** **– இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.**

எவ்வளவு சிறிதானாலும் நல்லவற்றைக் கேட்டால், கேட்ட அளவுக்குப் பெருமை உண்டாகும்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. *செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்***
***அவியினும் வாழினும் என்.*** **– இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.**
கேட்பதன் சுவையை உணராமல் நாவின் சுவை மட்டும் உணர்பவர் இறந்தால்தான் என்ன, இருத்தால்தான் என்ன – என்பதேயாகும்.

---

**3. கீழ்க்கண்டவற்றுள் சொற்பொருள் பின்வருநிலையணியை உணர்த்தும் குறட்பாவைத் தேர்ந்தெடுக்கவும்**

**அ)** **பெருமைக்கும் ஏனைச் சிருமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்.**

**ஆ)** **குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்.**

**விடை :** **ஆ)** குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

---

**4. எதைக்கண்டபோதும் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யக்கூடாது ?**
ஈன்ற தாயின் பசியைக் கண்டபோதும் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யக்கூடாது.

---

**5. திருக்குறள் எதில் தொடங்கி எதில் முடிகிறது ?**
திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது.

---

**6. திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர் யார் ?**
தஞ்சை ஞானப்பிரகாசர்

---

**7. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார் ?**
ஜி.யு.போப்

---

**சிறுவினா.**

**1. அறனல்ல செய்யாமை நன்று – எப்போது ?**
பிறர் தனக்கு தரக்கூடாத துன்பத்தைத் தந்தாலும் மனம் நொந்து அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருப்பது நன்று.

---

**2. பொறுமையால் எவரை வெல்ல வேண்டும் என வள்ளுவர் கூறியுள்ளார் ?**
செருக்கினால் துன்பம் தந்தவரை நம்முடைய பொறுமையினால் வெல்லவேண்டும்.

---

**3. மறந்தும் பிறர்க்கு எச்செயல் செய்யக்கூடாது என வள்ளுவர் கூறியுள்ளார் ? ஏன் ?**
மறந்தும்கூடப் பிறருக்குக் கெடுதல் செய்ய நினைக்கக்கூடாது.
காரணம் – அவ்வாறு நினைத்தால், நினைத்தவருக்குக் கெடுதல் செய்ய அறம் நினைக்கும்.

---

**4. தீரா இடும்பை (துன்பம்) தரும் எப்போது ?**
ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்வதும், தேர்வு செய்தபின் அவரைப் பற்றி ஐயப்படுதலும் தீரா இடும்பை (துன்பம்) தரும்.

---

**5. ஒஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
***ஆஅதும் என்னு மவர்.*** **– இக்குறட்பாவின் கருத்தினைவிளக்குக.**
வாழ்வில் உயர நினைப்பவர் புகழைக் கெடுக்கும் செயல்களைப் புறம்தள்ளவேண்டும் என்பதாகும்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**6. நட்பின் உரிமையில் தம்மைக் கேட்காமலேயே ஒரு செயலைச் செய்தாலும் நட்பு பாராட்டுவோர் விருப்பத்தோடு அச்செயலுக்கு உடன்படுவர். இக் கருத்தினை விளக்கும் குறளினை எழுதுக.**

விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

---

**7. திருவள்ளுவர் குறிப்பிடும் பேதையின் செயல்கள் யாவை ?**

1. தகாத செயலுக்கு வெட்கப்படாமை
2. தக்கவற்றை நாடாமை
3. பிறரிடம் அன்பு இல்லாமை
4. எதனையும் பாதுகாக்காமை

---

**திருவள்ளுவர் குறிப்பு தருக.**

**ஆசிரியர் குறிப்பு :**

| | |
|---|---|
| **பெயர்** | : திருவள்ளுவர் |
| **பெற்றோர் பெயர்** | : தாயார் – ஆதி, தந்தையார் – பகவன் |
| **மனைவி பெயர்** | : வாசுகி |
| **பிறந்த ஊர்** | : மயிலாப்பூர் |
| **சிறப்புப் பெயர்கள்** | : நாயனார், தேவர், முதற் பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் |
| **காலம்** | : இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் |

---

**திருக்குறள் நூல் குறிப்பு தருக.**

| | |
|---|---|
| **பெயர்** | : திருக்குறள் |
| **பிரிவுகள்** | : மூன்று |
| **அதிகாரங்கள்** | : 133 |
| **குறள்கள்** | : 1330 குறள்கள் |
| **பால்கள்** | : அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் |
| **வேறுபெயர்கள்** | : முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தெய்வநூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுறை |
| **பகுதி** | : பதினெண்கீழ்க்கணக்கு |
| **நூல்** | : உலகப் பனுவல் |
| **சிறந்த உரை** | : பரிமேலழகர் |

---

## கற்பவை கற்றபின்...



**1. படத்திற்கேற்ப குறளைத் தேர்வு செய்க**

அ) *நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்*
*பேணாமை பேதை தொழில்.*

ஆ) *விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்*
*கேளாது நட்டார் செயின்.*

இ) *செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்*
*செல்வத்துள் எல்லாம் தலை.*

**விடை : இ) *செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்***
***செல்வத்துள் எல்லாம் தலை.***

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

**பாடல் :**

*ஆண்டில் இளையவனென்று அந்தோ அகந்தையினால்*
*ஈண்டிங்கு இகழ்ந்தென்னை ஏளனம் செய் – மாண்பற்ற*
*காரிருள்போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்*
*பாரதி சின்னப் பயல்.*

**குறள் :**

அ) *செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்*
*அவியினும் வாழினும் என்.*

ஆ) *மிகுதியான் மிக்கசுவை செய்தாரைத் தாம்தம்*
*தகுதியான் வென்று விடல்.*

இ) *குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல்.*

**விடை : ஆ) *மிகுதியான் மிக்கசுவை செய்தாரைத் தாம்தம்***
***தகுதியான் வென்று விடல்.***

---

**3. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.**

| | |
|---|---|
| **பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று** | **ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல்** |
| **தத்தம் கருமமே கட்டளைக்கல்** | **அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும்** |
| **அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்** | **சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போல** |

**விடை :**

| | |
|---|---|
| பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று | சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போல |
| தத்தம் கருமமே கட்டளைக்கல் | ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல் |
| அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் | அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும் |

---

**4. தீரா இடும்பைத் தருவது எது ?**

அ) ஆராயாமை, ஐயப்படுதல்
ஆ) குணம், குற்றம்
இ) பெருமை, சிறுமை
ஈ) நாடாமை, பேணாமை

**விடை : அ) ஆராயாமை, ஐயப்படுதல்**

---

**5. சொல்லுக்கான பொருளைத் தொடரில் அமைத்து எழுதுக.**

**அ) நுணுங்கிய கேள்வியர் – நுட்பமான கேள்வியறிவு உடையவர்**
நுட்பமான கேள்வியறிவு உடையவர் அடக்கமான சொற்களைப் பேசுவர்.

---

**ஆ) பேணாமை – பாதுகாக்காமை**
நல்லனவற்றைப் பாதுகாக்காமை ஒரு பேதையின் செயல்களாகக் கருதப்படும்.

---

**இ) செவிச் செல்வம் – கேட்பதால் பெறும் அறிவு**
கேட்பதால் பெறும் அறிவிற்கு நிகரான செல்வம் வேறு இல்லை.

---

**ஈ) அறனல்ல செய்யாமை – அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல்**
பிறர் தமக்கு துன்பம் தரும் வேளையிலும் நாம் அவருக்கு அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் நன்று.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**குறுவினா**

**1. நிலம் போல யாரிடம் பொறுமை காக்கவேண்டும்?**

தன்னை இகழ்பவரிடம் நிலம் போலப் பொறுமை காக்கவேண்டும்.

---

**2. *தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும்.* இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.**

தீய செயல் தீமை செய்தவனுக்குத் தீமையே தரும். தீயை விடக் கொடியதாகக் கருதி அவற்றைச் செய்ய அஞ்சவேண்டும்.

---

**3. *ஒற்றொற்றித் தந்தபொருளையும் மற்றுமோர் ஒற்றினால் ஒற்றிக் கொளல்.* இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக.**

**எதுகை –** இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதாகும்

ஒற்றொற்றி – ஒற்றினால்

**மோனை –** முதல் எழுத்து ஒன்றி வருவதாகும்

ஒற்றொற்றி – ஒற்றினால்

---

**4. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?**

செயல்வேறு, சொல் வேறு என்று உள்ளவர் நட்பு கனவிலும் இனிமை தராது.

---

**கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.**

மௌனவிரதம் என்னும் தலைப்பில் நான்கு நண்பர்கள் ஒரு சொற்பொழிவைக் கேட்டனர். தாங்களும் ஒரு வாரத்துக்கு மௌனவிரதம் இருப்பதாகத் தீர்மானம் செய்தனர். மௌனவிரதம் ஆரம்பமாகிவிட்டது! கொஞ்சநேரம் போனதும் ஒருவன் சொன்னான்,

"எங்கள் வீட்டு அடுப்பை அணைத்துவிட்டேனா தெரியவில்லையே!"

பக்கத்திலிருந்தவன், "அடப்பாவி, பேசிட்டியே!" என்றான்.

உடனே மூன்றாவது ஆள், "நீ மட்டும் என்ன ? நீயும்தான் பேசிவிட்டாய்!" என்றான்

நான்காவது ஆள், "நல்லவேளை, நான் மட்டும் பேசவில்லை!" என்றான்.

இப்படியாக அவர்களின் மௌன விரதம் முடிந்துபோனது.

1. *மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்*
   *அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.*
2. *திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து*
   *அறனல்ல செய்யாமை நன்று.*
3. *ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்*
   *பேதையின் பேதையார் இல்.*

**விடை : 3. *ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையின் பேதையார் இல்.***

**காரணம் :**

இக்கதையில் வரும் நான்கு நண்பர்களும் படித்தும் படித்ததை உணர்ந்தும் உணர்ந்ததை மற்றவர்க்கு எடுத்துரைக்கிறார்கள். அவர்கள் நான்கு பேரும் நாம் என்ன செய்கிறோம் என்பதுகூடத் தெரியாமல் உள்ளனர். இந்த பேதைகளைப் போலப் பேதை யாரும் இல்லை.

---

**கலைச்சொல் அறிவோம்**

| | |
|---|---|
| **அகழாய்வு** | – *Excavation* |
| **கல்வெட்டியல்** | – *Epigraphy* |
| **நடுகல்** | – *Hero Stone* |
| **பண்பாட்டுக் குறியீடு** | – *Cultural Symbol* |
| **புடைப்புச் சிற்பம்** | – *Embossed sculpture* |
| **பொறிப்பு** | – *Inscription* |

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் மூன்று

## 3.7 கட்டுரை

### பொங்கல் விழா

**முன்னுரை :**

இயற்கையைக் கடவுளாக வணங்குதல் தமிழர் மரபு. தமிழர் கொண்டாடும் பல விழாக்கள் இயற்கையைப் போற்றும் வகையிலேயே அமைந்து இருக்கின்றன. அவற்றுள் சிறப்பானது பொங்கல் விழா ஆகும்.

**உழவர் திருநாள் :**

உழவர்கள் கதிரவனுக்கு நன்றி கூறும் விழா பொங்கல் விழா. ஆடித்திங்களில் விதைத்து தைத்திங்களில் அறுவடைத் திருவழா என்றும் அழைப்பர். உழவர்கள் தம்முடன் உழைத்த விழாவை உழவர் திருநாள் என்றும் கூறுவர்.

**போகித்திருநாள் :**

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பது ஆன்றோர் மொழி. வீட்டில் உள்ள பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்யும் நாள் போகித் திருநாள். இது மார்கழி மாதத்தின் இறுதி நாள்.

**பொங்கல் திருநாள் :**

தை மாதத்தின் முதல் நாள் பொங்கல் திருநாள். அன்று வாசலில் வண்ணக் கோலமிடுவர் மாவிலை தோரணம் கட்டுவர். மஞ்சள் செடி சுற்றிய புதுப்பானையைப் புதிய அடுப்பில் ஏற்றிப் பாலை ஊற்றிப் புத்தரிசி இட்டுப் பொங்கல் பொங்குவர்; பொங்கல் பொங்கி வரும்போது 'பொங்கலோ பொங்கல்' என மகிழ்ந்து கூறிக் குலவை இடுவர்; பூசணி இலையில் பொங்கல், கரும்பு, தேங்காய், பழம், இஞ்சி, மஞ்சள் முதலியன படைத்துக் கதிரவனை வழிபடுவர்; பிறகு ஒன்றாய் அமர்ந்து பொங்கலை உண்டு மகிழ்வர்; நண்பர்க்கும் உறவினர்க்கும் பொங்கல் வாழ்த்துக் கூறிக் கொள்வர்.

**மாட்டுப் பொங்கல்:**

தை இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல். உழவுக்குத் துணை நின்ற மாடுகளுக்கு நன்றி செலுத்தும் நாள். அன்று மாடுகளை நீராட்டி மஞ்சள் பூசிக் குங்குமம் இடுவர் ; அவற்றின் கொம்புகளைச்சீவி வண்ணம் தீட்டுவர் ; கழுத்தில் மாலை சூட்டுவர்; அவற்றுக்குப் பொங்கல் படைத்து உள்ளம் மகிழ்வர். 'மஞ்சுவிரட்டி' என்னும் வீரவிளையாட்டு நடைபெறும். இவ்விளையாட்டு மாடுபிடித்தல், ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல், என்றும் அழைக்கப்படும். இளைஞர்கள் காளைகளை அடக்கி, அவற்றின் கழுத்தில் கட்டப்பெற்றிருக்கும் பரிசுப் பொருள்களைப் பெற்று மகிழ்வர்.

**காணும் பொங்கல் :**

தை மூன்றாம் நாள் காணும் பொங்கல். அன்று உறவினர் மற்றும் நண்பர் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு மகிழ்வர் சிறுவர் சிறுமியர் கடற்கரைக்கும் பூஞ்சோலைகளுக்கும் சென்று விளையாடி மகிழ்வர். இந்நாள் உழவர் நாளாகவும் கொண்டாடப்பெறுகிறது. மேலும் பட்டிமன்றங்கள், கலைநிகழ்ச்சிகள் நடத்துவர். விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றோர்க்கு பரிசுகளை வழங்கி பாராட்டுவர்.

**முடிவுரை :**

உறவுகள் ஒன்று கூடிக் கொண்டாடும் விழாக்கள் மனத்திற்கு மகிழ்வைத்தரும். மனிதரிடையே ஒற்றுமையை வளர்க்கும். விழாக்கள் நமது பண்பாட்டை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கின்றன.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## கடிதம்

### மாற்றுச் சான்றிதழ் வேண்டித் தலைமை ஆசிரியருக்கு விண்ணப்பம்

அனுப்புநர் :
எ. மதிவாணன்,
ஒன்பதாம் வகுப்பு 'ஆ' பிரிவு,
இளங்கோ உயர்நிலைப்பள்ளி,
மதுரை – 20.

பெறுநர் :
தலைமை ஆசிரியர்,
இளங்கோ உயர்நிலைப்பள்ளி,
மதுரை – 20.

பொருள் : மாற்றுச் சான்றிதழ் கோருதல்

நான் நமது பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு ஆ பிரிவில் பயின்று வருகிறேன். என் தந்தை அரசுப் போக்குவரத்தில்பணியாற்றி வந்துள்ள நிலையில் அவருக்கு ஆண்டிப்பட்டியில் பணி மாறுதல்கிடைத்திருக்கிறது. ஆகவே அங்குள்ள பள்ளியில் சேர வேண்டியுள்ளதால் எனக்கு மாற்றுச் சான்றிதழை வழங்குமாறுபணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் பணிவுள்ள மாணவன்
எ.மதிவாணன்

தேதி :
இடம் :

பெற்றோர் கையொப்பம்

Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com